Registeredta the G. P. O. as a Newspaper

வாரப் பதிப்பு விலை சதம்15

சுதந்திரன்
ESUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 9 மன்மத ஞ ை தை மாதம் 2 திகதி 15-1-56 ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் பிறை 1 இதழ் 33

BEREC
TRADE MARK

ப்ளாஷ் லைட் பெரெக் பட்டரிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டவை.

அதிக பிரகாசமான வெளிச்சத்தையும் நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

ஒரு பிரபல யு. என். பி. தமிழருக்கு உயர் பதவி!

அரசாங்க ஊழியர் மீது விசித்திரமான குற்றச் சாட்டுகள்

பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டு வரும் பரிதாபம்

(நமது நிருபர்)

அரசாங்க சேவையில் ஒழுக்கக் கோட்பாடுகளை கண்டிப்பாக கடைப்பிடிக்கவேண்டும் என்ற சாட்டின் பேரில் பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த குற்றச்சாட்டுகள் விசித்திரமானவையாகவும், வேடிக்கையானவையாகவுமிருக்கின்றன என்று கூறப்படுகிறது. இது சம்பந்தமாக நாம் பல வட்டாரங்களில் 'உளவு' செய்ததிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள தகவல்களைத் தருகிறோம்.

ஒரு பெண்ணுடன் 'உறவு' வைத்திருந்ததாக ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அவர்குறிப்பிட்ட பெண்ணை பின் மணம் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

வருமான வரி காரியாலய அதிகாரி ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் அவரது பள்ளிக் கூட நண்பர் ஒருவரிடம் பணம் கைமாறியிருந்தார் என்பது தான் வேலைநீக்கத்திற்கு காரணமாம். அதிகாரியின் நண்பர் வருமானவரி கட்டும் ஒரு நபர்.

வைப்பாட்டி வைத்திருப்பதற்காக ஒரு அரசாங்க அதிகாரி மீது குற்றம் சுமத்தப்பட விருக்கிறதாம். "வைப்பாட்டி வைத்திருக்கும் உம்மை ஏன் வேலைநீக்கம் செய்யப்படாது என்று காரணம் காட்டும்" என அவர் கேட்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சட்ட விரோதமாக குடியேறிய ஒரு நபரை வீட்டு வேலைக்கு அமர்த்தியிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஒரு அரசாங்க அதிகாரி வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். சட்ட விரோதமாக குடியேறிய நபரை நாடு கடத்திய உடனேயே குறிப்பிட்ட அதிகாரி வேலை நீக்கம் செய்யப்பட்டார். தனது நிரபராதித் தன்மையை ஒப்புவிப்பதற்கு அவருக்கு அவகாசமளிக்கப் படவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மனுபரிசீலனை செய்யப்படுவதற்கு முன்னமேயே இவை எல்லாம் நடந்தேறின.

ஒரு பதவி நியமனம் பற்றிய ஊழல்களை எடுத்துக் காட்டியதற்காக இராணுவ தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த ஒருவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். பதவி நியமனம் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க குறிப்பிட்ட அதிகாரிக்கு உரிமையில்லை என்று கூறப்பட்டதுடன், அதுபற்றி அவர் அனுப்பிய தஸ்தாவேஜுக்களுக்கு பிரதிகள் எழுத்தாக குற்றம் சாட்டப்பட்டு நடவடிக்கை

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு

ஓயாத இருமல், ஈளை-தொய்வு, (Asthma) சளிக்கட்டு, மூச்சுத் திணறல், பீனிசம், கக்குவான், மார்புவலி, தொண்டை ரணம் போன்ற கொடிய நோய்களுக்கென்றே பிரான்சில் (France) தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது இந்த அபூர்வ ஔஷதம். இரவு பகல் நித்திரையின்றி துன்புற்றோர் பலர் பூரண குணமடைந்திருக்கின்றனர் இந்த மருந்தினால்.

எங்கும் கிடைக்கும்.

உரிடனே வாங்கிச் சாப்பிடுங்கள் சலெட்ஸ் பெக்டோரல்

கேட்லாக் இனம்
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885.

தற்காலிகமாகக் கொடுத்து தேர்தலில் தமிழரை ஏமாற்ற திட்டம்

ஆலோசனைகள் முடிவு பெற்றால் அரசியல் திட்டத்தில் திருத்தம்

(சுதந்திரன் நிருபர்)

தமிழ் மக்களின் கண்களில் பொடி தூவும் நோக்குடன் அதி முக்கியமான ஒரு தேசியப் பதவியில் மாற்றம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்று நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து அந்தரங்கமான செய்தி ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது.

தமிழ் மக்களுக்கு விரோதமாக அரசாங்கம் இது வரையும் செய்து வந்த இன ஒதுக்கல் நடவடிக்கைகளை இதன் மூலம் மூடி மறைத்து தேர்தலின்போது வாக்குகளைப் பெறமுடியும் என்று ஆளும் வட்டாரங்கள் கருதுவதாக தெரிகிறது.

மேற்குறிப்பிட்ட பதவி மாற்றம் செய்வது சம்பந்தமாக உயர்தர வட்டாரத்தில் இரகசிய ஆலோசனைகள் நடந்து வருவதாக நம்பப்படுகிறது. சம்பந்தப்பட்ட பதவியிலுள்ள நபரை லீவு பெற்று போகச் செய்வதும், அந்த இடத்திற்கு ஒரு பிரசித்தி பெற்ற தமிழரை தற்காலிகமாக கடமையாற்றுமாறு அழைப்பதுவுமே இந்தத் திட்டமாகும்.

இதன் பின், தமிழர்களுக்கு எதிராக அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்றும் "பெருவாரி சிங்கள மக்களின் விருப்பத்திற்கு இணங்கி தனிச் சிங்களத்தை ஏற்றுக் கொண்டாலும் கூட அரசாங்கப் பதவிகளில், மற்றும் பொது வாழ்வில் தமிழர்கள் எந்தவிதத்திலும் புறக்கணிக்கப்பட மாட்டார்கள். இதோ இந்த உதாரணமே இதற்கு உத்தரவாதமளிக்கிறதே" என்றும் தனது தமிழ் பேசும் சில கூலிப் பிரச்சாரர்களைக் கொண்டு திட்டமிட்ட பிரச்சாரத்தை நடத்த யு. என். பி. முடிவு செய்துள்ளது என்று பேசிக் கொள்ளப்படுகிறது.

தற்காலிகமாக குறிப்பிட்ட பதவி வகிக்க இடமளிப்பது நாட்டின் சட்ட திட்டத்தில் திருத்தம் ஏற்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும்.

இது சம்பந்தமாக ஒரு முடிவு செய்யப் பட்டதும் அரசியல் திட்டத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மொழிப் பிரச்னையில் தமிழ் மக்கள் ஏகோபித்து யு. என். பிக்கு எதிராக எழுவார்கள் என்றும், நிலைமையைச் சமாளிப்பதற்கு இத்தகைய ஒரு நடவடிக்கை எடுத்தால் தமிழ் மக்களை ஒரு வேளை ஆசை காட்டி ஏமாற்றலாம் என்றும் அரசாங்கத் தலைவர்கள் கருதுகிறார்களாம்.

இன்தமிழ்ப்பால் பொங்க!

கட்டிளமை, பேராற்றல்,
கருணை, அறம், அன்பு
கலை, அறிவு, தொழில், அழகு
கல்வி, செல்வம் பொங்க
எட்டெட்டுத் திசைகளிலும்
இன் தமிழ்ப் பால் பொங்க
இதய மெலாம் பொங்க அருள்
இறைவனடி தொழுவோம்

'பரமஹம்ஸதாஸன்'

இரண்டாவது பதிப்பு விற்பனையாகிறது!

★ இலங்கைச் சரித்திரத்தின் களங்கமற்ற படப்பிடிப்பு
★ எவரும் இதுவரை எடுத்துச் சொல்ல முன்வராத துணிகர முயற்சி

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்....

★ தாய்மொழியின் பெருமையையும்—தன் இனத்தின் தகைமையையும் மறந்து, கண்டதேகாட்சி, கொண்டதே கோலமென காலங் கழிக்கும் தன்மானமற்றவர்களுக்குச் சரியான சவுக்கடி.
★ இந்நாட்டில் ஏகபோக உரிமை செந்தமிழருக்கல்ல — சிங்களவர்களுக்குத்தான் என்று சிறுமதி பேசி செந்தமிழை சீரழிக்கும் செப்பிடுவித்தைக் காரர்கட்கு ஓர் அதிரடி வேட்டு.
★ உண்மைச் சரித்திரத்தைப் படைக்காது திரையிட்டு மறைக்கும் ஜி. ஸி. மெண்டிஸ் B.A., Ph.D., எஸ். எப். டி. சில்வா, எஸ். ஏ. பேக்மன் M. A. ஆகியோருக்கு நல்லதோர் விளக்கம்.
★ கால வெள்ளத்தால் வாரியடிக்கப்படாத—சுத்தி முனையில் வெட்டி வீழ்த்த முடியாத — கன்னித் தமிழின் பெருமையைக் குறைக்க வந்த காக்கை வன்னியன் பரம்பரையினருக்கு ஓர் பாடுங்குத்து.
★ பெற்ற தாய் சோற்றுக்கின்றி பிச்சையெடுக்கையில் — ஏழடுக்கு உப்பரிகையில் தேன் நிலவைப் பருகி — தென்றலைச் சுவைத்து — செந்தூரப் பொட்டழகியின் கொவ்வைக் கனி இதழிலே குவலயத்தைக் காணும் கோடரிக் காம்புகளுக்கு வெடிகுண்டு.
★ கொம்புத்தேனில் தோய்த்தெடுத்த பலாச் சுளையைப்போல் — பால்நிலவில் மலர்ந்து மணம் பரப்பும் பவள மல்லிகையைப்போல்-கற்கண்டுத் தமிழில்-தேன் கரும்புச்சாறில்-மங்கி மறைந்து போன மாண்புசேர் இலங்கை வளநாட்டின் உண்மை உருவைக் கண்முன் தருகிறார்

முன்னாள் "சுதந்திரன்" துணை ஆசிரியர்
செ. இராஜதுரை.

அழகு தமிழ்! அமுத நடை!!
ஆராய்ச்சிப் புதையல்!!
உங்கள் பிரதிகளுக்கு இன்றே எழுதுங்கள்.
விலை சதம் 50. வியாபாரிகளுக்கு கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:
தமிழ்ப்பண்ணை
மட்டக்களப்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உழவும் தொழிலும்' உவகை கொள்ள கொண்டாடும் இன்பப் பண்டிகை பொங்கல்

பொங்கும் பொங்கல் புத்துலகம் சமைக்கும் புதுமைப் பொங்கலாக வேண்டும்

இழுக்கும் எருதுக்கும்-கீழிக்கும் கலப்பைக்கும் பூஜை! ஆலை உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் உழவனுக்கு?

ஒரு நாள் இன்பம் மட்டும் போதாது அது வாழ்வின் நித்தியமாக வேண்டும்

'தைப்பொங்கல்' தமிழர் திருநாள், கட்சிகளாலும் கொள்கைகளாலும் மாறுபட்டு விளங்குவர் எனினும் தமிழர் அனைவரும் ஒருமுகமாக ஏற்றிப் போற்றிக் கொண்டாடும் தினம் தைப் பொங்கலேயாகும். திரை கடல் ஓடிய தமிழர் பரம்பரையினர் இன்றும் உலகின் பலபாகங்களிலும் பரவியிருக்கின்றனர் ஆகையால் அங்கெல்லாம் இத்திருநாள் பெருநாளாகக் கொண்டாடப்படும் என்பதில் ஐயமில்லை.

இயற்கை எழில் சிறந்து விளங்கும் இனிய காலத்திலேயே இப்பண்டிகையைக் கொண்டாடுகின்றனர் தமிழர். நீர் நிரம்பிய வாவிகள் ஆங்காங்கே நீண்டு கிடக்கும் இளந்தென்றல் குளிர்ந்தடிக்கும் நிழல் பரப்பும் பச்சைப் பசுந் தளிர் மரங்கள் குடை பிடித்தாற்போன்று விரிந்து நிற்கும் விண்ணின் கார் நிறப் போர்வையும் மண்ணின் மயக்கும் எழிலும் கண்களைக் கவரும் இனிய காலமே பொங்கல் நிகழும் காலமாகும்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ நித்தம் நிலத்தோடு பாடுபட்டு கலப்பையும் கையுமாகக் கடும் பணியாற்றிய கமத் தொழிலாளியின் நெஞ்சம் எம்நீர நாட்டின் பஞ்சப் பிணி போக செங்கதிர்ச் செல்வனுக்கு அஞ்சலி செய்தல்போல சேனுயர்ந்த செந்நெற் கதிர்கள் தலைதாழ்த்தி 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று வணங்கி நிற்கும்.

பொங்கும் இன்பம் தரும் பொங்கல் திருநாளிலே தமிழர் மனைதொறும் மங்கள ஒலிகள் முழங்கும். இல்லறத் தலைவியர் இளங்காலையில் எழுந்து நீராடிக் குழல் முடித்துப் பூச்சூடிப் பொட்டிட்டுப் புதிய ஆடை புனைந்து புதுப் பொங்கலுக்குப்புறப்படுவர். முற்றத்தை மெழுகி மூவண்ணக் கோலமிட்டு, மாவிலைத் தோரணம் மாட்டிப் பூரண கும்பங்களும் குத்துவிளக்குகளும் நிறை குடங்களும் ஆகிய அலங்காரங்களின் மத்தியில் புதுப் பானை ஏற்றிப் பசும் பாலும், பச்சைப் பருப்பும், செந்நெல் குற்றிய அரிசியும் இட்டுப் பொங்குவர், சிற்றாடை கட்டிய இளஞ்சிறுமியர்கள் இங்கும் அங்கும் எங்கும் ஓடி ஆடிக்களிப்பர். அக்காலத்திலே குரவைக் கூத்தாடி மகிழும் வழக்கம் இருந்தது. இன்றோ வானைப் பிளக்கும் வெடிகளும் காதைத் துளைக்கும் வெடிகளும் கண்ணைக் கவரும் வாணங்களுமே மக்களுக்கு விளையாட்டுகள். இவ்வித கோலாகலங்களுக்கிடையே இன்பப் பால் பொங்கும். 'பொங்கலோ பொங்கல்' என்று பெண்மணிகள் வாழ்த்துவர். கூடியிருக்கும் யாவர் உள்ளங்களும் பொங்கும் அன்பினால் இறைவழிபாட்டில் இரண்டறக் கலந்து நிற்கும். இதன் பின்னர் அனைவரும் ஒன்று கூடி உண்டு மகிழ்வர், பலரையும் கண்டு கதைத்துக் களிப்பில் மூழ்குவர். எங்கும் இன்பம், இன்பம், என்றே எதிரொலிக்கும். பொங்கற் புதுநாளையடுத்து மாட்டுப் பொங்கல் நடைபெறும் மாடு மனிதனுக்கு இன்றியமையா நன்மைகள் பல தரும் ஒரு வீட்டு மிருகம். விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் ரூக்ரர் (Tracter) போன்ற நூதன யந்திர வசதிகள் இல்லாத அந்தக் காலத்திலே மாடுகளின் உழைப்பு இல்லையேல் மனிதன் நெல்லையும் வயலையும் கண்டிருக்க முடியாது. இழுக்கும் எருதுகள் மட்டுமன்றிப் பால் தருகின்ற பசு மாடுகளும் மக்களுக்கு நலம் பயப்பனவாகும். யாம் உண்ணும் உணவுப் பொருட்களில் சத்து மிக்கதுபால். அதிலும் பசும் பாலே சிறந்ததெனக் கருதப்படும். ஆகவே மனிதனுக்கு மகத்தான சேவை செய்யும் மாடுகளுக்கு விழா கொண்டாடுவது தமிழனின் விரிந்த மனப் பண்பையன்றே விளக்கி நிற்கின்றது.

மாட்டுப் பொங்கல் மாலையில் தொடங்கும் அருகாமையில் அமைந்த குளங்களிலே அவற்றைக் குளிப்பாட்டிக் கொம்புகளில் குளிர் மலர் மாலைகள் மாட்டிக் கழுத்திலே சங்கு சலங்கை சிறிய மணி போன்றவற்றைக் கட்டி அழகு செய்வர். காளை மாடுகள் வாலை உயர்த்தி உற்சாகப்படும் கன்று காலிகள் துள்ளிக் குதிக்கும் பசு மாடுகள் வெகுண்டடிக்கும் சினவெடிகளும் சிறுவர் கொம்மாளமும் சித்திரப் பொங்கலும் அவைக்குப் புதியன அல்லவா? பொங்கிய சோற்றைப் பிரித்து அம் மாடுகளுக்கு ஊட்டுவதில் மக்கள் ஆனந்தம் அடைவர். அதன் பின்னர் திறந்த வெளிப்பரப்பிலே காளை மாடுகள் பூட்டிய வண்டில் ஓட்டம் என்றும் வாண வேடிக்கை என்றும் விதவிதமான விளையாட்டுகளை நடத்துவர். மக்கள் கூட்டம் பொங்கும் உவகையால் தங்கள் தங்கள் சுற்றத்தாரோடு வந்து அத்திறந்தமைதானத்தைச் சுற்றி வளைந்துவிடுவர். பின் கேளிக்கைகட்கும் குதூகலத்துக்கும் கேட்க வேண்டுமா?

ஏழை என்றும் எளியவர் என்றும் பாகுபாடின்றி எங்கும் பொங்கல் இனிது நடைபெறும் எங்கும் மகிழ்ச்சி நடமிடும். எங்கும் எவ்விடத்தும் இன்பம்தான், ஆனால் எங்கும் நிலவும் இவ்வின்பம் என்றும் நிலைத்து நிற்குமா? ஆண்டுக்கு ஒருநாள் கொண்டாட்டம் வாழ்விலே ஒரு நாள் மகிழ்ச்சி என்ற நிலைமை மாறி இன்றுபோல் என்றும் இன்பமாய் இல்லம் தோறும் செழிக்க வேண்டாமா? இதற்குக் கமத் தொழில் அபிவிருத்தி அதி தீவிரமாக முன்னேற வேண்டும். பிறநாட்டவரிடம் கஞ்சிக்குக் கையேந்தி நிற்கும் இழிநிலை மாற வேண்டும். தாழாண்மை உடைய வேளாண்மைச் சிறப்பின் தகமையை மறந்த மக்கள் மீண்டும் உணரத் தலைப்பட வேண்டும். ஆம்! இன்று நமது நாட்டிலே கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவது விரும்பத்தக்கது. மக்களுட் சிலர் தமது கடும் உழைப்பினால் காடுகளாகக் கிடந்த வன்னிப் பகுதிகளின் கட்டைகள் பிடுங்கி வெட்டிக் கொத்திக் கழனிகளாக்கி வருகின்றனர். இன்னும் பதவி என்னும் பட்டம் என்றும் பரதவித்து ஈற்றில் பரீட்சை என்னும் பயங்கர பிசாசிடம் பல்லாண்டுகள் அவதியுறுமல் கல்விச்சாலைகளே உதறித் தள்ளிக் கமத் தொழிலிலே சதமெனக் குதிக்கும் இளம் மாணவ மாணவிகளின் மனமுவந்த செய்கையும் மகிழ்ச்சியைத் தருவதாகும். இறைவன் அவர்க்கு எல்லாம் நெடிய வாழ்வையும் நிறைந்த செல்வத்தையும் நீடிய இன்பத்தையும் அருளல் வேண்டும் என்று நித்தலும் கைதொழுதேற்றுவோம்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அதன் வளம் செழித்தால் மட்டும் போதாது. அந்நாட்டு மக்களின் மனம் செழிக்க வேண்டும். உயர்ந்த மனிதப் பண்புகள் தழைக்க வேண்டும். உண்மையும் நேர்மையும் உயர்ந்த பண்புகள் என்று உதட்டளவில் உறவாடுதல் போதாது. உள்ளம் உணர வேண்டும். உணர்ந்தபடி நடக்க வேண்டும். மக்கள் அனைவரும் செந்தண்மை பூண்டொழுக வேண்டும்.

இன்று நமது நாட்டிலே பொய்மையும் களவும் வஞ்சமும் கயமையும் இன்னும் பிற வேண்டாத குணங்களும் கூத்திடுகின்றன. இவையாவும் ஒழிந்தழிய வேண்டும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் இப்பொங்கற் புதுநாளிலே நமது மனசுகளையும் வாக்குகளையும் புனிதமாக்கிக்கொள்வோம் என உள்ளத்தில் தெள்ளியராவோம். இவ்விடத்தில் தக்கோரும் மிக்கோரும் போற்றும் தவயோகி சுத்தானந்த பாரதியாரின் இன் தமிழ்க் கவிதை ஒன்றை நினைவுகூர்தல் பொருத்தமுடையதாகும்.

'உண்மையாலே உழுவோம்-மனதில்
உயர்ந்த நினைப்பை நாடுவோம்
தண்ணீராகும் பொறுமை-மனம்
தழைக்கப் பாய்ச்சுவோமே
பொய்க்களையைப்பிடுங்கி-எப்
போதுங் காவல் காத்து
மெய் யறிவாம்வேலி-யிட்டால்
விளையும் கடவுளின்பம்

"புனிதம்"

நிலமெனும் நல்லாள்

அறிஞர் கி. ஆ. பெ. விஸ்வநாதம்

"இலமென்றசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள்
நகும்"

என்பது திருக்குறளில் ஒரு குறள். இது உழவு என்னும் தலைப்பில் உள்ளது.

பண்புடைமையை, நாணுடைமையை, குடிப்பெருமையைக் கூறியபின்னும், வறுமையை, இரவை, இரவச்சத்தை, கூறுவதன் முன்னும் உழவைப்பற்றிக் கூறியிருப்பது நயமுடையதாகக் காணப்படுகிறது.

உழவுத் தொழில் சிறப்புடையது! உலகம் உழவர் பின்னே செல்லக் கூடியது. உழுவார் உலகுக்கு அச்சாணி! உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்! உழவர் கைமடங்கில் உலகில் வாழ்வில்லை! என்றெல்லாம் கூறியபின் இறுதியாகக் கூறிய குறள் இது!

உழவுத் தொழில் சிறந்திருந்தும் அதனைச் செய்யாது சோம்பித் திரியும் மக்களின் இழிநிலையை இக்குறள் அருமையாக விளக்கிக் கொண்டிருக்கிறது.

எம்மிடம் எப்பொருளுமில்லை என்று கூறி சோம்பலும் வறுமையும் கொண்டு வாடியிருக்கும் மக்களைக் கண்டு நிலம் நகைக்கும் என்பது இதன் பொருள்.

எமக்கு எத்தொழிலுமில்லையே! என்று ஏங்கித் திரியும் வேலையில்லாத் திண்டாட்டக்காரர்களைக் கண்டும் நிலம் நகும் என்பதும் இக்குறளின் கருத்தாகும்.

இப்பரந்த உலகில் நிலங்கள் பலவிருந்தும் அதனைத் திருத்தி, உழுது விதைத்து, உண்டு வாழாது வீணாக வறுமையால் வாடி, வருந்தி வாழ்கின்ற மக்களைக் கண்டால் நிலம் நகைக்கும் என்று இக்குறள் கொட்டி முழக்குகிறது.

வள்ளுவர் வாழ்ந்த அக் காலத்தில் எவரும் சோம்பியிருப்பதில்லை என்ற வரலாறு ஒன்றைக் "காணின்" என்ற ஒரு சொல் சொல்லிக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழுங்கள்.

"இலன்" என்று ஒருமையிற் கூறாமல், "இலம்" என்று பன்மையிற் கூறியிருப்பதிலிருந்து எங்கேனும் ஒரிருவர் காணப்பட்டாலும் சோம்பேறிகளே பெருந்தொகையினராகக் காணமுடியாது என்ற கருத்து வலியுறுத்தப்படுவதாகத் தெரிகிறது.

"நகும்" என்ற சொல்லினைக் கொண்டு அதை மகிழ்ச்சிச் சிரிப்பு எனக் கொள்வதற்கில்லை. அது ஒரு ஏளனச் சிரிப்பு என்பதை இக்குறள் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருக்கிறது.

உழைத்து உண்டு வாழ நிலங்கள் இருக்கின்றபொழுது ஒருவன் தனக்குப் பொருளில்லையென்றுவது, வேலையில்லையென்றுவது கூறிக் கொண்டு வறுமை வாழ்வு வாழ்வது இழிவு! அது ஏளனத்திற்கு உரியது! என்பது இக்குறளின் முடிவு!

அத்தகைய இழிந்தவாழ்வு வாழும் மக்களைக்கண்டு நல் வாழ்வு வாழும் மக்கள் நகைப்பார்கள் என்று கூறினால், நன்மக்கட்கும் பழி வந்துவிடக் கூடும். ஆதலின் அதை விடுத்து இறுதியாக அந்த நிலமே நகைக்கும் எனக் கூறியிருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது.

"நிலம் நகும்" என்பதிலும் கூட நிலத்தை ஒரு பெண்ணாக உவமித்து நிலப் பெண் சிரிப்பாள் என்றுகூறி வள்ளுவரும் அந்த நகைப்பில் பங்குபெற்று நகைப்பது நமக்கும்கூட நகைப்பை உண்டாக்கி விடுகிறது.

ஏன் மகளுக்கு தன்மானத்தையூட்டும் ஒரே வழி உன் செயலைக்கண்டு பெண் பிள்ளை சிரிப்பாள் என்பது தான் என்பதை வள்ளுவர் அக்காலத்திலேயே அறிந்து இக்குறளில் புகுத்தியிருப்பது நமக்கு பெரும் வியப்பை அளிக்கிறது.

பெண் மக்களிலும்கூட கெட்ட பெண்கள் அல்லாத நல்ல பெண்களே எவ்வி நகையாடுவர் என்பதை "நல்லாள் நகும்" என்ற சொற்கள் நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

"நல்லாள்" என்ற சொல்லிற்கு நலமுடையவள், அழகுடையவள், ஒழுக்கமுடையவள் என்பதோடு "இல்லாள்" என்னும் பொருள் கொள்ளலாம். இக்குறளுக்கு முன்னுள்ள குறளில் இல்லாளின் ஊடிவிடும் என்றார். இக்குறளில் இல்லாள் நகைத்துவிடுவாள் என்று கூறுகிறார்.

தன்னைத் தழுவி மகிழ்ந்து வாழ விரும்பாத கணவனைக்கண்டு இல்லாள் வெம்பி, உளம் புழுங்கி, குறுநகை கொள்வதுபோல, நிலமும் தன்னைத் தழுவி, உழுது, விதைத்து உண்டுவாழ விரும்பாத ஆண்மகனைக் கண்டு நகையாடும் என்பது பொருளமையுள்ள ஒரு உயர்ந்த எடுத்துக்காட்டு ஆகும்.

"நகும்" என்பதோடு வள்ளுவர் விட்டுவிட்டதிலிருந்து தன்னைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத ஆண்மகனைக்கண்டு நிலம் நகைப்பதோடு விட்டுவிடும் என்பதும், அவ்வாறே தன்னைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத கணவனைக் கண்ட நல்லாளும் நகைப்பதோடு விட்டுவிடுவாள் என்பதும் பெறப்படும். இது பெண் மக்களின் தரத்தையே

(10²ம் பக்கம் பார்க்க)

"ரெனி"

மூலிகைப் பலவினம், நரம்புப் பலவினம், மறதி, மயக்கம், நித்திரை பங்கம், இந்திரிய விகிதம், மூலச்சூடு, திரேக வரட்சி, உஷ்ணம், ஊரல், தடிப்பு, சொரி, உடம்பு கைகால் நடுக்கம், இருதயத் துடிப்பு, பித்த மயக்கம், வயிற்று நோவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களை நீக்கி இரத்தத்தையும் சுத்திசெய்து தாதுவையும் கட்டுப்படுத்தும்.

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி வைத்தியசாலை

201, செட்டியார் தெரு, கொழும்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல: 21-22.

இவைகளின் சரியான விடை 22-1-56 அன்று சுதந்திரனில் பிரசுரிக்கப்படும்.

இவ்விரண்டிலும் பரிசு பெற்றோர் விபரம் 29-1-56 அன்று சுதந்திரனில் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் நிறைவுறுது தற்கொலை செய்யும் நிலைக்குப் பெற்றோர் காரணஸ்தரே யல்ல

'வான்கோழி ஆட்டம்' போன்ற கருத்தும் பண்புமில்லாத காதலும் ஒழிய வேண்டும்

டென்னிஸன் என்ற ஆங்கிலக் கவி சொன்னது போல காதலிக்காமல் வாழ்வதைக் காட்டிலும், வாழ்க்கையில் ஒரு முறையாவது காதலித்து அதை இழந்து விடுவது மேலானது என்பதை நாம் பெரிதும் ஆதரிக்க வேண்டும். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாம் கருத்தை ஆராயும் போது; ஒருவன் அல்லது ஒருத்தி காதலில் ஈடுபடலாம். ஆனால் அந்தக் காதல் முறிவுபட்டு ஈடேறாது போகும்போது அதற்காகத் தற்கொலை செய்துகொள்ள எத்தனிக்கக்கூடாதென்பது தெரிய வருகிறது.

காதல் கைகூடாமல் விடுவதற்கு பெற்றோர்தான் காரணமென்று கருத்து தெரிவித்தவர்கள் பலரிருக்கிறார்கள். பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களை வயது வந்ததும் நிருமணம் செய்து வைத்து மகிழ்வதற்கு எந்த தாயாயிருந்தாலென்ன தகப்பனாகஇருந்தாலென்ன விரும்புகிறார்கள். இது இயற்கை. இந்த நிலையை தகுதியைக் கவனியாது மருட்சி காரணமாகவும். பருவக் கோளாறு காரணமாகவும் தமது பிள்ளைகள் 'காதலை' ஒரு ஆதாரமாகக் காட்டி அவர்களின் எண்ணப்படியே மணம் செய்துகொண்டு, பின்னர் குடும்ப வாழ்வு சீரழிந்து அவர்களும் வாழ்வளிந்தவராகளாக வருவதை எந்தப் பெற்றோர்தானும் விரும்பமாட்டார்கள். எனவே அந்தஸ்து, ஜாதி, மத ஒன்றுபாடு இருக்கக்கூடியதாக இருவருகிடையில் காதல் தோன்றினால் அது இனிதே நிறைவேறும். பெற்றோர் இந்தவிதமான காதலர்களின் பாதையிலே குறுக்கிடவும்மாட்டார்கள்.

ஒருவன், அல்லது ஒருத்தியின் உள்ளத்திலே காதலென்னும் எண்ணம் ஏற்படும் சமயத்தில் அவர்கள் தமது நிலையைப்பற்றி ஏற்கனவே அறிந்துகொண்டு பின்னர் காதல்கொள்ளுதல் சிறந்தது.

மறுபுறம் ஏழைகள் தமது தகைமைக்கேற்ப காதல் வாழ்வு நடத்த விரும்பினால் அந்தக் காதலும் செவ்வனே நிறைவேறும். இப்படியல்லாமல் ஏற்படும் காதலில் இடையூறு ஏற்படும். ஒரு கோடீஸ்வரன், அல்லது பெரிய அந்தஸ்தில் திகழ்த்தவன் தனது மகளோ அல்லது மகனை ஒரு ஏழைப் பையனையோ அல்லது பெண்ணையோ காதலென்ற ஒன்றுக்காக ஆதரவு கொடுத்து அவர்களை மணம் செய்து வைக்க அவன் மனம் ஒருப்படாது. எவரது நிலையும் இப்படியே இயற்கையாக அமைதல் இயல்பு. தனது பிள்ளை சிறப்புடன் வாழ விரும்பும் இத்தகையதந்தை தன் பிள்ளையின் வருங்கால வாழ்வில் சிரத்தைகொண்டு அவர்களின் காதல் விவகாரத்தில் குறுக்கிடுவதும் இயல்பே. எனவே காதல் சரிவராதபோது 'காதல்' என்பது சுத்த முட்டாள்தனமான அபிப்பிராயமாகும்.

இன்னுமொரு ஆங்கிலக் கவிதனது கருத்தைச் சொல்லுகிறார் "காதலென்ற விவகாரத்தைப் பற்றி எதுவுமே கேள்விப்படாவிட்டால் ஒருவரிடத்தில் காதலிக்கும்எண்ணமே தோன்றமாட்டாது" இதிலிருந்து இப்பொழுது நடைபெறுகின்ற 'காதல்கள்' வெறும் வான்கோழி ஆட்டங்கள்தான் ஆதி காலத்திலே காதல் மலர்ந்தது அது தெய்வீகமானதாகவே நிலைத்தது ஆனால் இன்றைய சூழ்நிலை காதல் ஆதரிக்கக்கூடாதென்ற நிலைமையிலுள்ள காலம். கண்டதும் விருப்பம். அதுக்கடுத்தது 'கடிதம்' பின்னர் காதல் மலர்ச்சி, கைகூடாதபோது தற்கொலை. இது இன்றைய நிலைமை காதலர்களின் எண்ணப்படியே விட்டு பெற்றோர் வாய்பொத்தி நின்றால் உலகில் பிள்ளைகளுக்குப் பெற்றோர் அவசியமில்லை உலகமும் உருப்படாது;

கருக்குமேடை

மேலும், சர்வசாதாரணமாகவுள்ள வேறொரு கருத்தை ஆராய்வோம். (இந்தக் கருத்துக்கள் ஜாதி, மத, அந்தஸ்து பேதத்தை ஆதரிப்பதாகக் கொள்ளப்படுதல் கூடாது) ஒரு பெரிய அந்தஸ்திலுள்ள பெண்ணை ஒரு ஏழை காதலிக்கிறான். காதல் கைகூடாது. திருமணத்துக்கு வழிகிட்டாது. என்றறிந்ததும் அந்தப் பெண் இந்த ஏழையுடன் ஓடிவிடுகிறாள். இறுதியில் நடக்கிறது என்ன? தன்னையே தஞ்சமென்று எண்ணி தனது செல்வ மெல்லாவற்றையும் துறந்து தன்னுடன் வந்தவளிடம் தனது காம இச்சையைப் பூர்த்திசெய்து கொண்டு அந்தப் பெண்ணை அபலையாக்கிவிட்டு அவன் டிமிக்கி கொடுக்கிறான் இல்படியான நிலைமையிப் 'காதல்' யார் மீது பழிதீர்க்கிறது பாருங்கள். கட்டறுப்பட்ட மந்தைகள் போல் அவைகளின் எண்ணப்படியே நடந்துகொள்ளும் பிரகிருதிகள், மானம், மரியாதை, இவைகளுக்கு அஞ்சி இறுதியில் தற்கொலை செய்துகொண்டால் அதற்குப் பெற்றோர் எப்படிக் காரணமாகமுடியும்? பெற்றெடுத்து வளர்க்கும் பெற்றோரிடம் உண்மையாகவும், ஒழுக்கமாகவும் நடந்து வாழ்ந்திருட்பின் சாவு வர நியாயமில்லை.

எனவே, எப்படி ஆராயப்புகுந்தாலும், காதல் நிறைவேறுமைக்கு பெற்றோர் காரணஸ்தரல்ல.

இறுதிவரை ஒருத்தியை நான் காதலிப்பேன். திருமணமும் செய்வேன் என்ற உறுதியும், பருவமும் வரும்வரை காதல் விவகாரத்தில் எந்த இளைஞனும் ஈடுபடுதல் கூடாது. இதுவே எனது முடிவானகருத்தாகும்.

அம்பி பாக்கியநாதன்,
யாழ்ப்பாணம்.

காதற் தற்கொலைகளைத் தடுக்க பெற்றோரின் அறியாமையை ஓட்டுவதே வழி

மக்கள் பொருட்டு பல துன்பங்களையும்—கஷ்டங்களையும் அடைகின்றார்கள் பெற்றோர்கள். ஏன்? எதற்கு? எதிர்காலத்தில் மக்கள் மாண்புடன் வாழவேண்டும் எனும் நன்நோக்கம் கொண்டே.

ஆனால் தம் மக்கள் வேறு ஒரு சமயத்திலோ, சாதியிலோ உள்ள ஒரு பெண் மேல் அல்லது ஆண்மேல் காதல் கொண்டு விட்டால்-பெற்றோர் மக்களின் நலத்தை சிறிதேனும் சிந்திக்கமாட்டார்கள். அணுவளவேனும் ஆராய்ச்சி செய்யமாட்டார்கள். பெருமையையும் இழந்து விடுவார்கள். விட்டுக் கொடுக்கவும் மாட்டார்கள்; அதிலும் வைதீகத்தில் ஊறிய பெற்றோர்களானால் சொல்லவும் முடியாது. தங்கள் குலம், குடும்பக் கௌரவம், சாதி, சமயம் அத்தனையும் போய்விட்டதே என அவஸ்தைப்படுவார்கள். அதுமட்டுமல்ல காதலர்களுக்கு முன் தாங்களே தற்கொலை செய்யப்போவதாகவும் பயமுறுத்துவார்கள்.

பெற்றோர்கள் இப்படி நடப்பதற்கு மூலகாரணம்-போதிய கல்வியறிவு இல்லாமையே. பெற்றோர்கள், இலக்கியங்களிலும், கதைகளிலும், புராணங்களிலும் வருகின்ற காதலர்களை கட்டாயம் காணவேண்டும் அப்படிக்காணும்போது நேரடியாக தங்கள் குடும்பத்தில் தோன்றும் காதலர்களுக்கு வாழ இடம்உண்டு காதலர்களை வாழ விட்டுக்கொடுக்கும் விரிந்தமனப்பான்மை அவர்கள் நடுவில் தோன்றும் காதலர்களின் தற்கொலைகளை, கல்வியின் துணை கொண்டுதான் பெற்றோர்கள் அகற்ற முடியும்.

கல்வியறிவுள்ள பெற்றோர்கள் ஒரு போதும் காதலர்கள், தங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்; என்பதை எண்ணமாட்டார்கள்-எதிர்பார்க்கமாட்டார்கள் பெற்றோர்கள், காதலர்கள் மேல் தமது என்ற முடிவுக்கு வரமாட்டார்கள்.

சர்வாதிகாரம் செலுத்தினால் அவர்கள் காணும் பலன்:- மகேஸ்—மீரா தான் பதில் சொல்ல வேண்டும்.

(13-ம் பக்கம் பார்க்க)

தற்கொலைகளால் நெறி கெட்ட சமூகத்தை திருத்திவிட முடியாது

கலியாணம் என்பது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கருத்தொருமித்து முழுவிருப்பத்துடனும் ஏற்றுக்கொள்ளும் ஒரு குடும்ப பந்தனம். பருவமடைந்த, வயதுவந்த, விபரமறியும் ஆண் பெண்களே கலியாணஞ் செய்துகொள்ளுபவர்கள். அவர்கள் தங்களுக்குப் பெற்றோரால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் ஆடவனை அல்லது மங்கையை விரும்பாவிட்டால் பூரண சுதந்திரத்துடன் பெற்றோரை எதிர்க்கலாம். எதிர்ப்பு விஷயத்தில் ஆண்கள் பெண்களிலும் வெற்றிபெற்று விடலாம். ஏனெனில் தம் இளம் புத்திரியை, பணத்திற்கும், குலத்திற்கும் அடிமைப்பட்டு. நிர்ப்பந்தப்படுத்தி மணஞ் செய்துவைக்கும் பெற்றோரும் இக்காலத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் இது விஷயத்தில் சகிப்புத்தன்மையுடன் தங்கள் பிடிவாத குணத்தை நீக்கி இளக்காரத்தைக் கையாளவேண்டும். ஏனெனில் தங்கள் புத்திரிக்கு விருப்பமற்ற மணத்தை நிறைவேற்றிவைக்க விரும்பும் பெற்றோர்கள் மணக்கோலத்திற்குப் பதிலாகப் பிணக்கோலத்தைக் காணும் சந்தர்ப்பங்களும் ஏறபடுகின்றன. பழைய மூடக் கொள்கைகளை நிலை நிறுத்தும் நோக்குடன் தம் பிள்ளைகளின் வாழ்க்கையைப் பலிகொடுக்கும் மனப்பான்மை பெற்றோர்களிடத்திலிருந்து அறவே ஒழியவேண்டும். அப்போதுதான் காதலர்களுக்கேற்படும் நெருக்கடியும் குறையும். விருப்பமானவர்களை மணக்கும் சுதந்திரமும் கிடைக்கும். இஃது ஒருபுறமிருக்க;

இளம் காதலர்கள் தற்கொலை செய்கிறார்கள். எப்போது? எக்காரணத்தால்? இவைகளை ஆராயவேண்டும். காதல் என்பது காமவுணர்ச்சியைப் பூர்த்தி செய்யும் ஓர் கருவி அன்று. ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நன்கறிந்து செலுத்தும் மாசற்ற அன்புதான் காதல். உண்மைக் காதலர்களும் தற்கொலை புரிந்தார்கள். எச்சந்தர்ப்பத்தில், உடலுறவுள் சிக்கிய காரணத்தால் அவமானம் ஏற்படும் என்ற அச்சத்தினுல். உண்மைக் காதலர்கள் மணமாகும் வரைக்கும் ஒருபோதும் உடலுறவை விரும்பமாட்டார்கள். அன்றியும் எத்தனையோ காதலர்கள் இன்பத்தை மாத்திரம் அனுபவிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறபடியால் அதற்கு எதிர்ப்புவரும் தடைகள் ஏற்படும்போது சகிப்புத்தன்மையுடனும், மனத்தைரியத்துடனும் அதை எதிர்த்து உலகுக்குச் சரியான புத்தி புகட்ட முடியாத நிலையில், துன்பத்தைச் சகிக்கமுடியாது தற்கொலை வசப்படுகிறார்கள். "இறப்பு புலகிலாவது இன்பம் காண்போம்" என்ற எண்ணம் காதலர் மனத்தைவிட்டு அகற்றவேண்டும். வாழ்க்கை வாழ்வதற்குத்தான்; அதில் தோன்றும் துன்பங்களையும் சகித்து வெற்றி காண்பதையே இலட்சியமாகக்கொள்ள வேண்டும்; தற்கொலையில் நிம்மதியை விரும்பிய காதலர்களின் பாடத்தைக் கற்று மீண்டும் அதை ஒப்பிப்பதால் சமுதாயம் திருந்திவிடாது. உயிரோடிருந்து இறுதிவரையும் வெற்றியைச் சாதித்து அயலவர்க்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கி தக்க பாடத்தை பெற்றோருக்கும் அதன்மூலம் சமுதாயத்திற்கும் புகட்டி அதைத் திருத்தக் காதலர்கள் முன்வரவேண்டும்.

ஏ. எஸ். பிள்ளை,
மாரீசன் கூடல்,
இளவாலை.

தற்கொலையால் சமூகம் திருந்தாது என்ற வாதம் தவருனது

கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை போலாகாது தற்கொலை

காதல் அல்லது சாதல் என்ற முழக்கந்தான் எங்கு பார்த்தாலும். இது மன்மத வருடத்தின் கோளாறுபோலும். காதலிலும் உண்மைக்காதல் போலிக்காதல் என இருவகையுண்டு. ஆனால் உண்மைக் காதலர் தாம் வாழ்வில் பயன் காணவிட்டாலும் சாவிலாவது பயன் அடைவோம் எனத் தற்கொலை செய்து கொள்ளுகின்றனர். தற்கொலைக்கு காரணம் சமூகத்தின் அவசியமற்ற கட்டுப்பாடுதான். தற்கொலையால் சமூகம் திருந்தாது என்பது முற்றிலும் தவறு. ஒருவர் செய்த தவருல் அடையும் தண்டனையைப் பார்த்து மற்றவர்கள் திருந்துவது உலக இயற்கை. இல்லாவிடில் கொலை செய்த ஒருவனுக்குத் தண்டனையாக மரணதண்டனை விதிக்கிறார்கள். மற்றவர்கள் அம்மாதிரி கொலை செய்யாமலிருக்கத்தானே. எனவே காதலர்களின் தற்கொலை தமது நல்வாழ்வுக்குப் பயன்படாவிட்டாலும் மற்றவர்களின் வாழ்வாவது இன்பமாக இருக்கட்டுமே என்ற காரணம்தானே. எனவே தற்கொலையைச் சிலர் வாழ வழிதெரியாமல் தற்கொலை செய்கிறார்கள் என்றும் அமரத்துவம் அடையமாட்டார்கள் என்றும் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் வாழ்ந்துபடும் வேதனையிலும் [illegible] என்ற முடிவுக்கு வருகிறார்கள். இவர்கள் செய்வது சமூகக் கொடுமையல்ல. இவர்களது முடிவை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சமூகக் கட்டுப்பாடுதான் கொடுமை செய்கிறது; உண்மைக் காதலால் உந்தப்பெற்ற இரு இளம் உள்ளங்களை வாழ்த்தி நல்வாழ்வுக்கு வழி காட்டுவதுதான் சமூகத்தின் கடமை. பண்டைத் தமிழர் களவொழுக்கம், காந்தர்வ விவாகம் என்பவற்றின்படி நடந்திருந்தார்கள். அதை இன்றைய சமூகம் ஏன் மறுக்கிறது. அவ்வித வாழ்வு தமக்குக் கிட்டவில்லை என்பதால் வெறுக்கின்றது போலும் என்ன அநியாயம் இரண்டு இளம் உள்ளங்கள், துள்ளிக் குதிக்கும் பருவத்தினர் மண்ணோடு மண்ணாவதை வரவேற்கின்றது போலும் இச் சமூகம். காதலன் இருக்க காதலி இறப்பதும் காதலி இருக்கக் காதலன் இறப்பதும் போலிக் காதலர்களின் நிலையாகும். இது சமீபத்தில் நடைபெற்ற மீரா—மகேஸ்வரன் காதல்—சீலாவதி காதலுக்குக் கிட்டவும் வர அருகதையற்றவை. இவர்களின் காதல் தூய சிறந்த காதலாகும். இவர்களுக்குச் சமூகம் மனமுவந்து கைதூக்கி இவர்களின் இனிய வாழ்க்கையை மங்கா சோதியாகப் பிரதிபலிக்கச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட தூய காதலை புறுத்தலிய தொனிப்பொருளாகக் கொண்டுள்ளது நம் சமூகம்.

இந்த சமூகத்தை திருத்தாது, அதே சமூகத்தின் ஒரு பிரதி பலிப்பை மட்டும் தூற்றுவதால் நலன் விளையப் போவதில்லை.

சி. நடராசா
வானக்காடு
போகவந்தலாவ

இறுதிக் கட்டுரை

காதற் தற்கொலைபற்றிய கருத்து மோதல் விவாதம் அடுத்தவாரத்துடன் முடிகிறது. கருத்தமேடையில் பங்குபற்றிய நண்பர்கள் எழுப்பிய பிரச்னைகளை திரட்டி பதிலிறுக்கும் கட்டுரை எமது அடுத்த இதழில் வெளியாகும்.

—ஆ-ர்.

தமிழில் தபாற் கல்வி

★ ஆங்கிலம்
★ சிங்களம்
★ ஹிந்தி

ஆகிய ஆறு மாதங்களில் போதிக்கப்படுகின்றன.

G. C E.-கு உரிய
56 ஆங்கிலக் கட்டுரைகள் ரூ. 3-00
50 தமிழ்க் கட்டுரைகள் ரூ. 3-00

விவரங்களுக்கு எழுதுக:

S. KUMARASWAMY, B. A. (Cey)
SHANTI COLLEGE.
7 - 18th Lane, Colpetty.
COLOMBO - 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசா? தனியரசா?(8)

தனித் தமிழ் நாட்டிற்கும் சமஷ்டிதான் முதற்படி

சூரைப் பற்றையில் சீலையைப் போட்டால் மெள்ள மெள்ளத்தான் எடுக்க வேண்டும்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

1. ஒரு நாட்டில் பல வேறு இனத்தவர்கள், பல்வேறு மதத்தவர்கள், பல்வேறு மொழியினர்கள் இருந்தால்;

2. பூகோள ரீதியாக ஒரு நாடு மிகப் பரந்து விசாலித்ததாகவோ, அன்றி இயற்கையின் அமைப்பினால் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதாகவோ இருந்தால்;

3. ஒரு நாட்டு மக்கள் தங்கள் பூர்விகத்தில் தனித்தனியாகப் பிரிந்து தனித்தனி ஆட்சி அமைப்புகளையுடையவர்களாகவிருந்து இடைக்காலத்தில் ஒருமித்தவர்களாக்கப்பட்டிருந்தால்;

மேற்கூறிய மூன்று காரணங்களில் ஒன்றேனும் பலவேனும் இருந்தால் ஒரு நாடு சமஷ்டி ஆட்சியை நாடி நிற்கலாம் என்று சொல்லப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் முதலாம், மூன்றும் காரணங்கள் நூற்றுக்கு நூறுவீதமும். இரண்டாவது காரணம் குறிப்பிடக் கூடிய அளவிலும் இடம்பெற்றிருந்தலால் இலங்கை ஒரு சமஷ்டியாட்சியின்கீழ் வருவதற்கு சகலயோக்கியதாம்சங்களும் உடைய ஒரு நாடாக அமைகிறது.

இந்த யோக்கியதாம்சங்களோடு "சம்பந்தப்பட்ட மக்களில் யாராவது ஒரு பகுதியினர் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளவேண்டும்' என்ற ஆசையுடையவர்களாக இருந்தால் சமஷ்டி ஆட்சி தங்களைத் தாங்களே ஆள வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழரசுக் கட்சியார் தக்க காரணம் இல்லாமல் வெளியிடவில்லை. பல காரணங்களை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இன்றுவரை கூறிவருகிறார்கள். அவற்றுள் எல்லாம் மிக முக்கியமான காரணம் சோல்பரியின் ஒற்றையாட்சி அரசியல் திட்டம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு உதவாதது என்பதாகும்.

இலங்கையில் இன்று நின்று நிலவும் சோல்பரி ஒற்றையாட்சி அரசியல் திட்டம் சகல அரசியல் அதிகாரங்களையும் இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தினரான சிங்கள மக்களின் கையில் ஒப்படைத்துவிட்டு, சிறுபான்மை மக்களை பெரும்பான்மையினரின் தயவில் அடங்கி ஒடுங்கி வாழும் ஒரு கீழ்த்தரமான நிலையில் ஆழ்த்தி வைத்திருக்கிறது. ஒற்றையாட்சித் திட்டம் உயிரோடிருக்கிறவரை இந்த இழிநிலை சிறுபான்மை மக்களைவிட்டு ஒரு போதும் அகலப் போவதில்லை. எவ்வளவுதான் சிறுபான்மையினர் பெரும்பான்மையினருடன் ஒத்துழைத்தாலும்சரி எவ்வளவுதான் சிறுபான்மை மக்களின் தலைவர்கள் ஒன்றுபட்டு நின்று உரிமைகுரல் எழுப்பினாலும்சரி, நாட்டின் அரசியல் திட்டம் ஒற்றையாட்சித் திட்டமாயிருக்கும்வரை சிறுபான்மை மக்களுக்கு இந்த நாட்டில் மதிப்போ, உரிமையோ, சம அந்தஸ்தோ, அரசியலில் ஆதிக்கமோ கிடைக்கப் போவதில்லை. ஒற்றையாட்சித் திட்டம் அளிக்கும் உறுதுணையினால் பெரும்பான்மை மக்கள் எப்போதும் சர்வாதிகாரத்துவத்தோடுதான் நடந்து கொள்வார்கள். சிறுபான்மை மக்கள் எப்போதும் அடிமைத் தனத்தில்தான் சிக்கிக் கொள்வார்கள்.

இந்தத் துர்ப்பாக்கிய நிலையிலிருந்து விடுபடுவதற்கு அரசியல் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அடிப்படையாக வைத்து சமஷ்டி ஆட்சியைக் கேட்டு நிற்கிறார்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர்.

ஒத்துழைப்பதனால் இந்த அரசியல் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு போதும் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. சிங்கள மக்கள் கையில் சிக்கிவிட்ட அரசியல் அதிகாரத்தை உடைக்க வேண்டும். தமிழ்ப் பேசும் மக்களுக்கும் அரசியல் ஆதிக்கத்தில் பங்கு வேண்டும். இதை அடைவதற்கு வழி ஒற்றையாட்சியை ஒழித்துக் கட்டி தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளக் கூடியதாக நாட்டைப் பிரித்து, பிரதேச ஆட்சியுரிமையைப் பெற்று, தமிழரசை ஸ்தாபித்துக் கொள்வது தான் என்று தமிழ் அரசுக்கட்சியார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னபோது பலர் அவர்களை கேலி செய்தார்கள். [illegible] பேசுகின்றார்கள்.

அப்போது "தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள வேண்டும்" என்று தமிழரசுக் கட்சியார் வெளியிட்ட கருத்து பலஹீனமானதாகவும், அனுவசியமானதாகவும் தென்பட்டது. ஆனால் இன்றோ, மொழி விஷயத்தில் பெரும்பான்மையினர் காட்டும் சர்வாதிகார வெறி தமிழரசுக் கட்சியாரின் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறது. தமிழரசுக் கட்சியார் மாத்திரமல்ல; தமிழரசு கோருவது பைத்தியக்காரத்தனம் என்று கூறியவர்கள் கூட "தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் தனியாட்சி வேண்டும்" என்று கேட்கும் அளவிற்கு கோரிக்கை வலுப்பெற்றிருக்கிறது. எனவே "சம்பந்தப்பட்டமக்களில் யாராவது ஒரு பகுதியினர் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளவேண்டும் என்ற ஆசை" இப்போது தன்னை பிரதிபலிக்க ஆரம்பித்து விட்டதால் சமஷ்டி கோருவதற்கான நான்காவது காரணமும் பரிபூரணத்துவம் அடைகிறது.

ஐந்தாவதாக, "அதே சமயத்தில் அப்படித் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளக்கூடியதாக ஒரு பிரதேசமும் போதிய மக்கள் தொகையும் ஒருமித்து இருத்தல்" அவசியம்.

இலங்கையில் சுமார் 24 இலட்சம் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் சுமார் 20 இலட்சம் பேர் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இலங்கையின் மத்தியப் பகுதிகளிலும் ஒருமித்தவர்களாகவே வாழ்கின்றார்கள். இவர்கள் வாழும் பிரதேசங்களும் ஆட்சிநிர்வாகம் நடத்துவதற்குஏற்றதாக தொடர்புபட்டபிரதேசங்களாகவே அமைந்து விடுகின்றன. தமிழ்ப் பேசும் மக்கள் ஒருமித்து வாழ்வதாலும், அவர்கள் வாழும் பிரதேசம் தொடர்புபட்டுக் கிடப்பதாலும் ஒரு சமஷ்டி ஆட்சிக்கு ஏற்றபடி எல்லைப் பிரிவினை செய்வதில் எதுவித சிரமமும் இல்லை.

ஒரு தனியாட்சி நடத்துவதற்குப் போதியதான மக்கள் தொகையும், பிரதேசமும் இருப்பது உண்மையானால் ஏன் சமஷ்டியாட்சியை நாடி நிற்க வேண்டும்? தனியாட்சியை அமைத்துக் கொண்டால் என்ன? என்ற கேள்விகள் மேற்படி விளக்கத்தைத் தொடர்ந்து எழுகின்றன நியாயமான கேள்விகள்தாம்.

எடுத்த எடுப்பிலேயே தனியாட்சியை நாடி நில்லாமல் சமஷ்டியாட்சி யென்ற படியை நாடி நிற்பதற்கு தக்க காரணங்கள் இருக்கின்றன. அரசியல் துறையில் ஒரு காரியத்தைச் சாதிப்பதற்கு குறுமுட்டான பிடிவாதம் பயனளிப்பதில்லை. "ஐம்பதுக்கு ஐம்பது" என்ற குறுமுட்டான கோரிக்கை தகர்ந்து போனதற்கு அரசியல் சாகஸமின்மையே காரணமாகும். ஆங்கிலத்தில் அரசியல் சாகஸத்தை பல அரிய பதங்களினால் குறிப்பிடுகிறார்கள் Statesmanship, Political Leadership, Diplomacy, Political Strategy என்று அரசியல் சாகஸத்திற்கு பதப் பிரயோகங்கள் உண்டு ஒரு தலைவர் பெரியவாய் வல்லவராய் இருக்கலாம். சூராதிசூரர் என்று அவரைப்பற்றி மக்கள் கூட்டம் எண்ணி ஏமாறலாம்; அந்த தலைவரிடம் அரசியல் தீர்க்கதரிசனமும், அரசியல் சாணக்கியமும் இல்லையென்றால் அவர் எடுத்த காரியத்தில் வெற்றி காண முடியாது. அப்படிப்பட்ட தலைவர் எதிரிகள் விரிக்கும் வலையில் சிக்கி சீரழிந்து போகத்தான் வேண்டும்.

அரசியலில் ஒரு காரியத்தைச் சாதிப்பதற்கு பல படிகள் உள்ளன. அடக்கமும் நிதானபுத்தியும் உள்ளவர்கள்தான் சரியான படியைத் தேர்ந்தெடுத்து படிப்படியாக முன்னேறி இலட்சியத்தை அடைவார்கள் சில ஆத்திரபுத்தியுடைய அரசியல் கன்றுக் குட்டிகள் தேர்தலில் வெற்றி பெறுவதை

(13-ம் பக்கம் பார்க்க)

பொங்கல் பரிசு! பிந்தினால் கிடைக்காது! வாசகர்களுக்கு ஒரு நல்விருந்து! சகாய விலை!

	விற்கும் விலை	சகாய விலை
பாசக்கயிறு	-50	-30
மனைவியின் தோழன்	-75	-40
கல்கியின் கனவு	-50	-35
எங்கள் லட்சியம்	-15	-10
ஜாலக்காரி	1-50	1-00
தம்பதிகள்வாழ்க	1-00	-60
இலவுகாத்தகிளி	1-50	1-00
மேகமும்நிலவும்	1-50	1-00
இன்பம்பலவிதம்	-50	-35
இவர்தான்பார்	1-25	1-00
கல்கியின் விஷ	1-00	-75
தி. மு. க. வெற்றிமுழக்கம்	-25	-15
மஞ்சுளா	1-50	1-00
டைரக்டரானேன்	-50	-25
நான் உடைக்கும் சட்சி	-40	-20
திராவிடத்தில்வட நாட்டுப்பைத்தியம்	-40	-15
சொர்க்கவாசல் சிறப்பு மலர்	2-00	1-15
அண்ணுத்துரை	1-00	-65
தியாகமூர்த்திகள்	1-50	1-15
தங்க நிலையம்	1-50	1-15
பெட்ரோல் பங்க்	-75	-35
மூன்று பிரேதங்கள்	1-00	-70
மாஸ்கோ கடிதங்கள்	-50	-25
சிறுவர் நகரம்	-50	-25
நான் பெற்ற செல்வம்	-50	-25
நாட்டுப்புற டாக்டர்	-50	-25
வாழ்க்கைசுழல்	2-00	1-00
ஒட்டுமாஞ்செடி	-75	-25
அதலபாதாளம்	1-25	-75
பெண் இதயம்	-75	-40
நடுத்தெருமோகினி	-40	20
திறக்குள் கருணைநிதி	-50	-25
மாதுரிதேவி	-25	-15
ஆசைரோஜா	-75	-40

	விற்கும் விலை	சகாய விலை
பேசும் படம் மலர் 1955	2-50	1-25
பேசும் படம் மலர் 1954	5-50	2-50
பேசும் படம் மலர் 1953	5-50	2-50
செஞ்சித்தளபதி	1-00	-60
பகதூர் வெள்ளை	-75	-50
நித்யகன்னி	-60	-40
கள்ளத்தோணிக்கு தீர்ப்பு	-75	-35
உலகத்தைப்பார்	1-00	-50
பேசும் விழிகள்	1-00	-60
காத்திருந்தவன் பெண்டாட்டி	-75	-40
பருவதாகம்	-50	-30
ஐ.சி.எஸ்.மனைவி	-75	-40
கான்ஸ்டபிள் கண்ணம்மா	1-00	-75
இரண்டவிடு	1-00	-75
சூறைக்காற்று	1-50	1-00
மனோரதம்	1-50	-80
மலரும் திராவிடம்	1-00	-60
மர்மம் நிறைந்த மாயவில்லா	1-00	-80
துளிவிஷம்	-50	-25
சொர்க்கவாசல்	1-00	-25
மனோகரா	-50	-25
கிருஷ்ணன்மதுரம்	-50	-25
T. R. ராஜகுமாரி	-50	-25
படுக்கை அறை	1-00	-60
கடற்கரை மோகினி	-50	-30
மணமகளின் காதலர்கள்	-50	-30
காலேஜ் காதல்	-50	-30
இனிக்கும் பெண்	-40	-20
ஒடிப்போனவள்	-75	-40
காதல்பலி	-50	-30
மோகவலை	-50	-30
அஞ்சலியின் ஆசை	-50	-30
M G. ராமச்சந்திரன்	-40	-15
K. R. ராமசாமி	-40	-15
T R. ராமச்சந்திரன்	-40	-15

வி. பி. பி. கிடையாது.

போஸ்டல் ஆர்டர், ஸ்டாம்புகள் அனுப்பிப் பெறலாம்.

31-1-56 வரைதான் இந்தச் சகாய விலைக்குக் கிடைக்கும்.

இன்றே ஆர்டர் செய்துவிடுங்கள்.

மோகன்ஸ், பஸ் ஸ்டாண்ட், யாழ்ப்பாணம்.

'தென்றல்'

வாசகர்களுக்கோர்

தித்திக்கும் செய்தி!

கீழ்க்காணும் முகவரியில்

'தென்றல்'

கிளை அலுவலகம்

திறக்கப்பட்டிருக்கிறது;

இலங்கை முழுவதும் முன்பணம் கட்டக்கூடிய விநியோகஸ்தர்கள் தேவை.

தென்றல்

காவியப் படையல்! கருத்துக் குவியல்!!

ஆசிரியர்: கவிஞர் கண்ணதாசன்.

தென்றல் கிளை அலுவலகம்,

7, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டாமை ஒழிப்பு இயக்கம் முதல் வேலையாகும்!

அரசியல் கட்சிகள் எவையும் தீண்டாமையை ஒழிப்பதில் அதிக அக்கறை காட்டுவதில்லை யென்ற குறையை நீக்குவதில் இலங்கை தமிழரசுக் கட்சி முன் வந்திருப்பது சம்பந்தப் பட்ட சமூகத்தினர் மத்தியில் அதிக மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது சிறுபான்மைத் தமிழ் மக்களான தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை நீக்குவதற்கான பணமாற்றப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபடப் போவதாகத் தமிழரசுக் கட்சி சமீபத்தில் நடந்த மகாநாடொன்றில் வாக்குறுதி யளித்துள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்களின் பொது ஸ்தாபனங்களாகிய சிறுபான்மைத் தமிழர் மகாசபை, நலவுரிமைச் சங்கம் ஆகிய வற்றின் பிரதிநிதிகளை யழைத்துச் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடத்திய மகாநாட்டில் மேற்கண்ட வாக்குறுதிகளைக் கட்சித் தலைவர் திரு கு. வன்னியசிங்கம், பொதுச் செயலாளர் திரு எஸ். ஜே வி செல்வநாயகம் ஆகியோர் தெரிவித்தனர்.

ஹரிஜன மக்களின் சமூக அரசியல் பொருளாதாரரீதியான குறைபாடுகளை மேற்படி இரு குழுவினரும் விபரமாக எடுத்துரைத்தார்கள். அவற்றையெல்லாம் தமிழரசுக் கட்சி நிர்வாகிகள் மிகுந்த அக்கறையோடும் அனுதாபத்தோடும் கேட்டுக் கொண்டு தீண்டாமை ஒழிப்பையும் ஒன்றுகூடி கருதி இனிப்பிரசாரம் செய்யப்படுமென்று இது விஷயத்தில் சிறுபான்மைத் தமிழரீ ஸ்தாபனங்கள் பூரணமாக ஒத்துழைக்க வேண்டுமென வும் கேட்டுக் கொண்டார்கள்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபைப் பிரதிநிதி அவர்களிடம் திரு செல்வநாயகம் பேசுகையில் இந்தியாவில் தீண்டாமையென்ற சாபத்தீடு நீங்கிய பின்தான் சுதந்திரம் கிட்டியதாகவும் அதே போல் நமக்குச் சமஷ்டி அரசாங்கம் கிட்ட வேண்டுமானால் முதலில் தீண்டாமையை அகற்ற வேண்டுமென்றும் சொன்னார். தாழ்த்தப்பட்ட மக்களின் விமோசனத்துக்காகக் கட்சி ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் தாங்கள் இதுவரை செய்த சேவையை திரு வன்னியசிங்கம் விளக்கமாகயெடுத்துரைத்தார்.

மகாநாடு இம்மாதம் 22ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாயினும் பேச்சுவார்த்தைகளில் மிகுந்த ஒத்துழைப்பும் அபிவிருத்தியும் காணப்பட்டது. இம்மாதம் 22ந் திகதி மகாநாடு முடிவடைந்ததும் இருசார்பினரும் சேர்ந்து தங்கள் எதிர்கால வேலைகள் ஒத்துழைப்பு ஆகியவைகள் குறித்து ஒரு கூட்டறிக்கை வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஹர்த்தாலுக்கு மட்டக்களப்பு ஐந்நூறாகிறது

மட்டக்களப்புப் பகுதி பூராவுமுள்ள பட்டினம் முதல்கிராமங்கள்வரை தினசரி மொழிப் பிரச்னை பற்றிய கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சினிமாக் கொட்டகை முதல் மீன்கடை வரை மொழிப் பிரச்னை பற்றிய கதை பாமர மக்கள் கதைக்கும் கட்டம் வந்துவிட்டது தினசரி நடைபெறும் கூட்டங்களில் தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்குக அல்லது சமஷ்டி ஆட்சியை அனுஷ்டிக்க தமிழ் பேசும் மக்கள் ஒன்று சேருங்கள் என்ற கூக்குரலாகவே இருக்கிறது

20-ந் திகதி ஹர்த்தால் கடைக்கைக்கொண்டுவருகின்றன சமத்துவ இயக்கத்தில் பெண்களும் ஈடுபடவேண்டுமென திருக்கோவில் ஸ்ரீமதி வேலுடபிள்ளை மேரி, பெண்களுக்கு விடுத்த ஒரு சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மொழிப் பிரச்னையில் தமிழ் மாணவர்களும் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றனர். பெருவாரியான உயர்தர வகுப்பு மாணவர்கள் தாடி வளர்க்க ஆரம்பித்ததோடு சுதந்திர தின விழாவை பகிஷ்கரிக்க வேண்டுமென்று சங்கணம் கட்டிக் கொண்டு வருகின்றனர்.

பிரஸ்தாப பிரச்னையைத் தொடர்ந்து பல இடங்களில் சிங்களவருக்கும் தமிழ் பேசும் சமூகத்தினருக்குமிடையில் பல கைகலப்புகள் நிகழ்ந்து கொண்டு வருவதாக அடிக்கடி செய்திகள் அடிபட்டுக்கொண்டே இருக்கின்றன. தினசரி 'தமிழ் மொழியே எங்கள் தாய் மொழி' என்னும் சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளுடனும், "தமிழ் மொழுக்கும் சமத்துவம் அளிக்குக" என்ற அட்டைகளுடனும் பல இடங்களில் ஊர்வலங்கள் நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. மொழிப்பிரச்னை தலைகாட்டியதால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் ஒரு விழிப்புணர்ச்சி அடைந்துள்ளார்கள் என்றுல் மிகையாகாது. மொழிப் ரச்னை தலைகாட்டியதால் இன்று நாட்டில் இருந்து வரும் எத்தனையோ பிரச்னைகளை மக்கள் அறிந்து வருவதோடு அரசாங்கத்தின் அவல நிலைமையையும் அறிந்து கொண்டு தற்போதைய அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டுமென்றும் ஒரு சாரார் பிரச்சாரம் செய்துகொண்டு வருகிறார்கள். இன்னும் ஒரு சாரார் தமிழ் நாடு நிறுவ வேண்டுமென்று கோரி வருகிறார்கள். பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் இன்றைய நிலைமையைத் தீர்க்க சமஷ்டி ஆட்சியை விட வேறு ஒன்று ஒவ்வாது என்று சமஷ்டி ஆட்சியை அமைப்பதற்கு சங்கணம் கட்டிக் கொண்டு வருகின்றனர் என்றுல் மிகையாகாது. —சிவா.

எழுக தமிழகத்தில்.....



அனுஷ்டிக்க வேண்டும் என்பது பற்றிய பொதுக்கூட்டங்கள் இங்கு நடைபெற்றுக்கொண்டு வருவதோடு அடுத்த மாதத்தில் அனுஷ்டிக்கப்படவிருக்கும் சுதந்திர தின விழாவை வன்மையாக பகிஷ்கரிக்க வேண்டுமென்று பல்வேறு சங்கங்கள் ஜரூரான நடவடிக்கை

கட்டுக்குளம் பற்றில் தமிழ்ப் பேசும் மக்கள் மகாநாடு

தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்காலம் கவலைக்கிடமானதாயிருப்பதை நன்குணர்ந்த கட்டுக்குளம் பற்றைச் சேர்ந்த நிலாவெளி, வாழைபூற்று, இறக்கக்கண்டி, கும்பிறுபிட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த தமிழ்பேசும் மக்கள் சென்ற வாரம் நிலாவெளியில் கூடி எதிர் காலம்பற்றி சிந்திப்பதற்கு கூடிய சிக்கிரம் ஒரு மாநாடொன்றை நடத்துவதற்கு ஆலோசித்திருக்கிறார்கள்.

கூட்டத்திற்கு ஒவ்வொரு வட்டாரத்தைச் சேர்ந்த பல பிரமுகர்களும் சமூகமளித்திருந்தார்கள். மாநாடு வெற்றிகரமாக நடைபெற வட்டாரத்திற்கு இரண்டுபிரதிநிதிகள் வீதம் மொத்தம் பன்னிரண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர் மாநாட்டுக்கு வேண்டிய செலவினங்களை ஈடுசெய்வதற்கு பொதுமக்களிடம் இருந்து நிதி சேகரிக்கும் பணியில் இளைஞர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மாநாட்டுக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற பிரதிநிதிகளையும், மற்றும் முக்கிய பிரபலஸ்தர்களையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாநாடு அநேகமாக ஜனவரி இறுதிக்குள் நடக்கலாமென தெரிகிறது. மாநாட்டின் வெற்றி கட்டுக்குளம் பற்றின் சரித்திரத்திலே ஒரு பொன் ஏடாக திகழும் என பலர் நம்புகிறார்கள்.

அன்னசி விற்பனையிலும் லஞ்சம்!

அரசாங்க விற்பனை வசதியிலாக்கா அன்னசிப்பழ விற்பனை மூலம் யாழ்ப்பாணத்தில் நடத்தும் தகிடுதத்தம் ஒன்றைக் கூறித்துப் பொது மக்கள் மிகுந்த அதிருப்தி கொண்டுள்ளனர். பொதுசனங்கள் தேவைக்கேற்ற அளவும், விலைமலிவாகவும் பாவிப்பதற்கென்று மலை நாட்டிலிருந்து சேகரித்தனுப்பப்படும் அன்னசிப்பழமானது யாழ்ப்பாணத்தில் சில வர்த்தகர்களுக்கும் விற்பனை வசதி இலாக்கா ஊழி

(13-ம் பக்கம் பார்க்க)

காசம் பரப்பும் நிலையமாகிவிட்ட சீமேந்து தொழிற்சாலை

அரசாங்கத்தின் கவலை யீனம், வேலை வெறுப்பு ஆகியவற்றின் காரணமாக காங்கேசனதுறையிலுள்ள சீமெந்துத் தொழிற்சாலை அங்கு வேலை செய்பவர்களுக்கு மரணச்சீட்டு வழங்கும் ஒரு நிலையமாகவே விளங்கி வருகிறது. இயந்திரங்களில் அகப்பட்டுக் கைகால் இழப்பவர்களைப் பற்றியும் உயிர் துறப்பவர்களின் சம்பந்தப்பட்டதுமான சோக சம்பவங்கள் ஒருபுறமிருக்கட்டும். தொழிற்சாலையிலிருந்து சதா கிளம்பிக்கொண்டிருக்கும் தூசிப் படலமானது காசரோகத்தை எப்படி அபிவிருத்தி செய்து தினமும் நோயாளர் தொகையை கூட்டுகிறதென்பதும் அதனால் உண்டாகும் மரணங்களும்தான் மிக முக்கியமாக அவதானிக்கத்தக்கவை.

புகைப்படலம் போலக் கிளம்பிக் கொண்டிருக்கும் அத்தூசிப்படலத்தின் கோரவிளைவை அயற்கிராமங்களெல்லாம் தாராளமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அதைப்பற்றிப் பொதுமக்கள் கிளப்பிய குரலுக்கு இன்றுவரை செவிசாய்க்கப்படவேயில்லை. தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலாவது தொழிலாளருக்கு அதிலிருந்து தப்பக்கூடிய பாதுகாப்பளிக்கத் தவறியதுதான் ஆச்சரியமானது அவர்களுக்கு நிவாரணவைத்திய உதவிதானும் இல்லையென்பது மிக வருந்தத்தக்கது.

தொழிலாளர் இத்தூசிப் படலத்தில் மூழ்கி எவ்விதம் அவதிப்படுகிறார்களென்பதை பிரதமர் சர் ஜோன் கொத்தலாவலை கூட ஒருதரம் கண்டு திருத்திட்டுப் போய்விட்டார். அவரது விஜயத்தின்போது தொழிலாளர் தமது குறைபாடுகளை அவரிடம் எடுத்துரைத்தார்கள். அவர் அவற்றை நிவர்த்திப்பதாக வாக்குறுதியளித்தார். ஆனால் அவர் சென்றபின் அவர் வாக்குறுதி அளித்தவை ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை. தொழிலாளர் தமது குறைபாடுகளை நிவர்த்திக்கும்படி பல தடவைகள் மகஜர் அனுப்பியும் பயனில்லை. தொழிலாளர் தமது குறைபாடுகளை நிவர்த்திக்கும்படி கோரி ஒரு தடவை வேலை நிறுத்தம் செய்தார்கள். அதன்பின் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர் சார்பில் சில சலுகைகளை அளித்தது. ஆனால் அவை தொழிலாளர் கோரிய குறைபாடுகளை நிவர்த்திக்கப் போதுமானவையல்ல. தொழிலாளர் தமது குறைபாடுகளை நிவர்த்திக்கும்படி கோரி மீண்டும் வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று தீர்மானித்துள்ளார்கள்.

பொங்கல் விழா வழி வகுக்குமா?

தீருகோணமலை முத்தமிழ் மன்றத்தினர் தங்கள் முதல் முழுக்கமாக அன்னை மொழியாம் நம் தமிழ் மொழியை காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காக இம்முறைவரும் பொங்கல் தினத்தை தேர்ந்தெடுத்து விழா கொண்டாடுவதற்கு தடபுடலான ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். மேற்படி பொங்கல் விழா 15-1-56ல் திருகோணமலை பாராளுமன்ற பிரதிநிதி திரு இராஜவரோதயம் அவர்கள் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் பலதரப்பட்ட அரசியல் கருத்தக் கொண்ட தலைவர்களையும் அழைத்து ஒரே மேடையில் முழங்கச் செய்வதற்கு ஏற்பாடாகி வருகிறதாம். 'அன்னை மொழிக்கு ஆபத்து' 'அதை எதிர்த்து தன்மான தமிழர்களின் அணிவகுப்பு' 'கன்னித் தமிழ் கனல்மொழி—எங்கள் உயிர்' 'தன் மானத்துடன் எதிர்த்து போராடுவோம் திரண்டு வாரீர்' என்பனபோன்ற சுலோகங்கள் அடங்கிய பெரிய சுவரொட்டிகள் விநியோகிக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகம்

(திங்கள்தோறும் மலரும் செந்தமிழ் ஏடு)

ஆசிரியர்: செ. இராசதுரை.

(முன்னாள் 'சுதந்திரன்' துணை ஆசிரியர்.)

★ ஆணித்தரமான அரசியல் கட்டுரைகள்
★ அன்றையத் தமிழகத்தின் படப்பிடிப்பு
★ அறிவியல் தந்தைகளின் வாழ்க்கை வரலாறு
★ அகில உலக சமாச்சாரங்கள்
★ சிந்தை குளிப்பாட்டும் தீஞ்சுவைக் கவிதைகள்
★ சிந்திக்கத் தூண்டும் சீர்திருத்தக் கதைகள்
★ சிந்தனையாளர்கள் தாவிய அறிவுரைகள்
★ சிறுவர்களுக்கான "நாளைய சந்ததி"
★ மங்கையர் பகுதி

மற்றும் பல அம்சங்கள்.

விலை சதம் 15.

வருடச் சந்தா ரூ. 2-00.

தமிழகம்

மட்டக்களப்பு.

8 வெள்ளம்

(3)

மீனு சொல்லுகிறாள்:

"விதியின் விளையாடல்—
மனிதனே மாற்றும்
மாய ஜால
விதியின் விளையாடல்—"

ரேடியோவின் பாடல் என் சிந்தனைக்கு இசைமெருகேற்றியது போன்றிருந்தது. என்னுடைய வாழ்வின் விதி எப்படிக் குறுக்கிட்டது என்ற சிந்தனையில் இருந்தபோது ரேடியோ பாடியது. என்னுடைய வாழ்வையே பாழும் விதி சிதைத்து விட்டது. சிதைந்துபோன என் வாழ்வு திரைப்படம்போல என் முன் தெரிந்தது. அதன் அலங்கோலமான தோற்றத்தை நேருக்கு நேர் பார்த்தேன். ரேடியோ பாடினது.

"விதி! நல்ல விளையாட்டு! என்னுடைய வாழ்க்கையைச் சிதைப்பதில் என்ன விளையாட்டு? பெண் என்றால் பேயுமிரங்கும் என்பார்களே. என்னராட்சத பிரகிருதியப்பா இந்த விதி! பெண் பாவம் பொல்லாதது. அதிலும் என் போன்ற அபலைகளின்பழி உன்னைச் சும்மாவா விட்டுவிடும்?" ரேடியோவின் பாடலைக் கேட்டுவிட்டுமனங்கொண்ட மட்டும் விதியை நொந்தேன்.

விதியை நொந்து என்ன பயன்? இதயமற்ற விதி எங்கே என் மனக்கொதிப்பை அறியப் போகிறது? பண்பு நிறைந்த சுகுமாரின் இதயமே என் பேதை நிலைக்கண்டு சிறிதும் இரங்கவில்லை. அன்று பொலீஸ் ஸ்டேசனில் ஒரு முறையாவது அவரைப் பார்த்துவிட வேண்டும் என்ற என் ஆசையை அவர் நிராகரித்துவிட்டார். துடியாய்த் துடித்த என் உள்ளத்தை அவர் நிந்தித்துவிட்டார். அன்றைக்கு அவருடைய உயிரைக் காப்பாற்ற என்னுயிரையும் தியாகம் செய்வதற்கு நான் ஆயத்தமாக இருந்தேன். பிரபல வழக்கறிஞரை அவரை ஆதரிக்க ஏற்படுத்தியிருந்தேன். ஆனால் அவர் என் உதவியை உதறித் தள்ளிவிட்டுத்தான் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டு விட்டார்.

சுலோ இப்படிச் செய்வாள் என்று நான் கருதியிருக்கவில்லை. என்ன இருந்தாலும் சொந்த அத்தை மகன் என்ற பாசம் கூட இல்லாமலா போய்விடும் என்று நான் நினைத்தேன். காலப் போக்கில் மனிதனுடைய மனம் எப்படி எப்படியெல்லாம் மாறக்கூடும் என்பதை அவன் செய்கை காட்டிவிட்டது. சுயநலம் நீதி நியாயங்களின் கண்களையே மறைத்து விட்டது. எப்படித் தான் அவளுக்கு மனம் வந்ததோ?

கதவில் யாரோ தட்டும் சத்தம் என் சிந்தனையை வெட்டியது. எழுந்து கதவைத்திறந்தேன். சப் இன்ஸ்பெக்டர் சேகர் என்னை நமஸ்கரித்தான். அவன் மேல் எனக்குக் கோபமேற்படவில்லை. உள்ளே வரும்படி சொல்லி ஓர் நாற்காலியை எடுத்துப் போட்டேன். உட்கார்ந்தவாறே தான் வந்த விஷயத்தைச் சொன்னான். சுகுமார் மரணத்தண்டனை அடைவதிலிருந்து அவரைக் காப்பாற்றிவிடும்படி சுலோ தன்னை நச்சரிப்பதாகவும் அதற்கு என்னுடைய உதவி வேண்டியிருப்பதாயும் கூறினான். என் மன நிலையைப் புரிந்துகொண்டு என்னைத் தன்னுடன் வரும்படியும் ஓர் இடத்தில் சுலோசனையும் ஓர் பிரபல வழக்கறிஞரும் எங்கள் வரவை எதிர்பார்த்து இருப்பதாகவும் சொன்னான். அரை நிமிஷத்தில் உடையை மாற்றிக் கொண்டு அவனுடன் புறப்பட்டேன்.

ஓர் சாவிபால் கடற்கரையை நோக்கியிருந்த ஓர் வீட்டின் கதவைத் திறந்தான். அங்கு வேறு யாரையும் காணுமையால் மற்றவர்கள் எங்கே என்ற பாவனையில் நான் அவனைப் பார்த்தேன். என் பார்வையைப் புரிந்து கொண்டு தான் போய் "போன்" செய்து அவர்களைச் சீக்கிரம் வரும்படி சொல்லி வருவதாக வெளியே போனான்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து ஓர் நாற்காலியை என் முன்னால் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். அவன் கண்கள் என் மார்பகத்தையும் கழுத்தையும் மாறிமாறி வெறியுடன் பார்த்தன. அந்தப் பார்வையின் வேட்கை எனக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. என் முகம் மாறியதை உணர்ந்துதானோ என்னவோ எழுந்து ஓர் அலமாரியைத் திறந்து அதிலிருந்த இரண்டு புட்டிகளை எடுத்தான் எனக்குப் பின்னாலிருந்த ஓர் மேசையருகில் சென்று அதிலிருந்த இரண்டு டம்பளர்களில் புட்டிகளிலிருந்ததை ஊற்றினான். திரும்பி நான் தன் செய்கைகளை அவதானிக்கிறானா என்று ஒருமுறை பார்த்துவிட்டுத் தன் சட்டைப்பையிலிருந்து எதையோ எடுத்து ஓர் டம்பளரில் கலந்தான். அவனைத் திரும்பிப் பார்க்காமலே எனக்கு முன் சுவரில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியில் அவன் செய்கைகளை நான்

நன்றாக அவதானிக்க முடியும் என்பது அவனுக்குத் தோன்றவில்லை.

"இதைக் குடியுங்கள்: தெம்பாயிருக்கும் அவர்கள் வருகிற நேரம்தான்" என்று ஒரு டம்பளரை என்னிடம் நீட்டினான். நான் அதை வாங்கிக்கொண்டேன். அவன் வெளியே சென்று எதையோ தேடிவிட்டு வந்தான் அந்த நேரத்தில் டம்பளரில் இருந்ததை அருகிலிருந்த குப்பைக் கூடைக்குள் கொட்டிவிட்டு அப்போதுதான் குடித்துவிட்டு வைப்பதுபோல் டம்பளரை மேசையில் அவன் காணவைத்தேன். நான் தன் வலையில் சிக்கிவிட்டதாக எண்ணி அவன் லேசாகச் சிரித்தான்.

மயக்கம் வருவதுபோல் பாசாங்கு செய்தேன் அவனுடைய எண்ணத்தை அறிந்துவிட வேண்டும் என்ற ஆவல் எனக்கு சோர்ந்துவிடுவதுபோல் தலையை ஓர் பக்கமாகச் சரித்தேன். கண்கள் மூடியிருந்தாலும் கண்களை ஊடாக அவனை அவதானித்தேன். நான் சோர்ந்து விழுவதைப் பார்த்துக்கொண்டிருந்த சேகரிடம் ஓர் பரபரப்பு ஏற்பட்டது. எழுந்து கதவை மூடித் தாழ்பாளிட்டபோதுதான் என்னுடைய செய்கையின் விபரீதம் எனக்குப் புரிந்தது. அவன் என்னை நெருங்கி வந்தான். என் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது.

அவனுடைய கைகள் என் கன்னங்களை வருடின. நேரம் செல்லச் செல்ல தலையில் கீழே கீழே இறங்கிச் சென்று



நின்றது. ஓர் பெண் வந்து மோட்டாரின் கதவைத் திறந்தாள். நான் இறங்கும் போது அவளைப் பார்த்தேன். மறுகணம் "சரா!" என்று அலறிக்கொண்டு அவளுடைய விரிந்த கைகளுக்கிடையில் சாய்ந்தேன். இவ்வளவு காலமும் அடக்கி வைத்திருந்த கவலையின் வெள்ளம் மடைதிறந்து ஓடினது. அவளுடைய மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதேன் சரா வாத்சல்யத்துடன் என்னை அணைத்துத் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

சாப்பாடானதும் என்னுடன் அறைக்கு வந்த சரளா என்னைத் தூங்கும்படி சொல்லிவிட்டு போய்விட்டாள். என்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட அதிர்ச்சிகளை எல்லாம் மனம் எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தபோது அறையின் கதவு தட்டப்பட்டது. எழுந்து விளக்கைப் போட்டுவிட்டுக் கதவைத் திறந்தேன். ஓர் பெண் அறைக்குள் வந்தாள். அவளை எங்கும் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை. நான் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்தபடி தன் கண்களால் என்னை எடைபோட்டாள்.

"அக்கா! நான் உங்களிடமிருந்து ஓர் பெரும் தியாகத்தை எதிர்பார்க்கிறேன்; உங்கள் கண்களிலி ஒளி எனக்கு நம்பிக்கையூட்டுகிறது" என்றாள் இறுதியில். நான் பதில் பேசவில்லை மௌனமாக அவளைப் பார்த்தேன். "சுகுமாரை மறந்துவிடுவதென்றால் மிகவும் சிரமமான காரியம். இல்லையா அக்கா?" என்று கேட்டாள். ஒரு பெருமூச்சுத்தான் அவளுக்குப் பதிலளித்தது. சிறிது நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து போய் இருந்தாள். அவளுடைய கன்னங்களிலிருந்து நீர் வடிந்தது.

"இறக்கும்போது விமலா சுகுமாரிடம் ஓர் வாக்குறுதி வாங்கிக்கொண்டாள். என்னதான் அபவாதம் வந்தாலும் சுலோசனாவை மணவியாக ஏற்றுக்கொண்டால்தான் என் ஆத்மா சாந்தியடையும் என்று விமலா சுகுமாரிடம் வேண்டிக் கொண்டாள். சுகுமாரும் அவளுக்கு வாக்குக் கொடுத்துவிட்டார். என்னுடைய சொற்கள் உங்கள் உள்ளத்தை எப்படி அறுக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதற்காக உங்களிடம் இதை மறைக்க நான் விரும்பவில்லை. இன்னும் சுகுமாரின் மனதை ஒரு நிலைப்படுத்தி அவரை வாழ்வில் நம்பிக்கையுடைய வராக்குவதற்கும் நான் இவைகளை உங்களுக்குச் சொல்லித்தானாகவேண்டும். சுகுமாரின் நிலை இருதலைக் கொள்ளிஎறும்புபோன்றது. அவர் குற்றத்தைத் தன் மீது சுமத்திக்கொண்டதற்கு இந்த நிலையும் ஓர் காரணம்" என்று ஓர் பிரசங்கமே செய்து முடித்தாள்.

எனக்கு முன்னால் விரிக்கப்பட்ட என் எதிகால வாழ்வின் வழியைப் பார்த்தேன். சுகுமாரை அடைய முடியும் என்ற என் நம்பிக்கை அடியோடு போய்விட்டது. சுகுமார் சுலோவை மணந்து வாழ வேண்டும். அல்லது சுகுமார் வாழவே விரும்பவில்லை என்ற நிலையேற்பட்டபின் எனக்கு வேறு வழி அகப்படவில்லை. சுகுமாரும் சந்தர்ப்பங்களும் சதி செய்து எனக்கும் சுகுமாருக்கும் இடையில் ஏற்படுத்திவிட்ட வெளி முழுமையும் எனக்கு முன் விரிந்து கிடந்தது.

"புயலில் எதிர இரண்டு படகுகள் ஒன்றிற்கொன்று அருகில் வருகின்றனவோ மரணத்தின் வாசலில் எதிர்ப் படகுகள் ஒன்றிற்கொன்று ஆதாரமாகின்றனவோ அந்தப் படகுகள்தான்

(11-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும்; நிலகாலம் சாபபிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை' தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களால் முஸ்லிம்களுக்கு இன்னல் வரும் என்பது அபத்தம்

சரித்திர மறியாதோரின் இந்த வாதம் இஸ்லாத்தை அழிப்போருக்கே உடந்தையானது

ஒரு பாஷை வெறி ஒரு மத பூதமாக மாறுவதை கண்ணுள்ளோர் காணவேண்டும்

கம்பஹா சாஹிராக் கல்லூரி அதிபர் ஜனூப் பதுறுதீன் மஹ்மூது அவர்கள் "தமிழர்களிடையே முஸ்லிம்களுக்கு எவ்வித சலுகையும் என்றும் கிடைத்ததில்லை. அவர்கள் எப்பொழுதும் முஸ்லிம்களை நசுக்கும் திட்டத்திலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடத்தில் முஸ்லிம்களுக்கு உரிமை கிடைப்பது முயற்கொம்பேயாகும்" என்று கூறியுள்ளார். அவர் கூற்றில் உண்மையும் இல்லை என்பதை முஸ்லிம் பெருமக்கள் அறியவேண்டியது அவசியம்.

இலங்கை முஸ்லிம் சமுதாயத்துக்கு இலங்கைத் தமிழர் சமுதாயத்தால் எதுவித விரோதமும் எப்போதாவது ஏற்பட்டது எமது ஞாபகத்துக்கு எட்டாத கருமம், சரித்திரங்களில் இல்லாத மர்மமுமாகும். அப்படி ஏதாவது ஒன்றிருந்தால் அது என்ன? எப்பொழுது? என்ன காரணத்துக்காக நடைபெற்றதென்பதை ஜனூப் மஹ்மூத் அறியத் தருவாராயின் அதை நாங்கள் தீரத் தெளிந்து வருங்காலங்களில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள உதவும்; அவ்விதம் ஒன்று இல்லாதிருப்பின் இதை ஒரு அபத்தமான பேச்சென்றே திட்டவட்டமாகக் கூறிவிடவேண்டும்.

இந்தியாவிலே மார்க்கக் கொள்கை அடிப்படையில் இடையிடையே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சில தகராறுகள் நடந்து வந்ததை நாமறிவோம். அவைகள் எப்போதும் ஒரு குடும்ப மக்களின் சச்சரவு என உணர்ந்து சமாதானமாக தீர்க்கப்பட்டு வந்திருக்கிறது. அப்படி ஏதாவதொரு நிகழ்ச்சி இலங்கையில் எந்தப் பகுதிகளிலேனும் தமிழ் மக்களால் ஏற்பட்டதில்லை.

இலங்கையில் படுத்துறங்கிக்கொண்டிருந்த சிங்கத்தை சேர் அருணாசலம் அவர்கள் தட்டியெழுப்பி அரசியல் ஞானம் கற்பித்து நெஷனல் காங்கிரஸ் ஸ்தாபித்து சுதந்திரத்திற்கு அத்திவாரமிட்டுவரும் நாட்களில், சிங்களவர், முஸ்லிம்களுக்கு விரோதமாக ஒரு தாக்குதலைத் திடீரெனக் கையாண்டனர். அந்நேரம் இருந்த பொலீசாரால் ஏதும் செய்ய இயலாமற் போனதால் தாக்குதலின் பாரதூரத்தையும் அதின் அபிப்பிராயத்தையும் உணர்ந்து

எம். எம். சுல்தான்

ஆங்கில அரசாங்கம் மார்ஷல் லோ வைத்துக் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டது. அவ்வடக்குமுறை தவறியிருப்பின் இன்று தென்னிலங்கை வீதிகளில் ஓர் முஸ்லிமைக் காண்பது கொம்புள்ள முயலைக் காண்பதையொக்கும். அவ்வடக்குமுறைகளை சேர். இராமநாதன் அவர்கள் கடுமையாகக் கண்டித்து தன் செலவில் இங்கிலாந்துக்குப் போய் சிங்களவருக்காகப் பரிந்து பேசி உயிர்ப்பிச்சை வாங்கியதுமன்றி, "இலங்கையில் 100 நாட்கள்" எனும் ஓர் புத்தகத்தையும் தயாரித்தார். (மார்சல் லோ இலங்கையில் இருந்தது 100 நாட்கள்.)

இவர் ஒரு காலம் முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் ஒரேயொரு பிரதிநிதியாக நெடுநாள் பழைய அரசாங்க சபையிற் சேவை புரிந்து வந்தவர். இலங்கைச் சோனகர் எல்லாம் தமிழ்க் குலத்தார், மார்க்கம் மாறிய சகோதரர் என்றெல்லாம் பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் ஸ்தாபித்துவந்தவர். தன் சகோதரர்கள் எனக் கணிக்கப்பட்ட மக்களாகிய முஸ்லிம்களுக்கு ஆபத்துண்டான நேரத்தில் அவர்களைக் கைவிட்டதற்கு ஏதும் சிறு நியாயமிருந்திருக்கலாம். அந்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக சிங்களவருக்கு அடக்குமுறையால் ஏற்பட்ட இன்னலைப் பாரதூரமானதாகமதித்து அவர் செய்த விலைபதிக்கவொண்ணாச் சேவைக்கு நன்றியளிப்பது அவருடைய சமுதாயம், பாஷை, மதம் இவைகளுக்குப் பங்கம் வருவிக்கும் முயற்சிகளைக் கையாளுவதானது இம்மகானின் ஒத்துழைப்பையும், அவரது புத்தகரூபமான குறிப்புக்களையும் துணையாகப் பாவித்துச் சிங்களவர்கள் அதன்பின் நடத்திய எல்லாக் கூட்டங்களிலும் சங்கங்களிலும், விவாக, மைய வீடுகளிலும் காலஞ்சென்ற அமைச்சர் டி. எஸ். சேனநாயகா முதல் ஏனைய சிங்களத் தலைவர்களும் மாறி மாறி கர்ச்சித்து முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைத்ததுபோல அச்சம் பவம் முழுவதையும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக மங்கச் செய்து மறைத்துவிட்டார்கள். அந்நேரம் சேர் இராமநாதன் நடந்துகொண்டது தன் தனிப்பட்ட முறையிலல்லாது தனது சமூகத்தின் பெயராலன்று;

ஜனூப் மஹ்மூதின் தூற்றுதலுக்கு இது காரணமாயின் எத்தனையோ லட்சமக்களுள் ஒரு பெரியார் நடந்துகொண்டதற்காக முழுத் தமிழ்ச் சமுதாயத்தையும் தூற்றியோ அன்றேல் குறை கூறியோ 13, 14 தூரிருண்டுகளாகத் தம்மையும் தம் மதத்தையும் தாய்க்குத் தாயாகச் சீராட்டிப் பாராட்டி வந்த தன் சொந்தத் தாய் மொழியாகிய தமிழைக் கைவிட முனைவதை "ஆற்றோடு போகிறபோது அலம்பாமல் போனால்" மிலேச்சனுக்கும், "அரசனை நாடிப் புருஷனைக் கைவிட்ட மிலேச்சிக்குமே" ஒப்பிடலாம். ஜனூப் மஹ்மூது அவர்கள் கண்டித்த மாதிரித் தமிழ் மக்கள் முஸ்லிம்களின் ஜென்மத்துரோகிகளாக இருந்திருப்பின் அந்நேரமே சிங்களவரோடு சேர்ந்து சேர் இராமநாதனின் பெலத்தைக்கொண்டு இலங்கை முஸ்லிம்களை வேரோடு கழைந்து இல்லாமற் செய்திருப்பார்கள். ஆனால் அந்நோக்கத்தோடு எமது தமிழ்ச் சகோதரர்கள் ஒருநாளுமிருந்திருக்கவில்லையென்பதையும் சேர் இராமநாதனின் தனிச் செயலை அவர்கள் கண்டித்திருக்கிறார்கள் என்பதையும் இது ஒன்றே எடுத்துக்காட்டுகின்றது.

1915ல் நடந்த முன்கூறிய சம்பவங்கள் யாவும் இந்நாட் சிறுவர்கள் அறியாதிருப்பது நூதனமன்று; "பரட்டச்சி உள்ள மயிரைச் சிலுப்பிக்கொள்வது மிப்படியே".

நாற்பது வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை நாங்களும் மறந்துவிடுவோம். இவ்வாண்டில் மாவனலை முஸ்லிம்களுக்கும், கிரிந்திபில் இருக்கும் முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்களுக்கும் நடந்திருப்பதை மறக்கவும் முடியுமா? தகராறை விசாரித்து சமாதானமுண்டாக்கப் போன மந்திரியைப் பிஸ்தோல்கொண்டு பயமுறுத்தியது எந்நாட்டுத் தமிழ் 'குருக்கள்' என்று ஜனூப் மஹ்மூத்தான் அறியவேண்டும்.

1915ம் ஆண்டுக்கு முன் இலங்கை வர்த்தகம் நூற்றுக்கு 75 வீதத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கையிலிருந்ததே கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

இலங்கை அரசாங்கத்தில் தமிழருக்குத் தனி அந்தஸ்து அல்லது சிங்களத்தோடு சம அந்தஸ்து கிடையாவிட்டாலும் அதற்கு ஒருபோதும் பங்கமேற்படாது தமிழோடு சமஉரிமை பெற்று சிங்களப் பாஷை வாழில் சிலவீணர்களின் னைவுபோல் அதுவும் அழிந்து விடாது; இந்நிலையில் தமிழருக்கும் பங்கம் விளையுமாயின் அழிந்து விட இருப்பது முதல் இவ்வளவும் அதன் மக்களுமென்றே காத்திருக்கலாம்.

இலங்கை கவர்ணர் ஜெனரல் ஒருனம்மிக்க சிங்கள புருடராகவிருந்த போதிலும் அவரைப் புத்த மதத்தினராக்க முயற்சிக்கும் இலங்கையில் தாய்ப்பாஷையற்றுத் தத்தளிக்கும் முஸ்லிம்கள் வாழ்வது எப்படியென்று சித்தார்த்தமற்றோர் பேசும் பேச்சுகளுக்கும் தீர்க்கும் தீர்மானங்களுக்கும் ஏமாந்து போக முடியாது. உண்மையான மதப்பற்றுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒருங்கு சேர்ந்து இவ்விஷயத்தில் அவர்களின் சம்மதத்தை வாக்கெடுப்பின் மூலம் அறிந்துகொள்ள அரசாங்கத்தைக் கண்டிப்பாக வேண்டி நில்லாவிடில் அத்தீர்மானம் இஸ்லாத்தையும் அதன் மக்களையும் புதைகுளி தோன்றிவிட்டதென்றிடமாக நம்பியிருக்கலாம்.

மாதர் பகுதி:

கலிங்கத்துப் பரணி பேசும் வீரத் தாய்மை இன்றும் வாழ்கிறது

மலைநாட்டு மாதரினம் உரிமைக்காக நடத்தும் போரில் அதைக் காணலாம்

"கார்இருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில் வோர்
கண்ணிற் பாய்ந்திடும்
எழுச்சி நீதான்"

அறிஞர் குழாம் மாதரினத்தை அறைகூவி அழைக்கிறன. பத்திரிக்கைகள் பத்தி பத்தியாய் இடமளிக்கின்றது. 'சர்வாதிகாரம்' பெற்ற இல்லத்தரசிகளும், சற்குணச் செல்வியரும், தம்தம் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கப் பின்னடையப்படாது. குடும்பப் பொறுப்பையும், மனைவி இயல்பையும், இல்லறப்பண்பையும் நன்குணர்ந்து கைமாறு கருதாது சேவை செய்பவர்கள் மனிகையர் என்பதை மெய்ப்பிக்கவேண்டாமா?

இன்றுள்ள நமது பெண்மணிகள் கல்வித்துறையில் போதிய அளவு பங்கு பற்றியிருக்கிறார்கள். எவ்ருலும் நாட்டிற்கு, நமக்கு பிரயோசனமில்லை; நவீன நாகரீகத்தால் அநாவசியமான பழக்கவழக்கங்களை மேற்கொண்டு சிறுமையைத் தேடிக்கொண்டார்களேயல்லாது மாதர் உலகைப் புதுப்பிக்கவில்லை;

பூங்காவனத்தில் எத்தனையோ அழகும், மணமுமுள்ள பூக்களிருக்கின்றன. அதன் வாசனை பரவுவதற்கு இளங்காற்று அவசியமன்றோ! அதுபோல் நம்மிடமுள்ள அறிவு நுட்பமும் மனத்திட்டமும் பரிமளிக்க சேவை அவசியம். 'இல்லாளின் மாண்பால் நாயகனுக்கு இல்லாத பொருளுமுண்டோ' என்பதை மெய்ப்பித்து சகலவிஷயங்களிலும் துணைவன் துணைவி என்ற தோரணையில் சலியாது உழைத்து, "மக்கள் மடமை நீங்கி உயர்த்து வாழ்தல்" பெரும் பணியில் ஆவியும் அருஞ் சுவையும் தந்து பங்கு பற்றுதல் அவசியம்.

கடந்த மாத சுதந்திரனில் "பண்டைய பண்புடன் இன்றைய வாழ்வுக்கு ஏற்றதாகப் பெண்மை பொலிவுற வேண்டும்" என்று சகோதரி 'புதுமைப்பிரியை' பழமையில் புதுமை சேர்க்கும் பொன்வாழ்வுக்கு வழி காட்டியிருந்தார்.

தன் நாட்டில் போர் என்றதும் புறமுதுகிடாத் தன் மகனைப் போருக்கனுப்பி மகிழ்ந்த புலியனைய வீரப்

கே. தவமணியம்மாள்

பெண்களின் பரம்பரை தானே நாம்? இதுதான் அவரெழுப்பிய அர்த்த புஷ்டியான கேள்வி இதற்குத் தாய்க்குலம் விடைபகர வேண்டும். வார்த்தைகளில்லல்ல-வாழ்ந்து காட்டி.

ஆம். அதே பரம்பரைதான் நாங்கள் என் செய்கையில் காண்பித்த வீரப் பொன்கள் அதிலும், வயது முதிர்ந்த தாய்மார்கள் மலைநாட்டில ஈரியக் கொல்லையில் இருக்கிறார்கள் என்பதை பெருமையோடு தெரிவிக்கிறேன். தொழிலாளர்களின் உரிமைகாத்து அங்கு தொழிலாளத் தாய்மார்கள் நடத்தும் வீரம் செறிந்த போராட்டம், கலிங்கத்துப் பரணி பேசும் வீரத்திற்கும் வாழும் எடுத்துக் காட்டு. உழைப்பவர்களின் உரிமைப் போரில் தான் இன்று உண்மையான வீரம் பொலிகிறது—பொலியவும் முடியும்.

நாம் கல்வியைக் கற்றோம். சரித்திரங்களைப்படித்தோம். எல்லாம் ஏட்டுச்சுரக்காய் தான். செய்கையில் எதையும் சாதிக்கமுடியாதிருப்பது மலைநாட்டுப் பெண்களே முஸ்லுள்ள வீரத்தாய்மார்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கவே மாட்டார்கள் அப்படியிருந்தும் இயற்கையிலேயே அவர்களுக்கு வீர இரத்தம் உடம்பில் பாய்கிறது அந்த வீரப் பாய்ச்சல் சொல்லில் நில்லாது செயலில் மிளிர்கிறது.

மங்கையரின் மாண்பு மங்கவில்லை — மலைநாட்டில் வளர்கிறது. ஒவ்வொரு மங்கையும் தன், தன் கடமையை உணர்ந்திருக்கிறாள். குடும்பப்பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு, கணவனின் கவனிப்பு, முதியோரைப்பாதுகாத்தல் முதலிய விஷயங்களில் ஒவ்வொரு நாளும் ஓய்வின்றி எமக்குத் தெரிந்த கடமையைச் செய்வது மலைநாட்டு மாதர்கள் தான்;

சீருடனிருந்த நம்மை சீர்குலையச் செய்த கொடுமையைப் போக்கி, மடமையைத் தாக்கி தவிடு பொடியாக்குவோம். தனிமைப் போராட்டத்தால் வெற்றி பெற இயலாது. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை என்பதை உணர்ந்திருப்பது இன்று மலைநாட்டவர்கள் தான். துணிந்து செயலாற்றும் வன்மை அவர்களிடமுளது. உரிமை பெறக் கடமையாற்றி மாண்புறும் மங்கையர்குழாம் மலைநாட்டவர்களேயாகும்.

நாட்டின் பலபாகங்களிலுமுள்ள, பலதரப்பட்ட மாதர்களும் பெண்மையின் உரிமைப் போரில், உயர்ந்த வாழ்க்கைக்கான 'கிருதயுகப்' போரில் ஒன்றுபட்டு நிற்பவசியம். மலைநாட்டு மாதர்கள்—வீரம் நிறைந்த தாய்மார்கள் இந்த இயக்கத்தில் பங்கு கொள்ளை—[illegible] ஏமாற்றமாட்டார்கள்.

பூமியைச் சுற்ற செயற்கை உபக்கிரகம்

வானவெளியில் பூமியைச் சுற்றிவரக்கூடிய ஒரு செயற்கை உபக்கிரகத்தை இந்த வருஷத்திலேயே ரஷியா விடவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்தீரன்
SUTANTIRAN

1956 ஜனவரி மாதம் 15ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

பேப்ரவரி 4-துக்கதினம்

பேப்ரவரி 4-ந் திகதி இலங்கையின் சுதந்திர தினமாம்! இந்தத் தினத்தை இலங்கை மக்கள் அனைவரும் கொண்டாட வேண்டுமாம்!

இலங்கையில் யாருக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது? யார் இதைக் கொண்டாட வேண்டும் என்பதைத் தமிழ்ப் பேசும் மக்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஒரு நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்கிறதென்றால் அந்த நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் சுதந்திரம் கிடைக்கவேண்டும். ஒரு சாராரை ஒதுக்கிவைத்து விட்டு, ஒரு சாராருக்குமட்டும் சுதந்திரம் கிடைப்பதாயிருந்தால் அந்த நாடு சுதந்திரம் பெற்ற நாடாகாது.

இலங்கை சுதந்திரம் அடைந்தபோது இலங்கையில் உள்ள சகலருக்கும் அதாவது சிங்கள மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும், மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கும், பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் சரிசமமாக சுதந்திரம் கிடைத்திருப்பதாக பேச்சளவில் சொல்லப்பட்டது.

சுதந்திரம் பெறும் இந்தியாவில் "எல்லோரும் அந்நாட்டு மன்னராக" விளங்குவார்கள் என்று பாரதியார் பாடினார். சுதந்திரம்பெற்ற ஒரு நாடு உண்மையான ஜனநாயக ஆட்சியையும் அமைத்துக் கொள்கிறதென்றால் அந்த நாட்டில் எல்லோரும் மன்னர்களாகத்தான் வாழவேண்டும்.

சுதந்திரம்பெற்ற ஒரு நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் சுயாதீனம் இருக்கவேண்டும். ஒவ்வொரு இனமும் தங்கள் தங்கள் மதம், மொழி, கலை, கலாச்சாரங்களை அனுஷ்டிக்கவும், வளர்க்கவும் உரிமைபெற்றிருக்கவேண்டும்.

ஒரு இனத்தின் வாழ்விடத்தை பிறிதொரு இனம் ஆக்கிரமித்துக் கொள்ளாதபடி பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கவேண்டும்.

சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படும் இலங்கையின் இன்றைய நிலைமை என்ன?

மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை வாக்குரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன. பிரதேச பாஷையான சிங்களத்தை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வலுக்கட்டாயப் படுத்தப் படுகிறார்கள். இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் சந்தேகப் பிரஜைகளாகவும், இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்விடங்களான கல்லோயா, கந்தளாய், அல்லை ஆகிய பிரதேசங்கள் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தினால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

தமிழ்மொழி அழிக்கப்படுகிறது. பௌத்த மதம் புகுத்தப்படப் போகிறது.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக வாழவேண்டிய ஒரு சுதந்திர நாட்டில் சிங்கள மக்கள் மட்டும் ஆண்டான்களாகவும், சிறுபான்மை மக்கள் அனைவரும் அடிமைகளாகவும் ஆக்கப்பட்டு விட்டார்கள். ஒரு தமிழ் மகன் பெயரளவில் மந்திரியாகவிருந்தாலும், ஒரு சிங்கள அரசாங்க சிப்பந்திக்கு உள்ள மதிப்பும் செல்வாக்கும் அவனுக்கு கிடையாது. மந்திரி வைத்தியநாதனே வெட்கமில்லாமல் இதை ஒப்புக்கொள்ளுகிறார். "நான் அரசாங்கத்திற்கு விடுக்கும் வேண்டுகோளைவிட உங்கள் மனைவியின் வேண்டுகோளுக்கு அதிக செல்வாக்கு உண்டு. நான் ஒரு தமிழன் அவர் ஒரு சிங்களவர். இதுவே காரணம்" என்று அவர் கங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை சிப்பந்திகள் கூட்டமொன்றில் கடந்த வாரம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நிலையில் இலங்கையில் யாருக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது? சந்தேகம் இல்லாமல் அது சிங்களவர்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது.

சிங்களவர்களுக்கு மட்டும் சுதந்திரம் கிடைத்திருக்கும் ஒரு நாட்டில், தமிழ்ப் பேசும் மக்களான இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் பெப்ரவரி 4-ந் திகதி சுதந்திரம் கொண்டாடுவதற்கு என்ன யுகாந்திரம் இருக்கிறது, என்ன அவசியம் இருக்கிறது என்று நாம் கேட்க விரும்புகிறோம்.

உண்மையில் பெப்ரவரி 4-ந் திகதி தமிழ்ப் பேசும் மக்களுக்கு சுதந்திர தினமல்ல. ஒரு துக்கதினமாகும். சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக வவுனியா அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில் திரு ஸி. சுந்தரலிங்கம் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

"நாட்டில் தமிழ் இனத்திற்கும், தமிழ் மொழிக்கும் எதிராக நடைபெற்றுவரும் சம்பவங்களை யொட்டி பெப்ரவரி 4-ந் திகதியை தமிழ்ப் பேசும் மக்கள் ஒரு துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும். சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பக் கூடாது. தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடிகளை அல்லது வெள்ளைக் கொடிகளை உயர்த்தி துக்கதினம் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்" என்று திரு சுந்தரலிங்கம் கூறியிருக்கிறார். அவர் அபிப்பிராயத்தை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். தமிழ்ப் பேசும் மக்களும் ஏற்று அதன்படி நடக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

'பச்சைப் புத்தகமும்' பசுத் தோல் போர்த்த புலிகளும்

தனித் தமிழ் நாடு கோருபவர்கள் யு. என். பி. ஏஜண்டுகளே

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

தனித் தமிழ் நாடு கோரும் வீரர்கள் யூ. என். பி. யின் மேலிடங்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டுதான் தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்பதாக நமது அந்தரங்க நிருபர் தந்த செய்தியை இரண்டு வாரங்களுக்கு முன்பு இப் பத்திகளில் வெளியிட்டிருந்தோம்.

இப்போது இது சம்பந்தமாக மேலும் சில விவரங்கள் நமக்கு கிடைத்திருக்கின்றன. தமிழ்நாடு கோரும் வீரர்களில் இருவரும் ஒரு தமிழ் சென்ட்டரும் தனித் தனியாக அரசாங்க உயர் பதவி வகிக்கும் ஒருவரின் மாளிகைக்கு அழைக்கப்பட்டனராம்.

"யு. என். பியிலிருந்து ராஜினமாச் செய்ய வேண்டுமானாலும் செய்யுங்கள். சமஷ்டிக் கோஷமோ, தனித் தமிழ் நாட்டுக் கோஷமோ எது வேண்டுமானாலும் பலமாகப் போடுங்கள். நாங்கள் உங்களைத் தவறாக நினைக்கமாட்டோம். உங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு வேண்டிய விளம்பரங்களை ஏரிக்கரைப் பத்திரிகைகள் மூலம் தேடித் தருகிறோம். தேர்தலில் போட்டியிட தேவையான நிதியுதவியும் செய்கிறோம். எப்படியாவது தேர்தலில் வெற்றிபெற்றுத் திரும்பி வந்துவிடுங்கள். பின்பு உங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறோம்" என்று இந்த தனித் தமிழ் நாட்டு வீரர்களுக்கு புத்திமதி கூறப்பட்டதாம்; வாக்குறுதியளிக்கப்பட்டதாம். மேலிடம் அளித்த புத்திமதியும் வாக்குறுதியும் வேலை செய்ய ஆரம்பித்திருப்பதை தமிழ் மக்கள் நிதர்சனம் காணக் கூடியதாக இருக்கிறது.

தனித் தமிழ் நாடுகோரும் வீரர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் சென்றால் அங்கு யு. என். பியின் அனியாயத்தையும், சிங்கள வகுப்புவாதிகளின் வெறியாட்டத்தையும், தமிழ் மக்களின் எதிர்காலப் பரிதாப நிலையையும்பற்றி காரசாரமாகப் பேசுகிறாராம். கொழும்புக்கு வந்தால் யு. என். பிக் கூட்டாளிகளின் தோளில் கைபோட்டுக்கொண்டு யு. என். பி. கட்சிக்கு தேர்தல் நிதி வசூலிப்பதற்காக பெரும் பெரும் வர்த்தக ஸ்தாபனங்களின் படிகளில் ஏறி இறங்கி வருகிறாராம்.

தேர்தல் நிதி வசூலிப்பதற்கு யு. என். பி. ஒரு பெரிய ஏமாற்று மோசடியைச் செய்து வருவதாகத் தெரிகிறது. சமீபத்தில் யு. என். பி. கட்சி "கிறீன் புக்" என்று ஒரு தகவல் தொகுப்பு வெளியீட்டைப் பிரசுரிக்கப்போவதாகவும் அதில் பிரபல கம்பனிகள், வர்த்தக ஸ்தாபனங்கள் விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் கோரப்படுகிறார்களாம். விளம்பரம் என்றால் அற்ப சொற்ப கட்டணத்தில் நடைபெறும் விளம்பரம் அல்ல, இந்த யு. என். பி: "பச்சைப்புத்தகத்தில்" ஒரு பக்கம் விளம்பரம் செய்வதற்கு கட்டணம் என்ன தெரியுமா? ரூபாய் இருபத்தையாயிரம்!

யு. என். பியின் இந்தப் பச்சைப் புத்தகப் பிரசுரம் என்பது ஒரு பெரும் மோசடியாகும். வர்த்தகர்களை மோசடி செய்து யு. என். பி. தேர்தல் நிதிக்கு பணம் கறப்பது மாத்திரமல்ல; வர்த்தக ஸ்தாபனங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு சேர வேண்டிய நியாயமான வருமான வரிக்கும் டிமிக்கி கொடுப்பதற்கு வழி செய்வதாகும்.

வர்த்தக ஸ்தாபனங்கள் தங்கள் விளம்பரங்களுக்காக செய்துகொள்ளும் செலவை வருமான வரி இலாகா ஒரு நியாயமான செலவினமாக ஏற்றுக் கொள்ளும். அந்த செலவிற்கு வருமான வரி கிடையாது. ஆனால் ஒரு கட்சிக்கு தானம் செய்யும் நிதிக்கு வருமான வரி கட்டித்தான் ஆக வேண்டும். எனவே வருமான வரிக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு யு. என். பி. கட்சிக்கு வர்த்தகர்கள் பண உதவி செய்வதற்கு ஒரு குறுக்கு வழியாக இந்தப் "பச்சைப் புத்தகம்" பயன்படுகிறது.

கடந்த வாரத்தில் ஒரு நாள் இரண்டு யு என். பி. பிரமுகர்கள் ஒரு வர்த்தக காரியாலயத்துள் நுழைந்து அதன் டைரக்டரைச் சந்தித்தார்கள், "என்ன விசேஷம்?" என்றார் டைரக்டர்.

"யு.என். பி. ஒரு "பச்சைப் புத்தகம்" வெளியிடப் போகிறது அதில் தங்கள் கம்பனி விளம்பரம் ஒன்று அவசியம் பிரசுரமாக வேண்டும்."

"சரி, கட்டணம் என்ன?"

"ரூபாய் 25 ஆயிரம்!"

டைரக்டருக்கு தலை சுற்ற ஆரம்பித்தது. "இருபத்தையாயிரமா?" என்று கேட்டார் ஆச்சரியத்தோடு.

"ஆம், விளம்பரத்திற்காக அல்ல யு. என். பி. தேர்தல் நிதிக்காகத்தான் பணம்" என்று வந்தவர்கள் சொன்னார்கள்.

"அப்படியானால் ஏன் விளம்பரத்திற்கென்று கேட்கிறீர்கள்?" என்று கேட்டார் டைரக்டர்.

"விளம்பரத்திற்கு என்று நீங்கள் கணக்கெழுதினால் வருமான வரி கொடுக்க வேண்டியதில்லை."

"அப்படியா? இந்த விளம்பரம் நூறு ரூபாவுக்கு மேல் பெறாது. வேண்டுமானால் ஆயிரம் தருகிறேன்"

"இல்லை, ஐயாயிரமாவது கொடுங்கள்"

"முடியாது....." என்று விட்டார் டைரக்டர்.

யார் இந்த டைரக்டர்? எது அந்தக் கம்பனி என்பதெல்லாம் நமக்கு முக்கியமல்ல.

விளம்பரம் சேகரிக்கச் சென்ற யு. என். பித் தூண்கள் யார் என்பதுதான் முக்கியம்.

ஒருவர், யு. என். பி. கட்சியின் உயர்ந்த உத்தியோகஸ்தர்களில் ஒருவர். மற்றவர் தனித் தமிழ் நாடு கோரி மாய்மாலம் புரியும் தமிழ் வீரர்களில் ஒருவர்!

இப்படியான பசுத்தோல் போர்த்த புலிகளைத்தானே தமிழ்ப் பேசும் மக்கள் அடுத்த பொதுத் தேர்தலில் நம்பி ஏமாறப்போகிறார்கள்?

அரசியல் கட்டுரை

"குட்டையைவிட்டு வெளியேற விரும்பாத யு. என். பி. அட்டை" என்ற தலைப்பில் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. குமாரசாமியின் கோபல்ஸ் பிரசாரங்களையும், அரசியல் குத்துக்கரணங்களையும் பற்றிய ஒரு கட்டுரையை இந்த இதழில் வெளியிடுவதாக கடந்த வாரம் அறிவித்திருந்தோம். கட்டுரை அச்சுக்குப் போகும் சமயம் குமாரசாமியின் அரை பந்திரி ராஜினமா செய்தி நமக்குக் கிடைத்ததால் பிரஸ்தாப கட்டுரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. திரு குமாரசாமியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை அனுசரித்து அக்கட்டுரை உசிதாசாரம் போல் வெளியிடப்படும்.

—ஆசிரியர்

டட்லி அரசியல் துறவறம் பூணுவாரா?

முன்னாள் பிரதமர் திரு டட்லி சேனநாயகா அரசியலிலிருந்து முற்றுகவிலகிக் கொள்ள விருக்கிறார் என்று அவருடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரங்கள் கருதுகின்றன.

சேனநாயகா—கொத்தலாவலை கோஷ்டி சண்டையின் இறுதிக் கட்டம் டட்லியின் அரசியல் துறவு "காட்சியை" என்று சொல்லப்படுகிறது.

தொடர்ந்து அரசியல் வாழ்வில் ஈடுபடுவது எவ்விதப் பிரயோஜனமும் அளிக்கப்போவதில்லை என்று திரு டட்லி அந்தரங்க நண்பர்களிடம் கூறியுள்ளாராம்.

அடுத்த மாதத்தில் நடைபெறவிருக்கும் களனி மகாநாட்டின்பின் தனது அரசியல் எதிர்காலம்பற்றி டட்லி சேனநாயகா அறிக்கை வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டது.

ஒரு காரியாலயத்தில் வேலை செய்யும் சக ஊழியரின் டம்ளரை உடைத்ததற்கு ஏன் வேலைநீக்கம் செய்யப்படாது என்று காரணம் காட்டுமாறு ஒரு அரசாங்க ஊழியர் கேட்கப்பட்டிருக்கிறார்.

தமிழரசைச் சேர்ந்த பட்டின சங்கத்தலைவர்கள்

தமிழரசுக் கட்சி வவுனியாக் கிளை வாலிபர் முன்னணித் தலைவர் திரு சபாபதி சுப்பிரமணியம் வவுனியாப் பட்டின சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சி கல்முனை கிளையின் தலைவர் முதலியார் காரியப்பர் கல்முனை பட்டின சபையின் தலைவராக மூன்றாவது முறையும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இப்பட்டின சபையில் பெரும் பான்மோர் முஸ்லிம் அங்கத்தவர்களாக இருந்த போதும் ஒரு தமிழரை உபதலைவராக தெரிந்தெடுவிட்டால் தாம் பதவி ஏற்கப்போவதில்லை என்று திரு காரியப்பர் நிபந்தனை விதித்திருந்தார்.

தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின் திரு காரியப்பர் பேசுகையில் மொழிப்பிரச்னையில் மதபேதமின்றி ஒன்றுபட்ட மக்களை பிளவுபடுத்தும் விஷமிகளின் முயற்சிகளை முறியடித்து தமது தீர்மானத்திற்கு ஆதரவளித்த முஸ்லிம்களின் சாதுரியத்தை பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியைப் பாதுகாக்க ஆங்கிலத்தில் சண்டப் பிரசண்டம்!

மூடியகதவுகளோடுவிவாதிக்கப்பட்ட முற்றுப் பெருத மூடு மந்திரம்

யாழ்ப்பாணவழக்கறிஞர்கள் கூட்டியமகாநாடு

யாழ்ப்பாணம் ஜன—

இலங்கைவாழ் தமிழினத்தின் இன்னலைத் துடைக்கவென்று பெரும் ஆர்ப்பாட்டங்களுடன் தொடங்கப்பட்ட யாழ்ப்பாணம் வழக்கறிஞர்கள் சங்க மொழிப் பிரச்னை மகாநாடு மிக அமைதியோடு முடிந்துவிட்டது. சென்ற சனிக்கிழமை நடந்த இந்த மகாநாடு சாதித்ததையும் வெளிப்படையாக அறிந்துகொள்வதில் பொது மக்கள் அதிக விருப்பங்கொண்டுள்ளனர்.

ஆனல் தமிழ் மொழியைக் காக்கவென்று தமிழ்த் தலைவர்களாற் கூட்டப்பட்ட அந்த மாகாநாட்டில் யாவரும் ஆங்கிலத்தில் சண்டப் பிரசண்ட முழக்கம் செய்ததைக் கேட்டுப் பொது மக்கள் அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டார்களென்பதை மட்டும் நன்கு அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

பார்வையாளர்களாகப் பொது மக்கள் அனுமதிக்கப்படமாட்டார்களென்ற அறிவித்தல் கடைசிநேரம் வரை இரகசியமாகவைக்கப்பட்டிருந்ததால் பெருந் தொகையான மக்கள் மண்டபத்தைச் சுற்றிவரக் குழுமியிருந்தனர். அவர்களை விரட்டவென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போலிஸ் படை தன் கடமையை அணுவளவும் பிசகாமற் சரி வரச் செய்தது: ஆயினும் இதில் இரகசியத்துக்கு என்ன இருக்கிறதென்று போலிசாரே ஆச்சரியப்பட்டனர். அரசியல் வாழ்வில் பற்றற்று இன்று முற்றுந்துறந்தவர்களாக வாழ்பவர்களையும் நாளொரு பேச்சும் பொழுதொரு வேட்டும் கிளப்பும் அரசியற் கோமாளிகளையும் கண்டு கேலி செய்யவென்றே ஒரு கூட்டம் அங்கு கூடியிருந்த தென்பதைப் பின்னல் நிகழ்ந்த சில சம்பவங்கள் மூலம் அறியக் கூடியதாயிருந்தது:

நகர சபையின் கமிட்டியறை மண்டபத்திலே கதவுகள் பூட்டப்பட்டுப் பலத்த பந்தோபஸ்துடன் மகாநாடு நடந்த தென்றலும் அங்கு நிகழ்ந்த சிதம்பர ரகசியங்கள் ஒருசில பத்திரிகை நிருபர்களின் கவனத்திலிருந்து மட்டும் தப்பிக் கொள்ள முடியவில்லை.

இந்தக் கெடுபிடி ஏற்பாடுகளையும் குறிப்பிட்ட சிலரின் நடைமுறைகளையும் கவனித்த மக்கள் மத்தியில் மகாநாட்டைப் பற்றிய அந்தரங்க நோக்கம் பலதரப் பட்டு பிரதிபலித்துக் காட்டியது. முதன்மைத்தானத்தை மீண்டும் விரும்பும் சிலரின் முயற்சியோ என்று கூடச் சந்தேகப்பட்டவர்களும் உண்டு.

மகாநாட்டு மண்டபத்தை நோக்கிச் சில தலைவர்கள் வந்துகொண்டிருந்த வியப்புக்கிடமான காட்சிகளும் அவர்கள் வரும் போதெல்லாம் வெளியான கிண்டல் வார்த்தைகளும் பெரும் அமளியை அடிக்கடி உண்டாக்கிக் கொண்டிருந்தது. தமிழ் நாடு வீரர் திரு குமாரசாமி சாவகச்சேரிப் பக்கத்தைச் சேர்ந்த சில சகாக்களுடன் விருந்தையில் வந்துகொண்டிருந்தபோது தென் மராட்சியின் பல்டி வீரர் வருகிறரென்று வாலிபர்கள் கூட்டமொன்று கேலியாகப் பேசிகொண்டது. மற்றொரு சமயம் அவர் மகாநாட்டின் இடை நடுவில் வெளியே வந்தபோது தமிழ்நாடு என்று சிலர் கூச்சலிட்டனர். அதைக்கண்டு அசடு வழிந்த முகத்துடன் காணப்பட்ட திரு குமாரசாமி ஒரு வாலிபரின் முதுகிலே தட்டிக் கொடுத்து நிலைமையைச் சமாளித்துக் கொண்டார்.

திரு. ஜி ஜி. பொன்னம்பலம் மிக அடக்க ஒடுக்கமாக மண்டபத்திற் புகுந்தபோது அவரது சகாக்களும் அடிக்கடி மாற்றுக் கட்சியொன்றின் மேடைகளில் தோன்றி நல்ல பிள்ளைப் பட்டம் கேட்க முயலும் ஒருவர் உட்பட சிலர் பின் தொடர்ந்து கொண்டிருந்தனர். எதிர்பார்க்கப் பட்டவாறும் செய்தித்தாள்கள் மூலம் டமாரம் அடிக்கப்பட்டவாறும் கிழக்கு மாகாணத்துப் பிரதி நிதிகளில் ஒருவர் தவிர ஏனையோர் வராமற் போனது குறித்த சிலருக்கு மிகுந்த ஏமாற்றத்தையே கொடுத்தது. அவர்கள் றெஸ்ற் ஹவுசில் கூடியிருந்து பேசுகையில் இந்த மாற்றத்தையும் வெளிக் காட்டிக் கொண்டனர். ஒரு சமயம் மகாநாட்டைப் பற்றிய உண்மையான அந்தரங்கம் எதையாவது மட்டக்களப்புப் பிரதிநிதிகள் முன்னுடியே அறிந்து கொண்டார்களோ என்னவோ தெரியாது:

தமிழ்க் காங்கிரசின் நீண்டநாள் தொண்டர் திரு ஏ. வி. குலசிங்கம் மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார்.

தமிழ்நாடு கோருபவர்களின் அந்தரங்க யு. என். பி. உறவுபற்றி எவ்விதம் நாட்டில் கருதப்படுகிறது. அக் கருத்துப் பிழையானதல்லவென்பதை மற்றும் சிலரது பேச்சுகள் நிரூபித்துக் கொண்டன: திருவாளர் ஏ. எல். தம்பியையா பலத்த சத்தமிட்டுப் புலம்பியது வெளியே பார்த்துக்கொண்டிருந்தவர்களிடம் பலத்த கிரிப்பை உண்டாக்கிவிட்டது. ஒரே சோகரசமாய் விளங்கிய இந்த மகாநாட்டில் திரு வி. வீரசிங்கம் எம். பியின் பிரசங்கம் நல்ல நகைப்புக்கிடமளித்தது: கேலிச் சிரிப்பை புரிய முடியாத அவர் தன் வழக்கமான வழவழாப் பிரசங்கத்தை நிகழ்த்திக்கொண்டேயிருந்தார். மற்றும் சிலர் சமஷ்டியரசு ஏற்பட்டால் கொழும்பிலே தாங்கள் குடியிருக்க முடியுமாவென்று சந்தேகப் பட்டார்கள்.

திரு ஜி. ஜி. மொழிப் பிரச்னைபற்றித் தான் வெளியிட்ட கருத்து தனக்கெதிர்ப்பாக மாறிவிட்டதை உணர்ந்துபோலும் அதற்குச் சமாதானம் கூறுவதுடன் பேச்சை ஆரம்பித்தார். ஆங்கிலம் மேலும் நிலைக்க வேண்டுமென்று தான் முன் சொன்னதை மூடிமறைக்க அவர் முயன்றும் அது வெற்றி தரவில்லை. இடையிடையே அவர் தனது வழக்கமான பாய்ச்சல் வேலையைக் காட்டியபோது திரு அ. அமிர்தலிங்கம் பார்த்த பார்வை வெளியே நின்று வேடிக்கை பார்த்தவர்களைக் கூடச் சிந்திக்கச் செய்துவிட்டது. அந்தப் பேச்சு எத்தகைய முரண்பாடானதென்பதை அமிர்தலிங்கத்தின் முகம் பிரதிபலித்துக் காட்டியது. ஆனல் ஜி. ஜியின் வாயை நோக்கியவாறு ஆழ்ந்த சிந்தனையுடன் அமைச்சர் சர் கந்தையா வைத்தியநாதன் அமர்ந்திருந்தார். திரு பொன்னம்பலம் முன்வரிசையிலிருந்து கொண்டு மேசையிலடித்துக் கொண்டு அடிக்கடி எழுந்து உரக்கப் பேசினராயினும் அந்த நடிப்பு அவ்வளவு தூரம் கலைதட்டவில்லை.

மகாநாட்டு பேச்சுவார்த்தைகளின்போது பட்டம் துறக்கும் படலமொன்றும் குறுக்கிட்டது. கௌரவப் பட்டங்களைத் துறந்தாலென்னவென்று ஒருவர் ஆலோசனை கூறியபோது மற்றொரு கௌரவ பட்டதாரி மட்டும் உசாராக எழுந்து இப்போதே துறக்கட்டுமா என்று கேட்டார். அது அக் கௌரவப் பட்டங்களைப் பாதுகாக்கவென்றே அவதரித்த சிலருக்குச்சவால் விடுவதாயிருந்தது.

முதலைக் கண்ணீர்!



"தை பிறந்தால் வழிபிறக்கும்"

உங்கள் அதிர்ஷ்டம்?

18—1—1956 புதன்கிழமையன்று சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி இல. 22 முடிவடைகிறது.

ரொக்கப் பரிசு ரூ. 3000-00.

கிறிஸ்தோதய—தைப்பொங்கல் விசேஷ திட்டத்தின் கீழ் போட்டி இலக்கம் 21-22 இவைகளுக்கு வழங்கப்படுகிறது:

இதுவரை நீங்கள் உங்கள் கூப்பன்களை அனுப்பாவிட்டால் இன்றே அனுப்புங்கள்.

மானேஜர்,
சுதந்திரன்.

"வசிகன்"

முகப்பரு மருந்து

முகத்திலுண்டாகும் சிறு பருக்களையும், கருமை நிறத்தையும் மாற்றி முகத்திற்கு அழகையும், வசீகரத்தையும் தரும். முகத்தில் ஏற்படும் தழும்புகள், வேர்க்குருக்கட்டிகள் முதலிய முகஅழகைக் கெடுத்து விகார ரூபத்தை உண்டாக்கும் சர்வ பருக்களையும் போக்கி முகத்திற்கு நல்ல தேஜஸையும் பளபளப்பையும், காந்தியையும் கொடுக்கவல்ல மருந்து. விலை ரூ. 1-25. தபால் செலவு 50 சதம் தனி.

"ஸ்டீல் டிராப்ஸ்"

ரத்தகூனை ரோகம், அல்லது பாண்டு ரோகம், மறதி, கைகால் எரிச்சல், தலைச்சுற்றல், கிருகிருத்தல், புளியேப்பம், புளித்தண்ணீர் வாயாலெடுத்தல் உடல் பெருத்தல், வயிறு உப்புதல், வாய்கசப்பு, கண்மஞ்சளாகுதல், மஞ்சட் காமாலை, ஆயாசம், விக்கல், பித்தவெடிப்பு, பித்தஜுரம், மலச்சிக்கல், வாய்ப்புண் எனப்படும் பித்தரோகங்களை போக்கும்:
20 நாள் 40 வேளை மருந்து ரூ 3-25.
தபால் செலவு சதம் 50 தனி.

"ரேனே"

(மேக விரண களிம்பு)

அடிசதைவு, நீர்க்கட்டு, நரம்பு பிசக்கு, இரத்த தோஷம், பெரிய சிரங்குகளையும், சொறி சிரங்குகளையும் இது சுகப்படுத்தும். சகல விதமான புண்களுக்கும் இதோர் அனுபவமான மருந்து.
விலை ரூ. 1-25. தபால் செலவு சதம் 50 தனி:

"தேவி படை மருந்து"

திரேகத்தில் உண்டாகும் பன்னிரண்டு விதமான படைகளுக்கு மேலானது. படையினல் கஷ்டப்படுபவர்களுக்கு இந்த மருந்து ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் குணம் கொடுக்கவல்லது.
விலை ரூ. 1-25. தபால் செலவு சதம் 50 தனி:

நவலட்சுமி புத்தகசாலை,
136, செட்டியார் தெரு, கொழும்பு-

திருமண அழைப்பு

நிகழும் 19—1—56 வியாழக்கிழமை காலை 9-58 மணி முதல் 11-35 மணிக்குள் வரும் சுப வேளையில் எமது குமாரத்தி திருநிறைச் செல்வி புஷ்பலெக்ஷ்மிக்கும் பண்டாரவளை பூனகலை குரு பைச்சேர்ந்த திருநிறைச் செல்வன் பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர்களும், நண்பர்களும் குடும்ப சமேதராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பி. எஸ். முத்துகிருஷ்ணை
தம்பதிகள்.

பூமகள் இல்லம்,
டேல்வத்தை,
கம்பளை 14—1—56.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 22.

(கிறிஸ்தோதய தைப்பொங்கல் விசேஷ வெகுமதி திட்டத்தில் சேர்ந்தது)

ரொக்கப் பரிசு-ரூ 100.00

முதலாவது பரிசு ரூ. 600-00 | இரண்டாவது பரிசு ரூ. 300-00
அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00
முடிவு திகதி 18-1-56 பி. ப. 5 மணி போட்டியின் விதிகளை 20-11-55 சுதந்திரனில் பார்க்கவும்

இடமிருந்து வலம்

1: தை மாதம் முதலாம் நாள் தமிழ் மக்கள் பொங்கலிட்டு இவனை வணங்குவார்கள்.
6: கடலைக் கடக்க இது அவசியம்
8: உரல் இல்லாமல் இது இருந்து என்ன பயன்?
9: தனக்கு வாய்க்கும் மனைவி இவளைப்போல் இருக்க வேண்டுமென்று ஒவ்வொரு வாலிபனும் ஆசைப்படுகிறான்.
11: பிறரிடம் வேலை பார்ப்போர் தங்களுடைய இது எப்போது உயரும் என்று எதிர்பார்த்திருப்பார்கள்
10: மனைவி
11: குழலினிது யாழினிது என்பர்.....மக்கள் மழலைச் சொல் கேளாதவர்
12: பத்திரிகைகளைத் தனித் தமிழில் இப்படி வழங்குகிறார்கள்.
14: வலை விரித்து இரை பிடிக்கும் ஒரு பிராணி.
15: விஸா இது ஆகிவிட்ட இந்தியரை இலங்கை அரசாங்கம் வெளியேற்றி வருகிறது.
16: மயிர்க் கற்றை
17: சிலப்பதிகார ஆசிரியர்
18. இது நீண்டதாகவிருந்தால் வளைந்து கொடுக்கவே செய்யும்.
20: கையிலணியும் வளையல்

மேலிருந்து கீழ்

1: இது அதிகமானாலும் குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள்.
2: வெண்மையானது.
3: இது பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பர்.
4. விரோதம்
5. கபடமற்ற இதுடையவர்கள் எப்போதும் மலர்ச்சியோடு காணப்படுவார்கள்.
7: நான்கு கோணத்தையுடையது
8: இது அதிகம் கலந்துள்ள நெல்லுக்கு மதிப்பில்லை.
9: தூசி
10: சிவனை நோக்கித் தவஞ்செய்து அருச்சுனன் இதுபெற்றான் என்று பாரதம் கூறுகிறது:
12. கறுவாப்பட்டை
13. மிருகங்களில் இது மிகக் கூர்மதி நரி என்பது பிரசித்தம்
14. கல்வெட்டுகளை.....சாசனம் என்றும் சொல்வதுண்டு
15. காரணம் இல்லாமல் இது இல்லை.
16. நான்குவகை யாழ்களுள்.....யாழ் என்பதும் ஒன்று
17: ஒலி
19. "கு" சேர்ந்தால் பின்னர் என்று பொருள்படும்



பிரவேசக் கட்டணம் சதம் 50



இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூபா 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்.



பிரவேசக் கட்டணம் சதம் 50

பெயர்.....

விலாசம் .....

.....

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ..... சே.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 22,

த. பெ. இ. 1183, கொழும்பு-12

ஒரு கூப்பன் மட்டுமே நிரப்பியிருந்தாலும் இரண்டு கூப்பன்களும் அனுப்பப்படவேண்டும்.

நிலமெனும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்த்திக் காட்டுவதாக இருக்கிறது:

"காணின் நகும்" என்ற சொற்றொடர் கடுங்காட்டு நிலத்தையோ, கணவனற்ற பெண்ணையோ சுட்டிக் காட்டாமல், எதிரில் எளிதில் இருப்பவைகளையே சுட்டிக் காட்டி அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத மக்களைக்கண்டு நகைப்பதைப் புலப்படுத்துவது நமக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

நிலமகளையும், குலமகளையும் இன்பப் பொருளாக்கி ஆண் மகனை இன்பம் துய்ப்பவனாக இக்குறளில் உவமித்திருப்பது வள்ளுவரின் பேரறிவை விளக்குவதாகும்.

நல்லாளும், நன் நிலமுமிருந்தும் நல்வாழ்வு வாழாத நாணிலியைக்கண்டு மனைவி சிரிப்பாள், நிலம் சிரிக்கும் என்பதுமட்டுமல்ல; இந்த மாநிலமே சிரிக்கும் என்ற கருத்தும் இக்குறளில் அடங்கி இருக்கிறது. இதனை "நிலம் நகும்" என்பதாலறியலாம்.

பருவமங்கையர் பலரிருக்கும் ஊரில் விரும்பும் ஒருவரை மணந்து இல்வாழ்வு வாழவேண்டும் என்ற மணக்கவலையோ. மனக்கவலையோ இன்றி வீணில் திரிந்து வெறும் வாழ்வு வாழ்கின்ற இளைஞர்கள் சிலர் இருந்து கண்டால் அந்நல்லாள்கள் இவ்வாறே நகைப்பரி என்ற கருத்தும் இக்குறளில் இல்லாமலில்லை

பெண் மக்களின் நல்வாழ்வுக்கு ஆண் மக்கள் எவ்வளவு இன்றியமையாதவர்களோ, அந்த அளவுக்கு நிலங்களின் செழிப்பிற்கும் ஆண்மையுள்ள மக்கள் இன்றியமையாதவர்கள் என்பது இக்குறளால் பெறப்படும் உண்மையாகும்.

இருப்பாரை என்ற சொல்லுக்கு மாறாக இரப்பாரை என்ற சொல் அமைந்திருக்க வேண்டும் எனக் கருதுபவரும் உண்டு. அவ்வாறாயின், உழைத்துண்டுவாழ நிலமிருந்தும் இரந்துண்டுவாழ விரும்புவது இழிந்த செயல் என்பது பொருளாகும்.

நிலமென்னும் நல்லாள் முயற்சியுடைய ஆண் மகனுக்கு செல்வமனைத்தும் வழங்குவாள். நல்லாளாகிய இல்லாள் அன்புடைய கணவனுக்கு உள்ளதனைத்தும் வழங்குவாள் என்பது குறளின் திரண்ட கருத்தாகும்.

1986 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய வள்ளுவர் பெருமான் வாக்கிலிருந்து இன்றைய வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், தொழிலாதார அறிவை வளர்க்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும் தோன்றிய இக்குறளை இன்னும் ஒரு முறை படிக்கிறீர்களா? ஆம், படியுங்கள்.

"இலமென் றசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள்
நகும்"

நகைத்து விட்டுவிடும் இக்குறளைப்போல நீங்களும் இதனைப் படித்து விட்டு விடாமல் பயன்படுத்திக் கொள்வது நல்லது:

வாழட்டும் தமிழகம்!
வளரட்டும் உழவுத் தொழில்!
—"தனி அரசு"

கப்பல் புதையல்

பெர்மூடா கடலில் மூழ்கிய 16வது நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு ஸ்பானிய கப்பலை அமெரிக்க நீர் மூழ்குபவர் ஒருவர் கண்டுபிடித்து இருப்பதாகவும், அக்கப்பலில் கிடந்த ஒரு பெட்டியிலிருந்து தங்க, வெள்ளி நகைகளை வெளியே எடுத்து வந்திருப்பதாகவும் 'ஜெப்' சஞ்சிகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

உள்ளம் பொங்கியது

சகிதேவி தியாகராசா

'வசந்தி' என்று குதூகலமாக அழைத்துக் கொண்டு வந்தான் பாஸ்கரன். முன் அறையில் திருவாசகம் படித்துக் கொண்டிருந்த வசந்தி "என்ன மணிக்கே வந்து விட்டீர்களே" என்று கேட்டுக் கொண்டே திருவாசகத்தை மூடித் தூர வைத்து விட்டு எழுந்து நின்றாள். அவனது மலர்ந்த முகம் அவன் உடம்பு சுகமாகத்தான் இருக்கிறதென்பதைக் காட்டிக்கொண்டிருந்தது.

"இன்று அலுவலகத்தில் திடீரென்று ஒரு கவிதை தோன்றியது. அதை உனக்குப் படித்துக் காட்டிவிட வேண்டுமென்றுதான் இவ்வளவு விரைவாக ஓடிவந்தேன்" என்று கூறிக்கொண்டே சோபாவில் அமர்ந்தான் அவன்.

"நீங்கள் கவிதையைப் பார்த்து எழுதிய பத்திரிகை என்கைக்கு எட்டுமுன் காட்டிவிட வேண்டுமென வந்தீர்களாக்கும். எங்கே படியுங்கள் பார்க்கலாம்."

நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அவன் முன் தயாராக இருந்த வசந்தியின் மனதில் மாத்திரம் எதற்காக பாஸ்கரன் சீக்கிரமாக வந்திருக்கக் கூடும் என்ற கேள்வி மிதந்தது. வசந்தியின் கேலியைப் பொருட்படுத்தாமலே தன் சட்டைப் பைக்குள் கையை விட்டு எதையோ தேடினான் பாஸ்கரன். ஒரு பொட்டலத்தை வெளியே எடுத்து அவளிடம் நீட்டிக்கொண்டே "இந்தா நீயே படித்துப் பார்" என்றான்.

வசந்தி மிகவும் ஆவலாகப் பிரித்துப்பார்த்தாள். இனிமையாக மணம் வீசிக் கொண்டிருந்த ஒரு மல்லிகைச் சரம்தான் இருந்ததில்.

"உங்கள் பாமாலைதான் என்ன இனிமை! என்ன மணம். அப்படியே தேன் சொட்டுகிறது. சரி நான் இதற்கு எழுதி வைத்திருக்கும் விரிவான மதிப்புரையைக் கொண்டு வருகிறேன்." என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றாள்.

"கவிதையைப் படிக்கு முன்பே மதிப்புரையா? கவிஞனுக்கு ஏற்ற மனைவிதான்." அவள் என்ன கொண்டுவரப் போகிறாள் என்று உள்ளே எட்டிப் பார்த்தான் பாஸ்கரன்.

"கவிதை உள்ளத்தில் தோன்றுமுன்பே அது எனக்குத் தெரிந்துவிடுமல்லவா?" என்று குறும்பாகச் சிரித்துக் கொண்டு வசந்தி கொடுத்த இனிமையான குளிர்பானத்தை வாங்கிப் பருகினான். "சரி வசந்தி வேடிக்கை இருக்கட்டும். இன்று இரவு வண்டியிலேயே கொழும்புக்குச் செல்ல வேண்டும். தயாராக எல்லாவற்றையும் எடுத்துவை." என்றான். கொழும்பிற்கா? ஏன் ஏதாவது அவசர அலுவலா?" என்று பயத்துடனே கேட்டாள் வசந்தி.

"அப்படி ஒன்றுமில்லை. என் நண்பன் சங்கரன் குழந்தைக்கு முதலாவது பிறந்த நாள் கொண்டாட்டம் நாளை. மூக்கும் விழியுமாக அழகாக இருக்கிறான் என்பதால் கண்ணன் என்று நீதானே பெயர் கூட வைத்தாய். எங்கள் இருவரையும் கட்டாயம் வரவேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருக்கிறான். நாளை விடுமுறை பின்ஞாயிறு ஜம் என்று போய்விட்டு திங்கள் காலை வந்து விடலாம்."

வசந்தியின் உள்ளம் வாடியது. பவள மல்லிகை மலின் தன்மையை அறிந்தும் வேண்டுமென்ற அதைக் கையில் பறித்துக் கசக்குவது போல் இருந்தது அவன் செய்கை.

"நாளை பொங்கல் விடுமுறையல்லவா?" என்றாள். ஸ்டேஷனரத்தில் அமைதியாகச் செல்லும் ஆற்றை இடையில் தோன்றும் களிகள் கெடுத்துக் கொண்டிருக்கின்றன. அவர்களது அன்பான வாழ்வையும் பாஸ்கரனின் தெய்வ நிந்தனை இடை இடையே கலக்கிக்கொண்டிருந்தது. வசந்திக்கு சந்தோஷமோ துக்கமோ தன் வினையகருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். பாஸ்கரனுக்கோ கோவில்களே வீணாக இடத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் வேண்டாத கட்டிடங்கள் என்ற திடமான நம்பிக்கை.

"பொங்கல் விடுமுறைதான். இந்தப் பண்டிகைகள் வருவதால் இதுதான் ஒரு நன்மை. அவற்றின் பெயரால் விடுமுறைகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. நீ தயாராவதற்குக் குறைந்தது 5 மணித்தியாலமாவது பிடிக்கும் என்பதால்தான் 3 மணிக்கே வந்தேன்." மேலே அந்த விசயமாகப் பேசுவதற்கு எதுவும் இல்லை என்று கூறுவதைப் போல் பத்திரிகையை கையில் எடுத்தான். வசந்தி நம்பிக்கையைக் கையில் பிடித்துக் கொண்டே கூறினாள்.

"வருஷத்தில் ஒரு நாளல்லவா? நாம் விவாகம் செய்து முதற் பொங்கல். மங்களகரமான வீட்டில் பொங்க வேண்டாமா? மேலும் நாளை விக்னேஸ்வரர் கோவிலில் எங்கள் பூஜை அல்லவா? மறந்துவிட்டீர்களே? இந்த நேரத்தில் வீட்டைப் பூட்டிக் கொண்டு கொழும்பிற்குப் போவதா? அப்படியும் அவசரமானால் போகலாம். சங்கர அண்ணாவிடம் இன்னுமொரு முறை போனால் போகிறது."

பாஸ்கரனின் முகம் கோபத்தால் சிவந்தது. "என்ன எனக்குத் தெரியாமல் பூஜை கூட நடத்துகிறாயா? உனக்குத்தான் என் குணம் தெரியுமே. சொல் ஒன்று செய்கை ஒன்றாக இருப்பதை நான் விரும்புவதில்லை. சூரிய பகவான் ஒன்றும் நீ பொங்கவில்லை என்று நாளை உதிக்காமல் விடப்போவதில்லை உன் விநாயகரிலும் என் நண்பன் தான் எனக்கு உயர்ந்தி. 8 மணிக்குக் கிளம்பவேண்டும் அவ்வளவுதான்." குரியனின் காலை இளங்கதிர் உடம்பிற்கு இதமாக இருக்கிறது. ஆனால் நண்பகலில் வீசும் அனல் அவியிலாக உடம்பைப் பொசுக்கியே விடும். பாஸ்கரனின் கோபத்தை எதிர்த்து நிற்கும் சக்தி வசந்திக்கில்லை.

"சரி உங்கள் இஷ்டம். ஏதோ நல்ல நாளிலாவது. கடவுளை நினைக்கலாம்" "என்று தனக்குத்தானே கூறிக் கொண்டாள்.

புகை இரதம் விரைவாகச் சென்று கொண்டிருந்தது. ஆனை இறவுப் பாலத்திற்கு மேலாகச் செல்லும் வண்டியின் 'கட கட' சப்தத்திற்கு மேலாக வசந்தியின் நெஞ்சம் படபடத்தது. வெளியே பரந்திருந்த இருளைக் கிழித்துக்கொண்டு உதயமாகி இருந்தான் பிறைச்சந்திரன். அவள் உள்ளத்தில் பயம் படர்ந்திருந்தது. ஆனால் நம்பிக்கை என்ற சிறு ஒளிக் கீற்று மாத்திரம் அவள் இதயத்தின் ஒரு மூலையில் ஒளி வீசிக்கொண்டிருந்தது. எஜமானின் காலடியில் அவனுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்யத் தயங்காது சுருண்டு கிடக்கும் நாயைப் போல் ஒரு மூலையில் சாய்ந்திருந்தாள் வசந்தி.

பாஸ்கரனுக்கோ ஒரே உற்சாகம். வசந்தியின் மூட நம்பிக்கைகள் எவ்வளவு ஆதாரமற்றவை என்பதை அவன் ஒவ்வொரு கணமும் நிரூபித்துக் கொண்டிருக்கிறான். ஏன் நிரூபித்து நேரே காட்டிவிட்டான் என்றுகூட அவன் நினைத்தான் பாவம் அவளுக்கு இன்று தோல்விக்குமேல் தோல்வி. மென்மையான உள்ளம் படைத்தவள் வீணாக வருந்தவிடக் கூடாது எனபதற்காக அவளுடன் உற்சாகமாக உரையாட முனைந்தான் அவன்.

"வசந்தி, இந்த வண்டி யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் மற்றப் பாகங்களையும் தொடுத்துக் கொண்டிருக்கும் இந்தச் சிறுபாலத்தைத் தாண்டுவதற்கு இவ்வளவு கஷ்டப்படுகிறதே. அப்பப்பா என்ன சத்தம். என்னையும் உன்னையும் சேரவிடாமல் தடுத்துக்கொண்டிருந்த சமூகம் என்கிற ஆற்றை நாம் எவ்வளவு சுலபமாகத் தாண்டிவிட்டோம்."

அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. வசந்தியின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. பாஸ்கரனின் தியாகத்தை எண்ணும் பொழுதெலாம் அவளுக்குத் தன்னையறியாமலே மகிழ்ச்சியுண்டாகும்.

"இந்தக் கடகட வண்டியைப்போல் அல்லாமல் கை தேர்ந்த விஞ்ஞானி மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு சிருஷ்டித்த குளிர்மை நிறைந்த வண்டியல்லவா எங்கள் காதல் வண்டி. அற்ப செலவில் கட்டப்பட்டதா? உங்கள் தியாகம் என்கிற விலை மதிப்பில்லாத பொருளைச் செலவு செய்தல்லவா நீங்கள் அதைக் கட்டினீர்கள."

"சரிதான் போ. என்னிடம் வேண்டாது குவிந்திருக்கும் பணம் உன்னிடம் இல்லைதான். ஆனால் அழகு, அறிவு, உள்ளம் எல்லாவற்றிலும் நீ என்னைவிட எவ்வளவோ உயர்ந்தவள் என்றும் வசந்தி உன்னுடன் சர்வகலாசாலையில் பழகிய பொழுது நீ இவ்வளவு மூட நம்பிக்கை உள்ளவள் என்று மாத்திரம் நான் அறிந்திருக்கவில்லை."

"அறிந்திருந்தால் இவ்வளவு சிரமம் எடுத்து என்னை மணந்திருக்கமாட்டீர்கள் இல்லையா?" என்றாள் வசந்தி சிரித்துக்கொண்டே.

"அப்படி அல்ல. என் ஆர்வம் அதிகமாகி இருக்கும். என் நம்பிக்கைதான் உலகில் உயர்ந்த சக்தி இதை உணராது தெய்வம், பக்தி, பூஜை என்று நேரத்தை வீணே செலவு செய்து மனிதன் தன் அறியாமையை வெளிப்படுத்துகிறான். தன் நம்பிக்கை உள்ள மனிதனால் செய்ய முடியாதது எதுவுமே இல்லை" "இப்படி நான் மேடையில் கூறும்பொழுதெல்லாம் மாணவரின் கைதட்டலும் உற்சாகமும் கரைபுரண்டோடும். ஆனால் எனக்கு அப்பொழுது ஏற்பட்ட சந்தோஷத்திலும் பன்மடங்கு அதிகமான மகிழ்ச்சி இன்று உண்டாகிறது. என் கொள்கையின் முதல் எதிரி நீ. அதுவும் சாதாரண எதிரியல்ல. அழையாமல் வந்து நிற்கும் விருந்தாளிகளைக் கூடப் பெரு முயற்சி செய்தால் அனுப்பிவிடலாம். உன் நம்பிக்கையை மாத்திரம் அசைக்க முடியாது. உன்னை வென்றது உலகையே வென்றது போல் இருக்கிறது."

"வாரணம் பொருத மார்பும்" என்றெல்லாம் இராவணனின் வலிமையை அளவிற்கு அதிகமாகப் புகழ்கிறார் கம்பர். ஏன் தெரியுமா? இராமனின் வீரம் எத்தகைய தென்பதை காட்டுவதற்குத்தான். நீங்களும் இந்த யுக்தியைத்தானையாளுகிறீர்கள். மற்றவருடன் ஒப்பிடும்பொழுது என் தெய்வபக்தி எவ்வளவு குறைந்தது"

பாஸ்கரன் எழுந்து வெளியே பார்த்துக் கொண்டு நின்றான். எங்கும் ஒரே நிசப்தம். மரங்கள் பின்நோக்கி ஓடிக்கொண்டிருந்தன. "வசந்தியின் வீண் மடமையும் இனி எனக்கு முன் பின்வாங்கித்தான் ஓட வேண்டும். முன்னேற்றம் என்பது அவைக்கில்லை" என்று எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தான். ஆனால் வசந்தி ஒரே இடத்தில்தான் நின்று கொண்டிருக்கிறாள். அவள் தெய்வநம்பிக்கை அவன் பார்த்த மரங்களிலும் ஸ்திரமானவை. அவன் மனம்தான் வெற்றி, கொள்கை, என்ற இரண்டு கம்பிகளில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை அவன் அறியவில்லை.

திடீர் என்று ஒரு குலுக்கல் 'சட சட படீர்' என்று பல்வேறு சத்தங்களை ஒருங்கே கேட்டன. பாஸ்கரன் சாய்ந்து நின்ற கதவு 'படார்' என்று திறந்தது. அவன் சாய்ந்து கீழே விழுந்தான்.

"கடவுளே நீதான் சாப்பாற்ற வேணும்" என்று அலறிக்கொண்டே வெறி பிடித்தவள்போல் கீழே குதித்தாள் வசந்தி

பாஸ்கரன் தலையைத் தூக்கித் தன் மடிமேல் போட்டுக் கொண்டே அவன் முகத்தைப் பார்த்தபடி அப்படியே செயலற்று இருந்து விட்டாள்.

சிறிது நேரத்தில் கண் விழித்த பாஸ்கரன் முகத்தில் புன்சிரிப்பு மலர்ந்தது.

"எனக்கொன்றுமில்லை வசந்தி.....கீழே விழுந்த அதிர்ச்சிதான். காலில்தான் அடிபட்டிருக்கிறது போல் இருக்கிறது. வசந்தி நீதான் என்றும்; மனிதனிலும் மேம்பட்ட ஒரு சக்தி இருக்கிறதென்பதை இனியாவது நம்பாமல் இருக்கமுடியுமா? நானும் ஒரு பட்டுப் பூச்சிதான். என்னைச் சுற்றி என் கொள்கைகள் என்ற அறியாமைக் கூட்டைப் பின்னிக் கொண்டு இவ்வளவு நாளும் வீண் அவஸ்தைப்பட்டேன். நீதான் அந்தக் கூட்டைப் பிய்த்து இன்று என் கண்ணைத் திறந்துவிட்டாய்"

வசந்திக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. அந்த இடத்தைச் சுற்றி ஒரு முறை பார்த்தாள். இரண்டு மூன்று பெட்டிகள் பாதையைவிட்டு விலகிச் சாய்ந்திருந்தன. ஜனங்கள் கூச்சலிட்டுக்கொண்டே அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தனர்.

பாஸ்கரனுக்கு அபாயம் எதுவும் இல்லை என்ற சந்தோஷத்தில், "சரி இனி ஒரு காரை ஏற்படுத்திக் கொண்டு வீடு போகவேண்டியதுதான். வண்டி நீலதடுமாறியது நீங்கள் உங்களுக்காக ஏற்பட்ட தண்டனை என்கிறீர்கள். என்ன மூடத்தனம்"

இருளையும் பனியையும் கிழித்துக்கொண்டு வந்த காலை இருள் சூரியனுக்கு பாஸ்கரன் வீட்டில் அமோகமான விருந்து தயாராகிக் கொண்டிருந்தது. காலில் போட்டிருந்த கட்டையும் பொருட்படுத்தாமல் சிறு பிள்ளையைப்போல் ஓடியோடிப் பட்டாஸ் கொளுத்திக் கொண்டிருந்த பாஸ்கரனைக் கேலி செய்துகொண்டே பொங்கற் பானையை கிழறிக் கொண்டிருந்த வசந்தியின் உள்ளம் உவகையில் பொங்கியது.

மரணத்தின் வாயிலில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்நாள் முழுதும் ஒன்றுகச் செல்லும்" என்று காண்டேகர் எழுதிய பாட்டில் கூறிவிட்டார். அதில் கொஞ்சங்கூட உண்மை இருப்பதாக எனக்கு இப்போது படவில்லை. நானும் சுகுமாரும் புயலின் வீச்சில் ஒன்று சேர்க்கப்பட்ட இரண்டு படகுகள். மரண வாசலில் ஒன்றையொன்று காக்கக் கங்கணம் கட்டி நின்ற இரு தோணிகள். வாழ்வின் விசித்திரமான அலைகளின் மோதல் ஒன்றைக் கவிழ்த்துவிடாதிருக்க மற்றது தன்னை நோக்கியிருந்த அபாயத்தைச் சட்டை செய்யாது அருகில் நின்றது. ஆனால் அவைகள் வாழ்நாள் முழுதும் ஒன்றுகச் செல்லவா போகின்றன. வாழ்க்கையின் சலப் பரப்பில் எங்கள் இருவரின் துறை முகங்களும் ஒன்றிற்கொன்று எட்டாத தூரத்தில் இருக்கின்றன எனபது இப்போது தெரிகிறது. புயலின் தடுமாற்றத்தில் ஒன்றிற் கொன்று அருகில் வந்தோம். புயல் ஒய்ந்ததும் ஒன்று தன் துறைமுகத்தை நோக்கிச் செல்லுகிறது. தன்னுடன் எப்போதும் ஆதாரமாக அது பிரயாணம் செய்யவேண்டும்என்று எதிர்பார்க்க மற்றதற்கு என்ன உரிமையிருக்கிறது?

வாழ்க்கையில் எதுதான் நிரந்தரமானது? புகையிரதத்தில் பிரயாணஞ் செய்யும்போது நாம் எத்தனையோ பேரைச் சந்தித்து மனம்விட்டுப் பேசுகிறோம். அதில் ஒரு சிலர் எங்கள் மனதை ரொம்பக் கவர்ந்து விடுகிறார்கள். அடுத்த ஸ்டேசனில் அவர்கள் வண்டியை விட்டிறங்கும்போது எங்கள் மனம் கலங்கத்தான் செய்கிறது. அவர்கள் எங்களுடன் நிரந்தரமாக இருந்து விடவேண்டும் என்ற ஓர் நியாயமற்ற ஆவல் எழும்புகின்றது. அது சாதிய மாகுமா? அது போன்றதுதானே வாழ்க்கைப் பிரயாணமும்? யார் இறுதிவரை எங்களுடன் பிரயாணஞ் செய்கிறார்களோ அவர்களுடனதானே நாங்களும் போயாக வேண்டும்? இது எவ்வளவு விசித்திரமான உண்மை. இதை ஏற்றுக் கொள்ளத்தான் மனம் விரும்புகிறதா? அப்பிரயாணிகளை எங்களுக்கும் பிடித்தாலென்ன விட்டாலென்ன? ஒன்றுகச் செல்ல வேண்டும் அல்லது புகையிரதத்திலிருந்து இறங்கியாகவேண்டும். எனக்கு எந்த வழி காத்திருக்கிறது? வாழ்க்கைப் பிரயாண வண்டியிலிருந்து இறங்கவேண்டியதுதானு?

என் சித்தத்தையின் போக்கு எனக்கே விசித்திரமாக இருந்தது. வரண்ட நியாயப் பேச்சுக்கள் வாழ்க்கைக்கு அப்பால் பட்டவை. நிஜ வாழ்க்கைக்கு வெளியிலிருந்துகொண்டு வாழ்க்கையின் பிரச்னைகளைத் தீர்த்து விட முடியாது. கடமைகளும் தர்மங்களும் நிஜ வாழ்வில் சாத்தியமாகாது போனால் அவைகளைப்பற்றிப் பேசிப் பொழுதைப் போக்குவதில் பிரயோசனமே இல்லை. உபதேசங்களால் என்ன ஆகப்போகிறது. பொங்கி போகும் ஆற்று வெள்ளத்தில் ஓர் சிறு துரும்பின்மேல் இருக்கும் எறும்புகு எங்கே போகவேண்டும்; எப்படிப் போகவேண்டுமென்று உபதேசம் செய்வதில் என்ன பயன்? ஆற்று வெள்ளத்துடன் அதன் போக்கில் எறும்பும் போயாகவேண்டியதுதானே. எனினிலைமையும் அப்படித்தான் இருந்தது.

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ட்ரலில்:

"கோடீஸ்வரன்"

'கோடீஸ்வரன்' இத்தலைப்பட்டத்தைப் பெற வேண்டும் என்ற நப்பாசை—பேயாசையே இன்றைய உலகத்தின் கோளாறுகளுக்கெல்லாம் அச்சாணி—மூல வித்து. இந்த 'பெரும் பிரச்னை'யைக் கருவுலமாக்கிக் கொண்டு கதை பாக வளர்க்கப்போகிறார்கள், கோடீஸ்வரனின் அகங்காரம், அநியாயம், கோரமான வாழ்க்கை முறை இவைகளெல்லாம் திரைக்கு வரப்போகிறது என்று எண்ணிவிடாதீர்கள். இது ஒரு 'டூப்பா' 'கோடீஸ்வரன்' கதையில் வரும் கோடீஸ்வரனும் ஒரு 'டூப்பா'தான்.

'கோடீஸ்வரன்' ஒரு சமூகக் கதை. ஏற்கனவேயே பல தமிழ்ப் படங்களில் 'பட்டாபிஷேக' கருவுலமாகியிருந்த பழைய கதையமைப்புத்தான். வரதட்சணைக் கொடுமை இதை வட்டமிட்டு ஓடுகிறது படம்.

கமலா—அழகி, பருவ அழகி. பண்புள்ள இதயப் பாலழகி. ஆனால் 'செட்டாக' இருந்த அவளின் பெற்றோர் கெட்டு நொந்துபோய்விட்டார்கள், எட்டு 'பெட்டைக் குட்டிகள்' அவளை 'கரை சேர்க்க' வரன் தேடுபடலம். துட்டுக் காசுகூட வரதட்சணை இல்லை—ஒருவனும் 'எட்டிப் பார்க்கக்கூட' மறுக்கிறான் ஏன் 'எம். ஏ. டி. டாக்டர்கூட' மறுத்து விடுகிறார். ஒரே துயர்ப் புயல். கண்ணீரும் கம்பலையும் இறுதியில் ஒரு கிழத்திற்கு தாரைவார்த்துக் கொடுக்க தயாராகிறார்கள்.

இந்த நேரத்தில் கண்ணன் வருகிறான். சிறுபிராயத்திலே ஒன்றாய் ஓடியாடி விளையாடிய உள்ளங்கள். அவளை விவாகம் செய்வதாக அவன் வாக்களிக்கிறான். அவன் ராவ்பகதூரின் மகன். 'கறுப்பு வெள்ளை' மூலம் பணக்காரனானவர். ஒட்டியிருந்த குடும்பங்களை பணச் செருக்கு ஏற்கனவே வெட்டி தள்ளிவிட்டிருந்தது.

கமலாவின் தந்தை தனது பெருமகன் சந்தர் ஆலோசனைப்படி அவனுடன் வரன் கேட்க ராவ்பகதூர் வீட்டிற்குப் போகிறார். அவர் முப்பதாயிரம் ரூபா நன்கொடையாக—(ஆம் ஆம் அவர் சித்தாந்தப்படி வரதட்சணை சட்டவிரோதம்) கேட்கிறார் சந்தரின் மூலை செயல்படுகிறது வஞ்சக முறையை வஞ்சகத்தால் வெல்ல திட்டமிடுகிறான். ஆபிரிக்காவிலுள்ள தனமாமன தன் பெயருக்கு கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள ஆஸ்திகளை உயில் எழுதிவிட்டு இறந்து விட்டதாகவும், பணத்தை தானே தருவதாகவும் சொல்கிறான். "கோடீஸ்வர"னுக்கு ஏகதடபுடல் மரியாதை தன்மகள்லீலாவைடாக்டருக்குப்படிக்கும் அவனுக்கே "முடிச்சுப்போட" பகதூர் முடிவு கட்டிவிட்டார். ஆனால் அவர்கள் இதயங்கள் ஏற்கனவே "வசந்த காலத்தால்" மலர்ந்திருந்தன.

கமலாகண்ணன் திருமணம் அமர்க்களமாக நடந்து முடிந்துவிட்டது. ஆனால்? பகதூரின் பணத்தில் 30 ஆயிரத்தை அவர் மகன் மூலமே திருடி அவருக்கே "சீதனமாக" கொடுத்த சந்தரின் "சாகசம்" அம்பலமாகிறது. மகளையும்—அவன் கைப்பிடித்தவளையும் வெளியேற்றுகிறார். கமலாவின் தந்தையை காலால் உதைக்கிறார். தன் சித்தப்பாவுக்கு நேர்ந்த அவமானத்தை பொறுக்க முடியாத சந்தர் பகதூரை அவரின் காலடிக்கு கொண்டு வருவதாக சபதம் செய்கிறான்.

ஆத்திரம் தாங்காத பகதூர் தன் ஆஸ்தியெல்லாவற்றையும் விற்று வங்கியில் போடுகிறார். "நல்லவன்" என்றுநம்பவைத்த 'கோடீஸ்வரன்' மீண்டும் தன் நாடகத்தை ஆரம்பிக்கிறான். பகதூரின் மகளை மணம்முடிக்க வேண்டுமென்றால் 'அதுக்கிதுக்கு' என்று லட்சக் கணக்கில் பணம்தரச் சொல்லுகிறான். இந்த நேரத்தில் தந்தி வருகிறது. பணம் போட்டவங்கி முறிந்துவிட்டது. பகதூர் பதறுகிறார். பரதேசியாகிறார். அவரின் மகளை மணக்க முடியாது என்கிறான் கோடீஸ்வரன் "எம். ஏ. டி. டாக்டர்" வருகிறார். தான் மணப்பதாக கூறுகிறார். ஆனால் தந்தியைக் காட்டியதும் மறுக்கிறார். கடைசியில் "அபயமளிப்பது" போல் தானே மணப்பதாக கூறுகிறான் சந்தர். பகதூர் தன் தவறிற்கு, செல்வச் செருக்கில் திமிராடியதற்கு வருந்துகிறார். மனம்மாறுகிறார். மகளையும்—மருமகளையும், அவளின் தந்தையையும் அழைக்கிறார். இந்த "மனமாறல்" படலம் நடக்கும்போது தந்தி 'டூப்பா" என்கிறான் சந்தர். ஓரே மங்களம்—சுபமங்களம்.

கதை சீதனக் கொடுமையையும்—அதன் அரக்க வெறிக்கு இரையாகி தவிக்கும் எண்ணற்ற பெற்றோரின் நிலையையும் சித்தரிக்கிறது. பணம் மனிதக்குணத்தை புல்லரித்து மனித உறவுகளை உடைத்தெறிகிறது என்பதை துலாம்பரமாக்குகிறது. இந்த அளவுக்கு இதை நல்லெண்ணம் படைத்தோர் வரவேற்பார்கள்.

காட்சிகளின் அமைப்பும், கதையின் ஒட்டமும் நன்றாக இருக்கின்றன. "பொள்ளல்களை" புட்டுப் புட்டு குட்டுடைக்கும் "சுத்தல் வசனங்கள்" படம் பூராவும் நிறைந்து குலுங்க குலுங்க சிரிக்க வைக்கின்றன. நல்ல பாட்டுகளும்—நல்ல நடனங்களும் சேர்ந்து படத்தை ஜனரஞ்சிதமாக்கியுள்ளது "எம் ஏ டி. டாக்டரின்" பைத்திய கூத்தைத் தவிர அலுப்புத் தட்டக்கூடிய பகுதிகள் வேறில்லை என்று கூறலாம். தங்கவேலுவின் நடிப்பு பிரமாதமேதான். பத்மினி—ராகினி 'செட்டாக' நடித்துள்ளனர். தன் 'காட்டாறு' பாணியை கட்டுக்குள் கொண்டுவர சிறிது திணறுகிறார் சிவாஜி. ஸ்ரீராம் நடிப்பு கச்சிதமாக உள்ளது மொத்தத்தில் படம் 'வெற்றியை' கொண்டுவரும்.

ஆனால் கதையின் வளர்ச்சியையும் முடிவையும் ஏற்க முடியுமா? சமூகத்தின் ஒரு சாபத் தீட்டான சீதனக் கொடுமையை வைத்து பின்னப்பட்ட கதை அந்தப் பிரச்னையை யதார்த்த பாவத்துடன் அணுகாது 'டூப்பா' விட முயன்றிருப்பது துரதிருஷ்டமே ஒரு 'டூப்பா' கோடீஸ்வரனை சிருஷ்டித்து 'டூப்பா'க்களை ஒன்று ஒன்றாக உருவாக்கி இறுதியில் பகதூரை மனமாறவைக்கிறார்கள். கதை பிரச்னைக்கு 'டூப்பா' விட்டிருப்பது மட்டுமல்ல, மக்களுக்கும், தார்மீகக் கோட்பாடுகளுக்கும் கூட 'டூப்பா' விடுகிறது.

சீதன பிரச்னையை 'டூப்பா கோடீஸ்வரர்களை' உருவாக்கி அந்த 'கோடீஸ்வரர்'களின் டூப்பாக்கள்' மூலம் தீர்த்துவி—முடியுமா? பெற்றோர்களின் எதிர்ப்பையும், சமூகத்தின் மூர்க்கத்தனத்தையும் சமாளிக்கமுடியாது திண்டாடும்-முளைகயிற்றில் முடிவுறும் நூற்றுக்கணக்கான காதலர்கள் இப்படி 'கோடீஸ்வர' ரீதியான 'டூப்பா' விட்டால் வாழ்வில் வெற்றி பெற்று விடுவார்களா?

சமூகத்தின் கோணல் அமைப்பை மாற்றுவது 'டூப்பாக்கள்' மூல மல்ல. இடையறாத சமூகப் போராட்டத்தால்தான் என்பது ஸ்பஷ்டம்! இந்த நிலையில் சமூகப் பிரச்னைகளைத் தீர்க்க 'ஏமாற்று'க்களை கையாண்டு வெற்றி பெறுவதாக காட்டுவது. சமூக சீர்திருத்த இயக்கத்தின் தார்மீக கோட்பாட்டுக்கே கேவலம் தருகிறது.

சமூகப் பிரச்னைகளை மையமாக்கி 'சமூகப்படங்களை' தயார் செய்யும் போது சமூக யதார்த்தத்திற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். வெறும் கொலை முடிவுகளோ-சுபமங்கள முடிவுகளோ பகுத்தறிவுக்கு ஒத்தவையாகாது.

கதையளவிலுள்ள இந்த பலவீனத்தை தவிர 'கோடீஸ்வரன்' கோடிக்கணக்கான் ரசிகர்களை வசீகரிக்கும் தன்மை கொண்டது.

—ஞானு

இரு மணிகள் மறைவு

ஈழத் தமிழ் நாட்டில் தமிழுக்கும், தமிழ் இலக்கிய கலாச்சார மேம்பாட்டிற்கும், சைவத்திற்கும் பெருஞ் சேவை செய்த இரண்டு மணிகள் சமீபத்தில் மறைந்தது தமிழ் மக்களை பெருந் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவ்விரு பெரியார்களின் ஞாபகார்த்தத்திற்கு எமது வணக்கங்கள். அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தென்புலோலியூர் திரு முருகேசபிள்ளை நிறைந்த தமிழ் அறிஞர். பல அரும்பத உரைகளை எழுதியுள்ளார்; எண்ணரியவர்களுக்கு தமிழ் அறிவு ஊட்டியுள்ளார்; ஈழத் தமிழ் பழம் புலவர்வரிசையின் கடைசி மூச்சாக திகழ்ந்தவர். இவரது சேவைக்கு தமிழ் மக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பொன்னாடை போர்த்து கௌரவித்தனர்.

தேசத்திற்கும், சைவத்திற்குக் அருஞ்சேவை செய்தவர் திரு எஸ். சிவகுரு நாதன். பொது நலசேவையில் இவர் இடையறாது ஈடுபட்டுள்ளார். யாழ்ப்பாண சங்கம், இந்துக்கல்லூரி, இந்துக்கல்விச் சபை, இந்து மகளிர் கல்லூரி முதலிய பல ஸ்தாபனங்களில் நல்ல சேவை செய்துள்ளார்; யாழ்ப்பாண அர்பன் சபை உறுப்பினராகவும், தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இந்த இரண்டு மணிகளையும் ஈழத் தமிழகம் இழந்தது பெரும் நஷ்டமாகும்.

மரணத்தின் வாயிலில்.....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் சுகுமாரைக் காதலித்தேன். அவர் என் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைவிட்டு அவருடைய இடத்தில் வேறு ஒருவரை வைக்க என்னால் முடியாது. சதா அவருடைய நினைவாக-உருக்குலைந்த என் காதல் கோவிலின் எண்ணமாக — உருகி மடியவேண்டியதுதான். என்னுடைய வாழ்வு சிதைந்துவிட்டபடியால் நான் மற்றவர்களின் வாழ்வையும் சிதைக்கவேண்டும் என்பதில்லை. என்னுடைய மனக்குமுறலைக் கொட்டி மற்றவர்களின் மனதில் சலனம் உண்டாக்க நான் விரும்பவில்லை.

சுகுமார் வாழட்டும் சுலோசனாவும் வாழட்டும். அவர்கள் வாழ்வைக் கண்டு நான் மனம் புழுங்கப்போவதில்லை. இந்த முடிவுடன் என் முன்னால் இருந்த நிர்மலாவைப் பார்த்தேன். என் முகத்தில் எதைக் கண்டாளோ ஆனந்தத்துடன் என்னை அணைத்துக்கொண்டாள்.

கிறிஸ்தோதய-தைப்பொங்கல் விசேஷ வெகுமதிகள்

முதலாவது விஷேச வெகுமதி ரூ. 500

இரண்டாவது விஷேச வெகுமதி ரூ. 300

மூன்றாவது விஷேச வெகுமதி ரூ. 100

நாலாவது விஷேச வெகுமதி ரூ. 100

1955 டிசம்பரிலும், 1956 ஜனவரியிலும் முறையே வரும் கிறிஸ்தோதய-தைப்பொங்கல் விசேஷ தினங்களை உத்தேசித்து 'சுதந்திரன்" குறுக்கெழுத்துப் போட்டி 21ஐயும் 22ஐயும் இணைத்து (1) இரண்டிலும் சேர்ந்தாற்போல் முதற் பரிசும் (2) ஒன்றில் முதல் பரிசும், மற்றொன்றில் இரண்டாவது பரிசும் (3) இரண்டிலும் இரண்டாவது பரிசும் (4) இரண்டிலும் அதிகப்படியான கூப்பன்களனுப்பியதற்குரிய விசேஷ பரிசும், பெறும் நேயர்களுக்கு ரொக்கமாக ரூ 1000 விசேஷ வெகுமதியாக வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த விசேஷ வெகுமதிகளைத் தவிர ஒவ்வொரு போட்டிக்கும் வழக்கம்போல் ரொக்கப் பரிசுகள் உண்டு. விசேஷ வெகுமதிகள் சம்பந்தமான விவரம் பின்வருமாறு:—

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 21ம், 22ம் இலக்கங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு விசேஷ கிறிஸ்தோதய—தைப்பொங்கல் வெகுமதிகள் வழங்கப்படவிருக்கின்றன. இந்த விசேஷ வெகுமதிகளுக்கும் ஒவ்வொரு போட்டிக்கும் தனித் தனியாகக் கொடுக்கும் ரொக்கப் பரிசுகளுக்கும் சம்பந்தமில்லை. ஒவ்வொரு போட்டிக்கும் வழக்கம்போல் ரொக்கப் பரிசுகள் தனித்தனியாக வழங்கப்படும். ஆனால் 21-ம் போட்டியிலும், 22ம் போட்டியிலும் சேர்ந்தாற்போல் முதல் பரிசு பெறுபவருக்கு ரொக்கப் பரிசு ரூ 500 விசேஷ வெகுமதியாக வழங்கப்படும். இவ்விரு போட்டிகளிலும் சேர்ந்தாற்போல் முதற் பரிசு பெறுபவரின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டால் இந்தப் பரிசுத் தொகை அவர்களுக்கு ரொக்கமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்விரண்டு போட்டிகளில் ஒன்றில் முதலாவது பரிசும், மற்றொன்றில் 2வது பரிசும் பெறுபவருக்கு ரொக்கப் பரிசு ரூ. 300 விசேஷ வெகுமதியாக வழங்கப்படும். இவ்விதப் பரிசு பெறுபவர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டால் இந்தப் பரிசுத் தொகை அவர்களுக்கு ரொக்கமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்விரண்டு போட்டிகளிலும் சேர்ந்தாற்போல் இரண்டாவது பரிசு பெறுபவருக்கு ரொக்கம் ரூ. 100 பரிசு விசேஷமாக வழங்கப்படும். இவ்விதம் பரிசு பெறுபவரின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டால் இந்தப் பரிசுத் தொகை அவர்களுக்கு ரொக்கமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்விரு போட்டிகளிலும் சேர்ந்தாற்போல் அதிகப்படியான கூப்பன்களனுப்பியதற்குரிய பரிசைப் பெறுபவருக்கு ரூ. 100 விசேஷ வெகுமதியாக வழங்கப்படும்.

[இவ்விதம் அதிகப்படியான கூப்பன்களனுப்பியதற்குரிய பரிசை இரண்டிலும் சேர்ந்தாற்போல் பெறும் நேயர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டால் இந்தப் பரிசுத் தொகை அவர்களுக்கு ரொக்கமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.]

இரண்டு போட்டிகளிலும் ஒருவர் கலந்துகொள்ளும் போது ஒரே பெயரும் விலாசமும் கொடுக்க வேண்டும்; பெயரோ, விலாசமோ ஏதாவது ஒன்றில் மாறியிருந்தால் விசேஷ பரிசு கிடைக்காது.

கூப்பன்களுக்குரிய பிரவேசக் கட்டணங்களை ஒவ்வொரு போட்டிக்கும் தனித் தனியாக போஸ்டல் ஆர்டர் அல்லது வவுச்சர்மூலம் அனுப்பப்பட வேண்டும்.

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணறடிக்கும் ரசிகர் கூட்டத்திற்கு 'டிமிக்கி' கொடுப்பது எப்படி?

பிரபல நடிகை பிஞ்ராய் கூறும் சமயோசித வழி

நடிகைகள் ஒடி ஒளிகிறார்கள் அல்லவா? இதை இந்தி நடிகை பீஞ்ராய் கண்டிக்கிறாள்.

திரையில் தாங்கள் பார்க்கும் நடிகர்களை ரசிகர்கள் நேரில் பார்க்க ஆசைப்படுகிறார்கள். ஆனால் நடிகைகளோ ஒடி ஒளிகிறார்கள். அப்படித் தலைமறைவாகப் போவது தப்பு என்கிறாள் பீஞ்ராய்.

நடிகையே! ஒளியாதே:

பீஞ்ராயும் முதலில் ரசிகர்களைக் கண்டாள் பயப்படுவாளாம். ஆனால் அவளுடைய புருஷன பிரேம்நாத் [இந்தி நடிகர்] அவளைக் கண்டித்தார். 'ஏன் இப்படி பயந்து சாகிறாய்? தின்னவா போகிறார்கள்? அவர்கள் ஆசைபடுவது எல்லாம் உன் முகத்தைப் பார்க்கத் தானே' என்று பிரேம்நாத் கூறினார்.

அதிலிருந்து பீஞ்ராய்க்கு தைரியம் வந்துவிட்டது. ஒரு சமயம் பீஞ்ராய் கல்கத்தாவுக்கு போயிருந்தபோது சுமார் 500 ரசிகர்கள் அவளுடைய மோட்டார் காரை சூழ்ந்துகொண்டார்கள். கார் முன்பக்கம் போக முடியாமலும் பின்பக்கமும் போக முடியாமலும் நின்று விட்டது ரசிகர்கள் வழிவிட்டால்தானே போக முடியும்?

கும்பிடு போட்டாள் நடிகை!

அப்போது பீஞ்ராய்க்கு அவள் புருஷன் சொன்னது ஞாபகம் வந்தது உடனே அவள் காரிலிருந்து கீழே இறங்கி அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து இரு கைகளையும் தூக்கிக் கும்பிட்டு 'நமஸ்தே' என்றாள் அதைப் பார்த்த ரசிகர்கள் சாமி தேருக்கு வழிவிடுவது போல பீஞ்ராயின் காருக்கு வழிவிட்டார்கள்.

மற்றொரு சமயம், ஜபல்பூர் எனும் ஊரிலிருந்து பம்பாய்க்கு பீஞ்ராய் ரெயிலில் வந்துகொண்டிருந்தாள். வழியில் ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் மாணவர்கள் சிலர் கூடியிருந்தார்கள். ரெயில் வண்டியில் நடிகை இருப்பதைப்பற்றிக் கேள்விப்பட்ட அவர்கள் 'வெளியே வா' என்று கூச்சல் போட்டார்கள். உடனே பீஞ்ராய் வெளியே வந்து 'நமஸ்தே' என்று அந்த மாணவர்களைப் பார்த்துச் சொன்னாள்.

மாணவர்களுக்கு அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. 'நன்றி நன்றி' என்று சொல்லிவிட்டு அவர்கள் ஒவ்வொரு வராக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்கள்.

இந்த அனுபவங்களை பீஞ்ராய் எடுத்துச் சொல்லி 'ரசிகர்களைப் பார்த்து நடிகைகள் ஒளியக்கூடாது' என்று கூறினாள்

காதற் தற்கொலைகளைத்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது அடிபணிந்து வாழும் நம் அமைச்சர்கள்.-நிலை தளர்ந்து, எதிர்காலம் ஏமாற்றம் ஆகிவிட்டதே—ஆண்டவன் மேல்பழிசுமத்தி விசேஷ ஆராதனைகள் செய்து ஆண்டவனையும் ஏமாற்றப்பார்க்கிறார்கள். அதே ஏமாற்றம் தான் பெற்றோருக்கும் கிட்டும்.

மகேஸ்—மீரா அவர்களின் காதல் திடீரகத்தை அடிப்படையாகக் கொண்டு 'சுதந்திரன்' காதலர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கல்வி புகட்ட முன்வந்துள்ளான். அவன் முயற்சி வெற்றியளிக்கும்—மகேஸ்—மீரா அவர்கள் மறுமுறையும் அவதரித்து—திரும்பவும் உங்கள் காதலை தொடர்ந்து இவ்வுலகத்திலேயே இன்பத்தை அனுபவிப்பார்கள். அப்போ அவர்கள் காதலுக்கு எவ்வகையான எதிர்ப்பும்-பெற்றோர்கள் இடையிலும் சமூகத்தின் நடுவிலும் இருக்க 'சுதந்திரன்' விடமாட்டான். அவர்கள் ஆன்மா சாந்தியடைய.

சி. கந்தலிங்கம்,
மண்டைதீவு.

பூண்டுலோயா இ. ஜ. கா. தலைவர்கள் கூட்டம்

பூண்டுலோயா காங்கிரஸ் காரியாலயத்தில் பூண்டுலோயா பகுதியைச்சேர்ந்த இ. ஜ. கா. தோட்டக்கமிட்டி தலைவர்கள், காரியதரிசிகள், பொருளாளர்கள், டெலிகேட்களின் கூட்டம் நடைபெற்றது

கூட்டத்திற்கு ஜில்லாதலைவர் திரு எம். எஸ் செல்லசாமி தலைமை வகித்தார் திரு கே. குமாரவேல், ஜில்லாக்கமிட்டி காரியதர்சிகள் சி. எம் ஆர். ரெங்கையா, பி. நயினமலை, பொருளாளர் கே. வேலு, ஆகியோர் பேசினார்கள். கூட்டத்திற்கு சுமார் 2000 தொழிலாளர் கூட்டத்தில் கலந்துக்கொண்டார்கள். பல தோட்டக கமிட்டிகளின் சார்பாக திரு கே. குமாரவேல் அவர்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

மாணவர் மறுமலர்ச்சி மன்றம்

நீர்கொழும்பு மாணவர் மறுமலர்ச்சி மன்றத்தின் செயற்குழுக் கூட்டம், சமீபத்தில்குருணைமங்களரோடு "மங்கள இல்ல"த்தில், உதவி செயலாளர் எஸ். எம். சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது மன்றத்தின் முதல "விழா" வாழ்க "பொங்கல் விழா"வை இறந்த முறையில் நீர்கொழும்பு நகர மத்தியில், நடத்துவது என்று நிர்மானிக்கப்பட்டது.

தனித் தமிழ் நாட்டிற்கும் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் நோக்கமாகக் கொண்டு பூப் பூக்க முன் காய் பறிக்கத் துடிப்பார்கள். இவர்கள் போடும் காட்டுக் கூச்சலினுல் சிலுசிலுப்பு அதிகப்படுமே தவிர பலகாரம் கிடைக்காது.

சூரைப் பற்றையில் சீலையைப் போட்டால் சாவதானமாக எடுக்க வேண்டும் என்பார்கள் தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் அரசியல் ஆடையை சோஷலிசப் பற்றையாட்சித் திட்டம் என்ற பற்றையின்மீது விரித்து சிக்கிகொண்டார்கள். பற்றையோ சிங்களம் என்ற உணர்ச்சி முட்களை நீட்டிக் கொண்டிருக்கிறது தனி நாடு என்ற வீச்சோடு ஆடையை இழுத்தால் ஆடைக்குத்தான் நஷ்டம். குத்திக்கொண்டு நிற்கும் பல முட்களைச் சாவதானமாகக் கழற்றிய பின் கடைசி முள்ளிலிருந்து ஆடையை வேண்டும்போது 'விசுக்'கென்று இழுத்துக்கொள்ளலாம்.

இப்போதுள்ள நிலையில் தமிழ்ப் பேசும் மக்கள் தனியாட்சியைவிட சமஷ்டி ஆட்சி கோரி நிற்பதுதான் அரசியல் சாகஸமும், சந்தர்ப்ப விவேகமும் நிரம்பிய செயலாகும். அஃதெப்படியென்பதை அடுத்து வரும் ஆரும், ஏழாம், எட்டாம் காரணங்களை வருகிற வாரம் விளக்கும்போது விரிவாக எடுத்துச் சொல்வாம்.

அன்னரி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யார்களுக்குமே வருமானத்தைத் தந்து கொண்டிருக்கிறது. லொறிகள் மூலமாக வரும் பழங்கள் பகிரங்கமாக விற்கப்படுவதற்குப் பதில் பழவியாபாரிகள் முன்னும் உணவு விடுதிகளிலும் எப்படித்தான் போய்க்குவிகின்றனவோ தெரியாது விற்பனை வசதியிலாக்காலொறியே அவ்விடங்களுக்கு நேரிற் கொண்டுபோய் மொத்தமாய் நிறுத்துவிட்டு வருகின்றன வென்றால் லஞ்சப்பேயின் செயலை எண்ணித்தான் வருந்த வேண்டியிருக்கிறது.

அவ்வப்போது லொறி மூலம் இங்கு வரும் பழங்களில ஒரு பகுதியை மட்டும் நகரில் பொது மக்களின்முன விற்பனை செய்துவிட்டு மீதியை வியாபாரிகளிடம் அதிகாரிகள் மொத்தமாய் ஒப்படைத்து விடுகின்றனர். முதல் 14 தரமாக விற்க வேண்டிய அன்னசிப் பழம் அந்த வியாபாரிகள் மூலம் 20 சதத்துக்கு மேலும் விற்கப்படுகிறது இது மேலதிகாரிகளால் உடனடியாகக் கவனிக்கவேண்டிய ஒரு காரியமாகும்.

வெற்றிகரமான 2-வது வாரம்!

எல்பின்ஸ்டன் ருக்ஸி

காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30

சிவாஜி கணேசன், பி. பானுமதி

நடித்த

"கள்வனின் காதலி"

('கல்கி'யின் கதையிலிருந்து)

மகத்தான 3-வது மாதம்!

செல்லமஹால்

காலை 10-00, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30

குலேபகாவலி

கெயிட்டி

பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30

"சந்திரலேகா"

(புத்தம் புதிய கொப்பி)

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் தினசரி திரள்கிறார்கள்!

சென்டரல் இராணி போகம்பரை ஜோதி அலைஜா

கொழும்பு யாழ்ப்பாணம் கண்டி திருகோணமலை மட்டக்களப்பு

காலை 10, பிறபகல் 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும் | மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்

பிரமாதமான சிருஷ்டி! பார்ப்போரை வயிறு குலுங்க சிரிக்கவைக்கும் ஹாஸ்ய துணுக்குகளின் கோவை. பணச்செருக்குள்ள தந்தையாக தங்கவேலு அபாரமாக நடிக்கிறார். ஹாஸ்யச் சித்திரங்களுக்கே இப்படம் கிரீடம் வைத்துள்ளது.

'கோடீஸ்வரன்'

சிவாஜிகணேசன், பத்மினி,

எஸ்.பாலசந்தர், தங்கவேலு, ஸ்ரீராம், ராகினி

மற்றும் பல திறம்பட்ட நடிகர்கள் நடித்தது

டைரக்ஷன்: சுந்தர்ராவ் நட்கர்னி.

சங்கீதம்: எஸ். வெங்கட்ராமன்

தயாரிப்பாளர்கள்:

ஸ்ரீ கணேஷ் மூவிடோன்.

(எல்லாவித பாஸ்களும் சலுகைகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன)

செலிடரல் (நாவலப்பிட்டி) | செலிடரல் (பருத்தித்துறை) | ஸ்டார் (பதுளை)

பிற்பகல் 2-30 மணி, மாலை 6-00 மணி, இரவு 9-30 மணிக்கும் | மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்

ஜெமினி கணேசன் சாவித்திரி சகிதம் நடிக்க "மாயன் மகன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் கேட்கலாம்!

மாணவர்களாகிய உங்களுக்கு எத்தனையோ விஷயங்களுக்கு விடை தெரியாமலிருக்கலாம். நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு 'சுதந்திரன்' மாமாவினூல் இப் பகுதியில விடையளிக்கப்படும். ஆனூல் கேள்விகள் பெயர் விலாசத்துடன் போஸ்ட் கார்ட்டில் மட்டும் எழுதப்பட வேண்டும். 'வளர்மதி' சுதந்திரன் மாணவர் மன்றம், C/o சுதந்திரன், தபால் பெட்டி இல: 1183, கொழும்பு—12 என்ற விலாசத்திற்கு கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டும்.

செல்வன் கே. எஸ். ஆனந்தன்
கேள்வி:

இலங்கை அரசாங்கம் ரூபாய் நோட்டுக்களை எந்த ஆண்டில் வெளியிட்டது?

பதில்:

ரூபாய் நோட்டுக்கள் 1885-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்டன.

செல்வி கே. புஷ்பா
கேள்வி:

உலகத்திலே மிகவும் உயரமான கலங்கரை விளக்கம் எங்கே இருந்தது? அதன் உயரம் என்ன?

பதில்:

370 அடி உயரமான கலங்கரை விளக்கம் அலக்ஸாண்றியாவிலிருந்தது. இந்தக் கலங்கரை விளக்கம் 200 கி. பி யில் கட்டப்பட்டதாகவும், 1326 கி. பி.யில் அழிக்கப்பட்டதாகவும் செய்திகள் உண்டு.

செல்வன் ஏ. எச். பர்னண்டோ
கேள்வி:

உலகத்தின் பழங்கால அதிசயங்களில் இப்போதும் உள்ள அதிசயம் என்ன?

பதில்:

எகிப்தியதேசத்து பிரமிட் கல்லறைகள்தான் பழங்கால அதிசயங்களில் இன்றும் இருக்கின்றன 100,000 கூலியாட்கள் 20 வருஷங்களாக உழைத்து இக்கல்லறைகளைக் கட்டினராம். பிரதம பிரமிட் கல்லறையின் உயரம் 480 அடி.

செல்வி காந்தி நடராஜன்
கேள்வி:

நோபல் பரிசை இந்தியர்கள் யாராவது பெற்றிருக்கிறார்களா?

பதில்:

இருவர் இருக்கிறார்கள். சர் சி. வி. ராமன், ரவீந்திரநாத் தாகூர். சர். ராமன் விஞ்ஞானத்திலும், தாகூர் இலக்கியத்திலும் பரிசுபெற்றார்களே!

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்.

அன்பான மருமக்களே!

முதலில் உங்கள் அனைவருக்கும் மாமாவின் பொங்கல் வாழ்த்துக்கள் சர்க்கரை, பால், கற்கண்டு பழம் எல்லாம் சேர்த்து சுவையான பொங்கல் உங்கள் வீடுகளில் பொங்கியிருப்பீர்கள் தினமும் பொங்கற் புதுநாளாக இருக்கக்கூடாதா என்றும் சில மருமக்கள் எண்ணியிருப்பீர்கள் என்ன, நான் சொல்வது சரிதானே.....?

வளர்மதி'யில் வெளிவரும் விஷயங்களை மருமக்கள் மிகவும் அக்கறையோட வுன்றிப் படிக்கிறார்களென்பது, இவ்வாரம் மாமாவுக்குக் கிடைத்த ஏராளமான கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது சென்ற வாரம் மருமகள் பரமேஸ்வரி இளையதம்பி எழுதிய கட்டுரைய மட்டக்களப்பிலிருந்து ஒரு மருமகள் ரொம்பவும் பாராட்டி எழுதியிருக்கின்றார்

மருமக்கள் 'வளர்மதி'க்கு விஷயங்களை அனுப்புகிறபோது மையினால் காகிதத்தின் ஒரே பக்கத்தில் மட்டும் எழுத வேண்டுமென்பதை மீண்டும் ஞாபகமூட்ட விரும்புகிறேன். வெளியிடத்தகுதியான கட்டுரை, கதை முதலியவை கண்டிப்பாக 'வளர்மதி'யில் இடம்பெறும்!

அடுத்த வாரம் பாடசாலைகள் எல்லாமே விடுதலையின் பின்னர் திறக்கப்பட்டுவிடுமல்லவா? பாடசாலைகளுக்குச் சென்றதும் உங்கள் சிநேகிதர்கள், பிரியமான ஆசிரியைகள் எல்லோரையும் சந்திப்பீர்கள்.....ஒரே குதூகலமாக இருக்குமில்லையா? விடுதலையைக் கழித்த விதங்களைக் கதைகதையாகச் சொல்லுவீர்கள்! விடுதலையை எப்படிக் கழித்தீர்கள் என்பதை மாமாவும் அறிய வேண்டாமா என்ன?

மிக்க அன்புள்ள,
சுதந்திரன் மாமா

திருகோணமலையின் சிறப்பு

இன்று இலங்கையின் காவல் அரணாக விளங்குவது திருகோணமலையே. இது உலகிலுள்ள இயற்கை துறைமுகங்களில் ஒன்றாக விளங்கி இயற்கை அன்னைக்குப் புதுமையும் அழகும் அளிக்கின்றது. இயற்கை வளம் நிறைந்த திருகோணமலையையும் அதனை அடுத்து விளங்கும் கடலையும் ஒன்றாகப் பார்க்கும்போதும் பின்னணியுச்சியில் நின்று கொண்டு கருங்கடலையும் நீல வானையும் நோக்கும் போதும் நாம் மகிழ்ச்சியில் ஈடுபடாமல் இருக்க முடியாது

கீழ்மாகாணத்தில் அநேக இடங்களின் பெயர்கள் சிறந்த தமிழ்ப் பெயர்களாக இருப்பதால் திருகோணமலையிலும் தமிழரே முதலில் குடியேறி இருப்பர் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர் தமிழ் நாகரிகமும் பண்பாடும் பரவியிருந்த இந்நாட்டில் பண்டைய சைவக் கோயிலொன்று காணப்படுகின்றது.

கோணேசர் கல்வெட்டு நூலும் திருக்கோணாசல வைபவம் என்ற நூலும் இந்நகரைப் பற்றிய கருத்துக்களை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. கோணேசர் கல்வெட்டில் கூறப்படும்செய்தியின்படி பார்க்கப் போனால் இந்நகர் மிகமிகப் பழமை வாய்ந்ததாகவே கருதப்படும். திருகோணமலை என்ற பெயர் வந்த காரணத்தையிட்டும் பலர் பலமாதிரி கூறுகிறார்கள். சிலர் மூன்று மலை முக்கோண வடிவில் இருந்தபடியால் அப்பெயர் வந்ததென்றும் பலர் கோணேசர் வீற்றிருக்கும் மலையாதலால் அவருக்கு அடைமொழியாகத் திரு எனத் திரித்து கோணமலையாகிய தென்றும் கூறுவர்.

சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தே வாழ்ந்த கயபாகு மன்னன் கோணேசர் கோயிலைத் திருத்தியமைத்து ஒழுங்காகப் பூசை நடத்தவும் ஏற்பாடு செய்தான் என்று கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. எனவே இந்நகரம் மிகப் பழமை வாய்ந்தது என்பதை நிச்சயமாகக் கூறலாம்.

ஒரு காலத்தில் கண்டி ராசர்கள் [illegible] திருகோணமலையை [illegible] மாக்கினர். ஒல்லாந்தர் ஆங்கிலேயர் முதலியோர் இலங்கையைக் கைப்பற்ற வந்த சமயம் முதல் முதல் கால் வைத்தது திருகோணமலையிலேயே.

இன்றும் திருகோணமலை கடற்கரை படைத்தளமாக விளங்குகின்றது. அத்தோடு கொழும்புக்கு அடுத்தபடியாகச் சிறந்த துறைமுகமாகவும் கருதப்படுகின்றது. வெளிநாட்டு மக்களும் கண்டுகளிக்கின்றனர். இத்தகைய நிலைக்குக் காரணமான மலையையும், துறையையும், பருத்த நிலங்களையும் கொண்டு விளங்கும் திருகோணமலையை நாம் ஒவ்வொருவரும் கண்டுகளித்தல் அவசியம்.

—செல்வி ருகிலா அலி

'வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும் மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப்பத்திரங்களை 'வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால்பெட்டி இல 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும் அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல: 1

பெயர்.....வயது.....

பாடசாலை.....

விலாசம்.....

.....

....

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

பொங்குது பாலே!

எடுப்பு

பொங்குது பாலே—எங்கும்
தங்குது இன்பம்!

தொடுப்பு

உதய சூரியன் செயலாலே
உழைக்கும் உழவன் தயவாலே
நிதம்ஆ அளிக்கும் பயனூலே
நற்றமிழ் நாடெலாம் நயமாக (பொங்)

முடிப்பு

மங்கையர் சூழ்ந்து மயில்களா யாட
மகிழ்ச்சி மேலிட ஆடவர் பாட
அங்கைகள் கொட்டி இளஞ்சிறார் கூட
அனைவர் உள்ளமும் பொங்கலே நாட (பொங்)

செந்தமிழ் மக்கள் செழிப்பொடு வாழ
செகத்திற் செறிந்துள பகைஇருள் வீழ
எந்தையர் நாடு எழிலொடு விளங்க
எமக்குள் அன்பு இனிதே தழைக்க (பொங்)

—க. மயில்வாகனன்

அனைவரும் அறியவேண்டியவை:

பூமியின் அமைப்பும் அதன் பூர்வீக வரலாறும்

மூலம்: ஜி. சி. தோன்லி எம்: ஏ: தமிழில்: வெ. செ. குணம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஒரு வருடத்தில், ஒரு 1,166,832,000,000,000,000 நுண் பகுதிகளைப் பெறுகின்றோமென்று கருதப்படும். இந்த ஒவ்வொரு நுண் பகுதியும், ஒவ்வொரு மனிதனை இருக்குமையால், ஒரு வருடத்தில், எங்கள் உலகத்தைப்போன்று 500 உலகங்களில் வாழ்வதற்கு மனிதர்கள் இருப்பார்கள்!! ஒரு 'கிரும்' ரேடியத்தில் இரண்டரையாயிரம் கோடி, கோடி கோடி அணுக்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள்.

சிந்தனையையே சிதறடிக்கக்கூடிய கருத்துக்கள் இவையென்று திகைக்காதீர்கள்! பூமியினுள்ளிருந்து எடுக்கப்படும் பொருளின் தன்மையிதுவென்றால், பூமியைப்பற்றி அறியவும் வேண்டுமா? என்று நிலைகுலையாதீர்கள்! பொறுமையாகவிருங்கள்—மனிதனின் வாழ்விற்கு உபயோகமான பொருட்களுடன் மற்றும் அதிசயிக்கக்கூடிய உயிர்வகைகளும் உலகத்தில் வாழ்ந்திருக்கின்றன! அவைகளைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஆயிரமாயிரம் வருடங்களுக்குமுன் வாழ்ந்த எத்தனையோ, விசித்திர மிருகங்களின் எலும்புக் கூடுகள் இன்று ஆராய்ச்சியாளர்களாற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய எலும்புக் கூடுகளினுதவியால் அம்மிருகங்களின் தோற்றத்தை ஓரளவிற்குக் கற்பனைபண்ணிப் பார்க்க முடிகின்றதல்லவா?

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இப்படியான பயங்கர மிருகங்கள் வாழ்ந்திருக்கின்றன. அவை சுமார் 12 அடி உயரமும், 60 அடி நீளமும் உள்ளவையென்பதையறிய வியப்பாயிருக்கின்றதல்லவா?—பூமியில் வாழ்ந்த பூர்வீக சீவராசிகளின் தோற்றமும், உடலமைப்பும் இன்று வாழ்கின்ற மிருகங்களுக்கில்லையென்பதற்காக, அம்மிருகங்களைப்பற்றி அறிந்தவுடன் ஆச்சரியப்படுகின்றோம்!—ஆதியில் வாழ்ந்த மக்கள் வெளியுலகத்தைப்பற்றியறியவுமில்லை—அதற்குச் சிரத்தையெடுக்கவுமில்லை; தாம் வாழும் நாட்டைத்தான் 'உலகம்' என்று எண்ணினர்கள்.

ஆனால் 'விவிங்ஸ்ரோன்' போன்ற பெரியார்களின் உலகப் பிரயாணத்தால், எத்தனையோ புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன! இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடமெதுவென்றால், பூமியின் மேற்பாகத்தில் இன்னும் ஒருசில நாடுகள், மனிதனற் கண்டுபிடிக்கப்படாமலிருக்கின்றதென்பதையாகும். இதனை ஆராய்ச்சியாளரும் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். இவ்விடங்களுக்குப் போவதற்குக் காலநிலை ஏற்றதாகவில்லை!—இதனை, நேரிற் சென்று, அனுபவித்தவர் 'கப்டன் ஸ்கொட்' என்பவராகும் 1911ம் ஆண்டில் தென்துருவத்தை நோக்கிச் சென்றவர், காலநிலை ஏற்றதாகவில்லாததால் அவஸ்தைப்பட்டார்! எத்தனையோ நாடுகள் (மனித சஞ்சாரமற்ற) இருக்கின்றனவென்பதை அவருணர்ந்தார்! ஆகவே, புதிர் நிறைந்த பூமியைப்பற்றி அறிவது நமக்கு வேண்டியதொன்றல்லவா?

பூமியின் மேற்பாகத்தைத்தான் நமக்கு வேண்டிய உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கும், நாம் வாழ்வதற்கும் உபயோகிக்கின்றோம்; பூமியின் மேற்பாகம், மண்ணினூலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன! இதற்குக் கீழே செல்லச் செல்ல பல்வேறு விதமாக பூமியமைந்திருப்பதை நாம் அறிய முடியும்! மேற்பரப்பாகிய 'மண்ணி'லேதான் பலவிதமான அமைப்புகள் காணப்படுகின்றன. இப்பூமியில் வாழுகின்ற எத்தனையோ கோடி தாவரங்கள், தமது வாழ்வுக்காலம் முடிவடைந்ததும் அவைகள் இறந்துபோகின்றனவல்லவா?—அதைத்தான் நாம் 'மரம் பட்டுப் போய்விட்டது' என்றுவிளக்கக் கூறுகின்றோம்.

இப்படியான, இறந்த தாவரங்கள், நிலத்திற்கிடந்து ஈற்றில் அழிந்தொழிகின்றது. அப்பொழுது அவை மண்ணிலுள்ள நுண் கிருமிகளால் அறவே ஒழிக்கப்படுகின்றன! இவையாவும் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன; இல்லாவிடில் நாளடைவில், இப்பூமியில் மனிதர் வாழ்வதற்கு இடமில்லாமற் போய்விடும். இப்பூமியைப்பற்றி நாம் அறிந்ததுசொற்பமே! இன்னும் எத்தனையோ அதிசயிக்கக்கூடிய சம்பவங்களை, எதிர்காலத்திலாவது, மனிதகுலத்திற்கு எடுத்தோதுவதற்கு வேண்டிய வழிமுறைகளைக் கோலிவைப்பது இன்றுள்ள அறிஞர் கடனுகும். அப்பொழுதுதான் மனிதகுலம் இன்றிருப்பதிலும் பார்க்க உச்ச நிலையிலிருக்க முடியும்! இயற்கையின் இயல்பை ஆராய்ந்தறிவதே ஒரு புதிராகும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச்செய்திகள்:

மாணவப் பரம்பரைக்கு வழிகாட்டியாக திகழ்ந்தார்

ஓய்வு பெறும் ஆசிரியருக்குப்பாராட்டு

கலஹாவைச் சேர்ந்த தெல் தோட்டம் குரூப் பாடசாலையில் சென்ற 35 வருடங்களுக்கு மேலாக, தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி விட்டு ஓய்வு பெறும் ஆசிரியர் திரு ஏ. ஏ. ஆபிரஹாம் அவர்களுக்கும் அவரது பாரியாருக்கும் தெல் தேட்டம் குரூப் பழைய மாணவர் சங்கத்தினர் ஓர் பிரியாவிடை அளித்துக் கௌரவித்தனர்.

மேற்படி பிரிவுபசாரக் கூட்டத்திற்கு தெல்தோட்டம் குரூப் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு பி. கே. கிருஷ்ணசாமிப்பிள்ளை தலைமை வகித்தார்.

தலைவர் பேசுகையில் ஆசிரியர் திரு ஆபிரஹாம் தனது ஆசிரியத் தொழில் காலத்தில் எண்ணற்ற மாணவருக்குச் செய்த தன்னலமற்ற சேவைகாரணமாக, இன்று கலஹாப் பகுதியில் பலர் மிக நல்ல நிலைமையில் வாழ்ந்து வருகின்றனரென்றும் பொதுவான காரியங்களில் ஈடுபட்டு சமூக முன்னேற்றத்துக்கு உதவி புரிந்து வருகின்றனரென்றும், முதன் முதலாகக் கலஹாப் பகுதியில் தோட்டப் பாடசாலை பழைய மாணவர் சங்கமொன்றை நிறுவி மானவர்களுக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதன் மூலம், கல்வி நிலையை உயர்த்த முடியும் என இப்பகுதியிலிருக்கும் மற்றைய பாடசாலைகளுக்கு ஓர் முன்மாதிரியாக விளங்கினரென்றும் கூறி தொடர்ந்து திரு ஆபிரஹாம் அவர்கள் பழைய மாணவருக்கு அவ்வப்போது ஆலோசனைகள், புத்திமதிகள் தந்து வழி நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தோட்ட உத்தியோகஸ்தரான திரு கே. பி. முத்தையா பேசுகையில் ஆசிரியர் திரு ஆபிரஹாம் அவர்கள் தமது நற்குணம், நற்செய்கை, ஒழுக்கம், தெய்வ பக்தி ஆகிய நற்பண்புகள் மூலம் மாணவ மாணவிகட்கு ஓர் அரிய உதாரணமாக விளங்கினரென்றும் கூறினர்.

பின்னர், ஆசிரியர்கள் திரு ஏ. பி. முத்தையாபிள்ளை, திரு வீ. ஸீ. பாலசுந்தரம், திருவாளர்கள்: பி. எஸ். கருப்பையா, எம். சுந்தரம் ஆகியோர் பேசியபின், சங்கத்தின் அங்கத்தவர்களால் திரு ஆபிரஹாமுக்கு ஓர் பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டு பணமுடிப்பு ஒன்றும் வழங்கப்பட்டது.

திரு ஆபிரஹாம் மாணவருக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், மாணவருக்கு ஒழுக்கமே தலை சிறந்த செல்வமென்றும், ஒழுக்கமில்லாத கல்வியாற் பயனில்லையென்றும், எனவே மாணவர்கள் என்றென்றும் ஒழுக்கசீலராக விளங்க வேண்டுமென்பதே தனது வேண்டுகோள் என்று கூறினார்.

அதன் பின்னர் நடைபெற்ற தெல் தோட்டம் குரூப் பழைய மாணவர் சங்கத்தின் 12 வது வருடாந்தரக்கூட்டத்தில் கீழ்க்கண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

போஷகர்கள்: திருவாளர்கள் ஏ. ஏ. ஆபிரஹாம், கே. பி. முத்தையா, பி. ஏ. வீரப்பபிள்ளை, பி. எஸ். தேவராயபிள்ளை, பி. கே. பெரியண்ணபிள்ளை, தலைவர்: திரு பி. கே. கிருஷ்ணசாமிப்பிள்ளை, கூட்டுக்காரியதரிசிகள்: திருவாளர்கள்: என். எம். சுப்பையா, பி. எஸ். கருப்பையா, தஞ்சுதிகாரி: திரு பி. நாட்டுராயர், கணக்குப் பரிசோதகர்; திரு ஏ. பி. முத்தையாபிள்ளை 16 பேர் கொண்ட கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

மேற்பார்வையாளருக்கு பிரிவுபசாரம்

திருகோணமலைப் பகுதி ஜனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளராக இதுவரை கடமையாற்றி வந்த ஜனப் ஏ. ஏ. அப்துல் மஜீது அவர்களுக்குப் பிரிவுபசாரமளிக்கும் முகமாகத் திருகோணமலை நகராண்மைக் கழகத் தலைவர் திரு த. ஏகாம்பரம் தலைமையில் உப்புவெளி ஜமாலியா ஜனசமூக நிலையத்தில் ஓர் கூட்டம் நடைபெற்றது.

சைவத் தொண்டர் சபை

மயிலிட்டி தெற்கு சைவத் தொண்டர் சபையின் 15ம் ஆண்டு நிறைவு விழா ஞான வயிரவராலய மண்டபத்தில் சென்ற 30-12-55ல் பண்டிதர் திரு இ. நமசிவாயம் தலைமையில் தேவாரத்துடன் ஆரம்பமானது. காரியதரிசி வருடாந்த அறிக்கை வாசித்தார். "சமயப் பண்பாடும் இக்கால இளைஞரும்" என்னும் பொருள் பற்றி சிவத்திரு மு ஞானப்பிரகாசமும் "சைவமக்களே சிந்தியுங்கள்" என்னும் பொருள் பற்றி திரு ஆர். என். சிவப்பிரகாசமும் "தெய்வத் தமிழ்" என்னும் பொருள் பற்றி திரு எம். பாலசுந்தரமும் (வழக்கறிஞர்) சொற்பொழிவாற்றினர்கள்.

இ. தி. மு. க. முதலாவது மகாநாடு

இ. தி. மு. க. வின் முதலாவது மாநாட்டை விரைவில் நடத்திட பொதுக்குழு தீர்மானித்துள்ளதற்கேற்ப, மாநாட்டை அதிவிரைவில் நடத்துவதென்றும், இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அறிஞர் சி. என். அண்ணாதுரை. கலைஞர் மு. கருணாநிதி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோரை அழைப்பதென்றும் சமீபத்தில் கூடிய இ. தி. மு. க. செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

பின்னர் இ. தி. மு. க. முதல் மாநாட்டு வரவேற்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு கீழ்கண்டவர்களை மாநாட்டு நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டன;

வரவேற்புக் குழு தலைவர்: தோழர் சு. கா. சுந்தரராசன், இணைச்செயலாளர்கள்: தோழர்கள் அ. ம. அந்தோணிமுத்து, வி. நாகரத்தினம், பொருளாளர்கள்; தோழர்கள் ஜே. கே. கே. சுந்தரம், மு. க. இராசன் பா. ச. கீதம், விளம்பர அதிகாரிகள்: தோழர் எல். ஜேம்ஸ், டி. இராசன், தொண்டர்படை தளபதி: தோழர் ஜே. சோமசுந்தரம், உதவி தொண்டர் படை தளபதி: ஆர். ஆர். கே. டேலர்.

பாரதி தமிழ் வளர்ச்சிக் கழகம்

நாவலப்பிட்டி பாரதி தமிழ் வளர்ச்சிக் கழகத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாக தலைமை வகித்து இனிது நடத்தி தமிழ் மொழியைப் பேணி அரும்பாடுபட்டு வளர்த்த முன்னாள் தலைவர் திரு வீ. பத்மராஜாவுக்கு மேற்படி கழகத்தின் ஆதரவில் திரு கந்தசாமி தலைமையில் சமீபத்தில் ஒரு பிரிவுபசாரக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. மேலும்

அரசடி சனசமூக நிலையம்

அரசடி சனசமூக நிலைய ஆண்டு விழா சென்ற 25-12-55ல் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

சங்காணைக் கிராமசங்கத் தலைவர் திரு எஸ். கந்தசாமி தலைமைதாங்கி சங்காணைக் கிராமச்சங்க எல்லைக்குள்ள பதினைந்திற்கு மேற்பட்ட நிலையங்கள் உண்டெனினும் இதுபோல் ஆகக் வேலையில் பணியாற்றிய நிலையத்தைத்தானே காணவில்லை என்றுகூறினார். விழாவில் வேறு பலரும் பேசினார்கள்.

கி. மு. சங்க பிரதிநிதிகள் கூட்டம்

"கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்கள் யாவரும் தன்மான உணர்ச்சியின்றிச் சுயநல நோக்கோடு செயலாற்றி வந்தமையாற்தான் தமிழர்கள் இன்று இடர்ப்படவேண்டி நேரிட்டுள்ளது. எனவே தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களை மாத்திரமன்றி ஒவ்வொரு கிராமமுன்னேற்றச் சங்கமூலமும் பிரதிநிதிகளையழைத்து மொழிப் பிரச்னை மகாநாட்டைக் கூட்டவேண்டுமென மொழிப் பிரச்னை மகாநாட்டைக் கூட்டுபவர்களை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது" என்ற பிரேரணை சென்ற 25-12-55ல் சுதுமலை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் பத்துக் கிராமங்களின் கிராம முன்னேற்றச் சங்கங்களினதும் சனசமூக நிலையங்களினதும் பிரதிநிதிகளினால் கூட்டப்பட்ட கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

காரியதரிசிக்கு பிரிவுபசாரம்

காங்கேசன்துறை சரஸ்வதி வாசிகசாலையின் முன்னாள் தலைவரும் தற்போதைய காரியதரிசியுமான திரு வே. இராசரத்தினம் அவர்கள் உத்தியோகபூர்வமாக, இடம் மாற்றலாகிச் செல்வதையிட்டு வாசிகசாலையின்சார்பாக சென்ற 25-12-55ல் ஓர் பிரிவுபசாரம் நடைபெற்றது. ஈற்றில் அவற்றின் சேவையைப் பாராட்டி தலைவர் சி. நாகமுத்து, பொ. நடராசா, சி. கமலசிங்கம் அவர்களும் பேசினர்கள்.

பிரிவுபசாரத்துக்கு நன்றி தெரிவித்து வே. இராசரத்தினம் பேசினர். ஈற்றில் வாசிகசாலையின் காரியதரிசியாக திருவாளர் க. செல்லமாணிக்கம் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

கொட்டகலை இ. ஐ. கா. கூட்டம்

இ. ஐ. கா: கொட்டகலை. ஜில்லாக்கமிட்டியைசேர்ந்த தோட்டக்கமிட்டி தலைவர்கள், காரியதரிசிகள். பொருளாளர்கள், டெலிகேட்டுகள் ஆகியோர்களடங்கிய பொதுக்கூட்டமொன்று பத்தனை பாடசாலையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஜில்லாக்கமிட்டி தலைவர் திரு எம். எஸ். செல்லசாமி தலைமை வகித்தார். முன்னாள் ஜில்லாகமிட்டி தலைவர் திரு கே. குமாரவேல், தற்போது இ. ஐ. காங்கிரஸ், ஸ்தாபனத்தின் நிலைமை சமீபத்தில் ஏற்பட்டுள்ள முடிவு என்ன என்பதை பொதுக்கூட்டத்தில் விளக்கமாக எடுத்துரைத்தார்.

திரு கே. ராஜலிங்கம் அவர்களை கடந்த 17-12-55ல் கம்பளையில் நடைபெற்ற இ. ஐ. கா: கமிட்டியில் தெரிவு செய்யப்பட்டதைப் பற்றி கொட்டகலை ஜில்லாக்கமிட்டியைச் சேர்ந்த மக்கள் வரவேற்கின்றோம். என ஏகமனதாக கூட்டம் முடிவு

எலிக்ஸ்ரைன்

இரத்தசுத்திக்கும், இரத்த விருத்திக்கும், தசை வளர்ச்சிக்கும், இராஜ உறுப்புக்களுக்கு முறுக்கு ஏற்றுவதிலும் முதன்மைபெற்றது.

நிகரற்ற தேகவலிமை, புதிய இரத்த ஓட்டம், அபாரமான ஜீவசக்தி, ஆனந்தமயமான இன்பம் கொடுக்கவல்லது.

உடம்பு மெலிந்து சக்தியற்று வாடும் ஒவ்வொருவரும் எலிக்ஸ்ரைன் சாப்பிட்டால், சதை புஷ்டியுண்டாக்கி நரம்புகளுக்கு பலமும் முறுக்கேற்றி, எலும்புகளை வளர்த்து ஜீரணக் கருவிகள் உறுதிப் பெற்று, ஜீரண சக்தியும் தேகத்திற்குப் பலமும் வசீகரமும் ஊட்டி, வீரிய சக்தியைப் பெருக்கி யௌவனத்தைத் தரும்:

20 நாள் 40 வேளை மருந்து

விலை ரூ. 3-00. தபால் செலவு 50 தனி.

வாதரோகா

அடிக்கடி ஏற்படும் விரை வீக்கம், விரை ஏறி இறங்குதல், பீஜத்தில் அடிக்கடி ஜலம் சேர்ந்து பருத்துப்போதல், விரையால் பொறுக்க முடியாத குத்தல், குடைச்சல், குடலில் வாய்வு தங்கி குடுகுடுவென்று சப்தம் உண்டாகுதல், அடிக்கடி குடலில் வாய்வு சுழறுதல் முதலிய விரையைச் சார்ந்த எல்லா வியாதிகளுக்கும் நிச்சயம் குணம் கிடைக்கும்.

புட்டி ரூ. 3-25. தபால் செலவு சதம் 50

ஜீவா ஸ்டாமக் பவுடர்

வயிற்றிலுண்டாகும் வியாதியையும் வயிற்றிலேற்படும் புண்களையும் குணப்படுத்தி, வயிற்று வலியை நிறுத்திப் பசியையும் ஜீரண சக்தியையும் கொடுத்துப் புண்களை ஆற்றவல்லது. 20 நாள் 40 வேளை மருந்து விலை ரூ. 3-25-

தபால் செலவு சதம் 50 தனி.

இன்பன்

துர்ச்செய்கைகளாலும், வயது தளர்ந்ததாலும் ஏற்பட்ட ஜீவ நரம்புகளின் பலஹீனத்தைப் போக்கி ஆண்மையையும், புஷ்டியையும் கொடுக்கவல்ல அதிசய மருந்து. உள்ளுக்கு "எலிக்ஸ்ரைன்" சாப்பிட்டு இதை மேலே உபயோகிப்பது நல்லது;

புட்டி 1க்கு ரூ, 2-25. தபால் செலவு சதம் 50 தனி;

ஹிப்பிலினே

மேகப்படைகள், மேகரணம், மேக வாய்வு, மேக ஜுரம், கிரந்தி, கண்டமாலை, யோனிப்புற்று, லிங்கப்புற்று, சொறி, தேமல், சிறங்கு, குதிக்கால் வாதம், தடிப்புகள், உடம்பு ஊரல், குஷ்டரோகங்கள், ஸிதிரி சம்பந்தப்பட்ட சகல ரோகங்களையும் உத்திரவாதத்துடன் குணப்படுத்தும். ஆண்-பெண் இரு பாலாரும் சாப்பிடவல்லது. 20 வேளை மருந்து ரூ. 4-50. தபால் செலவு சதம் 50 தனி

பாலதி தைலம்

ஒற்றைத் தலைவலி, கண்ணெரிச்சல், மூளைக் கொதிப்பு, தலைமயிர் நரைத்தல், தலைமயிர் உதிர்தல், ஞாபகக் குறைவு, உஷ்ணக் கொதிப்பு, தலையில் உண்டாகும் பலவித மண்டை ரோகங்களைக் குணப்படுத்தி தலைமயிர் மிக மேனியுள்ளவையாகவும், அடர்ந்து அதிவிரைவில் வளரச் செய்யும். கண்ணிற்குக் குளிர்ச்சியையும், முகத்திற்கு வசீகரமும், மனத்திற்கு உல்லாசமும், தேகத்திற்கு காந்தியும் தரும்; இதைத் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யலாம்; டின் 1க்கு ரூ. 3-25. தபால் செலவு சதம் 50 தனி;

கா ச ா

(ஆஸ்த்மா நிவாரணி)

காசம், இருமல், ஈளை இருமல், ஆஸ்த்மா எனப்படும் கொடூர நோயையும், கோழை, கபக்கட்டு, கண்டசுவாசம், இளைப்பு, குரலடைப்பு, தொண்டைக்கம்மல், தொண்டைவலி, மார்துடிப்பு முதலிய வியாதிகளைக் குணப்படுத்தி, இரவில் தூக்கத்தை உண்டாக்கும். 20 நாள் 40 வேளை மருந்து ரூ. 3-25

தபால் செலவு சதம் 50 தனி.

பிமோனே

ஸ்திரிகளின் கர்ப்ப சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் கைகண்ட ஔஷதம்; மாதாமாதம் விலக்கு ஏற்படும் காலங்களில் உண்டாகும் வயிற்று வலியையும், இரத்தம் கட்டியாகவும், கருத்தும், படுதல், சூதகம் முழுவதும் வெளியாகாமலும், சிறிது உள்ளே தங்குதலும், குத்தல், கைகால் சோர்வு, இடுப்பு நோவு, வாந்தி, ஆயாசம், கர்ப்பசிதைவு, அஜீர்ணம், தலைவலி முதலிய வியாதிகளை சூரியனைக் கண்ட பனிபோல பறக்கச் செய்யும்;

விலை ரூ. 3-25. தபால் செலவு சதம் 50 தனி.

நில் பெயின் பாம்

ஜலதோஷம், தலைவலி, தலைபாரம், புறங்கழுத்து பிடிப்பு வேதனை, முழங்கால், முழங்கை வலி முதலியனவற்றிற்கும் மருந்து பூசி, சூடுவரும்படி கையால் தேய்க்க உடனே வலி முதலியன நீங்கும். இருமல் முதலிய கபநோய், சுவாச இழுப்பு, மந்தாரகாசம் முதலியவைகளுக்கு, தொண்டை, நெஞ்சு முதலிய இடங்களில் பூசிவர கபம் வெளிப்பட்டு நோய் தீரும்;

மேகவாய்வு, பாரிச வாய்வு, திமிர்வாதம், கைகால் நீட்டவும், மடக்கவும் முடியாமல் நரம்பு பிடித்தல் முதலியவைகளுக்கு உபயோகிக்க உடனே சுகப்படும்.

பல்வலி, பல்வீக்கம், மற்றும் பல இடங்களில் காணும் நோய்கள், பூரான், தேள், பாம்பு, வண்டு இவைகளின் விஷக்கடி, சரீரத்தில் உள்ள எல்லா வேதனை முதலியவைகளுக்கும் இது விசேஷமானது;

புட்டி 1க்கு ரூ. 1-00. தபால் செலவு சதம் 50 தனி.

நவலட்சுமி புத்தகசாலை, 136, செட்டியார் தெரு, கொழும்பு.

தபால் பெட்டி: 442. போன்: 5942.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார்
திரை ரசிகர்களுக்கு அளிக்கும்

சிறந்த பொங்கல் பரிசு

விஜயாவின்

குணசுந்தரி

நடிக பாத்திரங்கள்:

ஜெமினி கணேசன் - சாவித்திரி - நம்பியார்
முதலியோர்.

இத்தீவகத்தில் ஓடும் சிறந்த சித்திரம்!

இப்பொழுது ஏககாலத்தில் ஏழு திரைகளில்
காட்சி அளிக்கிறாள் அழகுசுந்தரி!

கிங்ஸ்லி — கொழும்பு
சபையர் — வெள்ளவத்தை
விஜயா — மட்டக்களப்பு
வெம்பிளி — கண்டி
வெலிங்டன் — யாழ்ப்பாணம் & திருகோணமலை
மோடர்ன் — பதுளை

இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 151, பிரதேசத்தில் வதிக்கும் எஸ். டி. இலாயகம் அவர்களால் சினோ நியூஸ் பேப்பரிஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு 1956 ஜனவரி 15-ந் திகதி பிரசுரஞ்செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org